# அருணன்

# අරුණන්

# Arunan

## வெ.அருணாகரன் மணிவிழா மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணன்

අරුණන්

Arunan

**வெள்ளக்குட்டி அருணாகரன்**
**மணிவிழா மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல்**
அருணன்
(வெள்ளக்குட்டி அருணாகரன் மணிவிழா மலர்)

**பதிப்பு**
2024 ஐப்பசி

**மலராசிரியர்**
திரு என்.பத்மானந்தன்

**அச்சு**
பரணீ அச்சகம்
நெல்லியடி
யாழ்ப்பாணம்

**பக்கம் - 105**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசியர் உள்ளத்திலிருந்து...

திரு.ந.பத்மானந்தன் MEd , SLPS1
அதிபர், ஆண்டிமுனை த.ம.வி.
உடப்பு.

"ஆசிரியர் பணியே அறப்பணி அதிலே உன்னை அர்ப்பணி" என்ற கூற்றுக்கிணங்க ஆசிரியர் தொழிலில் அர்ப்பணிப்போடு இன்றுவரையும் சேவையாற்றும் கல்வியியலாளர்களுள் முன்னோடியாகத் திகழ்ந்தவர் வி. அருணாகரன் ஐயா அவர்கள். இவரின் பணி நிறைவுக்கான மலரை மலராசிரியராக இருந்து வெளியிடுவதையிட்டு மகிழ்கின்றேன்.

நான் உடப்பு பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரியும் போது தான் இவரை சந்தித்தேன். பிறகு நான் இந்து சமய ஆசிரிய ஆலோசகராக வலயக் கல்விப் பணிமனைக்கு சென்றபோது இவருக்கும் எனக்கும் இடையிலான நட்பு மேலும் வளரத் தொடங்கியது. பின்னர் மீண்டும் உடப்பு பாடசாலைக்கு அதிபராக நான் பொறுப்பேற்ற பின்னர் அலுவலக நிமித்தம் தொடர்புகள் மூலம் மேலும் எங்கள் நட்பு வலுப்பெற்றது.

பாடசாலையில் நடைபெறும் பல்வேறு கலை நிகழ்வுகளுக்கும் குழுமேற்பார்வைகளுக்கும் அடிக்கடி வருகை தருவார். சிறந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துவார். எனது அன்பான வேண்டுகோளை ஏற்று கல்வி முதுமானிப் பட்டத்தையும் பெற்றார். எங்கள் நட்பின் அடிப்படையில் பல பயணங்களும் குடும்ப உறவுகளும் அதிகரித்துக் கொண்டது.

அத்துடன் கல்விமாணி கற்கை நெறியில் இணைப்பாளராக செயற்பட்ட போது வருகை தரு விரிவுரையாளராக என்னுடன் இணைந்து கடமை புரிந்தார். கல்வி மீதும், மாற்று சிந்தனை மீதும், புத்தளம் சமூகத்தின் மீதும் அவர் கொண்டிருந்த ஈடுபாடு என்னைக் கவர்ந்தது. ஆசிரியராய், ஆலோசகராய், விரிவுரையாளராய், பாட இணைப்பாளராய், நண்பராய் என்ற பன்முக ஆளுமை மிக்கவர். இவரது பண்பும், பணிவும், பிறர் நலம் பேணும் பக்குவமும், அயராத முயற்சியும் இன்னும் பற்பல திறன்கள் என்னை மட்டுமல்ல அனைவரையும் கவர்ந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

ஓய்வான வேளையிலும், தேய்வின்றி சேவை செய்வார். சிரித்த முகம், நல்ல மனம், எவரையும் பாராட்டும் பண்பு, எந்த நிகழ்வுகளுக்கு அழைத்தாலும் மறுக்காமல் தானே முதலாவதாக நேரத்துக்கு வருகை தரும் அன்புள்ளம் கொண்டவர். இந்தக் கல்வி ஆர்வலரை கௌரவித்து பாராட்டுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்க உம் பணி வளர்க உம் சேவை நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அருணகிரியின் அருணோதயம்
2. ஆசியுரை கிரியாகிரம சோதழ தேசமான்ய வாமதேவ சிவாச்சாரியார்
3. ஆசியுரை அருட்சகோதரி M.J.S. மலர் லூயிஸ்
4. ஆசியுரை அப்துல்லாஸ் மஹ்மூத் ஆலிம்
5. வாழ்த்துரைகள்
    1. திரு.A.H.M.அர்ஜுனா
    2. திரு ஆர்.எம்.ஐ.முஹமது அலி ஜின்னா
    3. திரு W.P.S.K.விஜேசிங்ஹ
    4. திரு எம்.ஏ.எம்.அனீஸ்
    5. திருமதி N.M.R. தீப்திபர்ணாந்து
    6. திருமதி சுஜீவிக்கா சந்திரசேகர
    7. திரு எம்.கமலேந்திரன்
    8. மோட்சன்
    9. இஸட்.ஏ.ஸன்ஹிர்
    10. Shivanantham Sritharan
    11. M.H.M.Nawas
    12. அ.பங்கையற்செல்வன்
    13. A.K.Naimullaa
    14. பனித சாந்த மரியாள் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்
    15. திரு எம்.எல் எம்.நிபாய்தீன்
    16. திரு வீ.இராமநாதன்
    17. திரு மு.சிவானந்தகுமாரன்
    18. பு/இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள்
    19. M.H.U.பரீதா முஸமில்
    20. K.B.Niyas
    21. M.H.Nasmun Rila
    22. ஹிதாயத்துல்லாஹ் அஸ்மல்
    23. திருமதி எம்.மேர்சி
    24. திரு கே.தொண்டமான்
    25. S.H.M.Razmi
    26. திரு எஸ்.சுப்ரமணியம்
    27. திருமதி வசந்த பூரணி இராமநாதன்
    28. திருமதி எஸ்.எஸ்.அஜந்தா
    29. P.M.F.Shafna
    30. கலைசெல்வி இராசகுமார்
    31. Miss A.Aadharsha Muri
    32. பு/கல்/தேத்தாப்பளை றோ.க.த.வி ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள்
    33. ஸ்ரீகிருஷ்ண ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்
    34. எஸ்.சுப்பிரமணியம்
    35. R.W.U.I.R.Clemend
    36. இராசையா இராஜகுமாரன்

வாழ்த்துப்பா
1. திரு திருமதி கயிலாயமூர்த்தி கலைச்செல்வி
2. திரு ஆர்.எஸ்.இம்மானுவேல் புஸ்பராசா
3. திருமதி ஏ.ஆர்.அதவியா
4. கவிஞர் கனகசூரியம் யோகானந்தன்
5. திருமதி S.B.S. மாஹிரா
6. அப்துல் அசீஸ் பாறிஸ் மொஹமட்
7. ஏ.லோகேஸ்வரி
8. திருமதி வதன.ஸ்ரீ கருணாகரன்
9. நஸ்ரா நிசாம்தீன்
10. G.P.Rosilda vass
11. எஸ்.இஸ்ஸதுல் அஸ்மியா
12. எம்.பி.எம்.பேகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருணகிரியின் அருணோதயம்

திருமதி A.R.M.A.வினோதினி,
பிரதி அதிபர்,
நாவக்காடு .றோ.க.த. வித்தியாலயம்.புத்தளம்.

அதிகாலை நேரம் பனி சிந்தும் வேளை, பூக்களின் பனித்துளிகள் படிந்திருக்கின்றன. பறவைகளின் இன்னிசை கீதம் இசைக்க ஆலயங்களில் மணியோசை கேட்க சூரியன் தன் செங்கதிர்களை பரப்பி கீழ்வானில் ஒளி வீச உதயமாகின்றான். இந்த காலைப்பொழுது ஒரு ஐப்பசி மாத விஜயதசமியாக மலர்கின்றது. அக்காலைப் பொழுதின் அங்கு ஓர் இல்லத்தில் முன் உறவினர்களின் நடவடிக்கைகள் பரபரப்பாக காணப்படுகின்றன. சூரிய ஒளி பாரெங்கும் பிரகாசிப்பது போல சூரியனின் வரவால் சிரிக்கும் மலர்களைப் போல அங்கு எல்லோரும் முகமும் மலர்ந்து பிரகாசிக்கின்றது. இந்த மகிழ்வுக்கு காரணம் என்னவாக இருக்கும் என்ற வினாவுக்கு விடை என்ன தெரியுமா?

மீன் பாடும் தேன் நாட்டின் துறைநீலாவணை என்ற மருத நிலத்தில் ஏரம்பு வெள்ளைகுட்டி மூத்ததம்பி இலட்சுமி தம்பதியினருக்கு நீண்ட காலத்தின் பின்னர் ஆயிரத்தி தொள்ளாயிரத்தி அறுபத்து நான்காம் ஆண்டு ஐப்பசி திங்கள் பன்னிரெண்டாம் திகதி அருணாகரன் என்று ஓர் அழகிய குழந்தை அவதரித்தது. இந்த பெயரின் அர்த்தம் சூரிய ஒளி என்பதாகும். விஜயதசமி அன்று பிறந்ததாலோ என்னவோ அவர் சிறு பராயம் முதலே கல்வி கற்பதில் ஆர்வம் உள்ள ஒரு குழந்தையாக வலம் வந்தார். இவருக்கு ஒரு செல்லப் பெயரும் இருந்தது அதுதான் "அருணகிரி"இப் பெயரானது கிழக்கு மண்ணில் இவருக்கு ஓர் அடையாளத்தைக் கொடுத்தது என்றால் மிகையாகாது. காரணம் அருணன் என்றால் "சூரியன்"என்றும் "கிரி" என்றால் மலை என்றும் பொருள். மலை போன்று உள்ளத்தில் உறுதியும் சூரியன் போன்று அறிவு உலகத்தின் ஒளியுமாக திகழ்கின்றார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவருடைய சகோதரி ஆசிரியை கலைச்செல்வி உடன் பிறந்தவராக இருந்தாலும் இவரின் சின்னம்மாவின் பிள்ளைகள் சிறு வயது முதலே இவர்களின் குடும்பத்தில் இரண்டறக் கலந்து காணப்பட்டதால் இவர்கள் அனைவரும் ஒரே குடும்ப உறுப்பினர்கள் போலவே செயல்பட்டமையானது குடும்பப் பாசத்தினை எடுத்தியம்புகிறது.

கல்வி

இவரது குடும்பம் ஒரு நடுத்தர விவசாய குடும்பமாக இருந்தது. இதனால் பல பொருளாதார நெருக்கடிகளும் இவரை பதம்பாக்கத் தான் செய்தன. இருப்பினும் அருணகிரியின் பெற்றோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறவில்லை. இவருடைய அப்பா அம்மா புராண இதிகாச சமய கதைகளில் மூழ்கி இருந்த ஒரு தம்பதி. தமக்குத் தெரிந்த கதைகளை தம் பிள்ளைகளுக்கு கூறி அவர்களுக்கு அப்போது கல்வியையும் இலக்கிய ரசனைகளையும் உள்ளத்தில் விதைக்க தவறவில்லை. அவரது தாய் தந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமான குணமும் அறிவித்தேடலும் பத்திரிகை மற்றும் புத்தகம் வாசிப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வம் பிள்ளைகள் மீது காட்டிய அன்பும் அத்துடன் கண்டிப்பும் இறை நம்பிக்கையையும் சேர்த்து இவரது வாழ்வில் ஒரு சிறப்பான கல்வி சூழலை ஏற்படுத்தியது. குடும்பத்தின் மூத்த புதல்வனும் அம்மாவின் செல்லப்பிள்ளையுமான இவர் இன்று வரை அனைத்து உறுப்பினர்களும் விரும்பப்படும் ஒரு பாச மகனாக மிளிருகின்றார்.

துறைநீலாவணை ஆரம்ப பாடசாலையான மெதடிஷ்த மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் இலவசக் கல்வியின் தந்தையான C W W கன்னங் கராவின் சிந்தனையில் விளைந்த முத்தான துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் தரம் ஆறு தொடக்கம் பத்து வரையில் கல்வி கற்று சாதாரண தரப்பரீட்சையில் சாதாரணமாக சித்தி அடைந்து, உயர்தரக் கல்வியை மருதமுனை அல்மனார் மத்திய மகா வித்தியால யத்தில் கலை பிரிவில் கற்று பல்கலைக்கழகத்திற்கு தெளிவான போதிலும் கல்வியை தன்னால் முன்னெடுத்து செல்வதற்குரிய பொருளாதார வசதிகள் இல்லாத காரணத்தினால் அவ் ஆசையை தன் மனதுக்குள்ளேயே புதைத்துக் கொண்டார். எது எவ்வாறு இருப்பினும் கடவுளின் திட்டம் என்று ஒன்று உண்டல்லவா? இவரை சமூகத்திற்குத் தேவையான ஓர் அச்சாணியாக இயங்க கடவுள் சித்தங் கொண்டார். உயர்தர அன்பு ஆசிரியரான மீரா மொகைதீன் அவர்கள் இவர் இல்லம் நாடி வந்து உயர்கல்வியின் முக்கியத்துவம் பற்றி இவரின் பெற்றோருடன் கதைத்து பல்கலைக்கழகம் சென்று படிக்க வழி வகுத்தார். இவ் ஆசிரியரின் வழிகாட்டலும் ஆலோசனையும் இவரது கல்விப் பயணத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

இவரது குடும்பத்திலேயே பல்கலைக்கழக அனுமதி பெற்ற முதல் மாணவரான அருணகிரியின் முதன்முறையான கிராமத்திலிருந்து ஓர் அழகான இளைஞன் கண்டி நோக்கி இலங்கையின் முதற்தர பல்கலைக்கழகமான பேராதனை பல்கலைக்கழகத்திற்கு **1983** ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் பயணமானார். இலங்கையில் இரத்த ஆறு ஓடிய **1993** ஆம் ஆண்டு கிழக்கிலிருந்து கண்டி செல்வது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத கடினமான காலத்தில் சிரேஷ்ட மாணவனான மதிவாணனின் பாதுகாப்பில் கண்டிக்குச் சென்று, கண்டி ரஜவத்தையில் பேராதனைப் பல்கலைக்கழக ஊழியர் குடியிருப்பு பகுதியில் தங்கி கல்வி கற்பதற்காக ஒரு சிங்கள குடும்பத்தில் தங்கும் இடத்தை ஏற்படுத்திக் கொண்டு கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டார். அங்கிருக்கும் காலங்களில் மொழி தொடர்பான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து திண்டாடியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இது இவரது வாழ்க்கையில் பல அனுபவங்களை பெறுவதற்கு வழி வகுத்தது என்று கூறினால் மிகையாகாது.

கல்வி கற்ற காலத்தின் கிராமத்திலிருந்தது சென்றதனால் சில அசௌகரியங்களை சந்தித்ததாக கூறினார். அதையும் தாண்டி தனது உயர்கல்வியில் அதிக சிரத்தை எடுத்து கற்று ஒரு இளங் கலைமாணி பட்டதாரியாக **1986** ஆம் ஆண்டு வெளியாகினார். தென்னி லங்கை இளைஞர் கிளர்ச்சியால் பல இன்னல்களை சந்தித்து பட்டமளிப்பு விழா நடைபெறாத பட்டதாரியாக பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது.

கடவுள் அருள் புரிந்தால் கூரையை பிய்த்துக்கொண்டு தருவார் என்று சிலர் கூறியுள்ளனர். இது இவரது விடயத்தில் உண்மையாகின்றது. பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் போதே தனது அம்மாவின் முயற்சியினால் ஆசிரியர் போட்டி பரீட்சைக்கு தோற்றி தனது **20** வது வயதில் **27.12.1984** அன்று ஆசிரியர் நியமனம் பெற்று **21** நாட்கள் கொண்ட ஆசிரியர் முன் சேவைப் பயிற்சியினை பொலனறுவை றோயல் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். அங்கு ஆசிரியர் மாணவர் உறவுகள், கற்பித்தல் யுக்திகள், கலை வெளிப்பாடுகள், விளையாட்டுக்கள், ஒழுக்க நெறிகள் என்பவற்றில் அதிக அனுபவப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. அதன் பின்னர் புத்தளம் மாவட்டத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட்ட சிலாபம் கல்வி மாவட்டத்திற்கு முதல் நியமனத்தை ஏற்பதற்காக முதல் பயணத்தை புத்தளம் மண்ணில் புதிய அனுபவங்களை காண கால்த்தடம் பதிக்கின்றார்.

முதல் கடமையுடன் சேவை

முதல் நியமன கடிதத்துடன் கரைத்தீவு முஸ்லிம் வித்தியாலயத்துக்கு தனது பாடசாலை நண்பன் கயிலாயமூர்த்தியுடன் ஓர் ஆசான் என்ற பதவியுடன் முதல் நியமனத்தை ஏற்றுக் கொள்கின்றார். அவ்வேளையில் மின்சாரம், நீர், போக்குவரத்து என்ப வற்றிற்கு பல சிரமங்கள் ஏற்பட்டதால் அதிபர்,ஆசிரியர்கள், ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் பாடசாலை விடுதியை தம் வாழ்விடமாக கொண்டு கரைத்தீவு மக்களில் ஒருவராக மாறிவிட்டார். அக்கால வேளை அடிப்படைச் சம்பளம் **645** ரூபாய் ஆகும். கிராமத்தவரான இவருக்கு கரைத்தீவு மக்களின் வாழ்க்கை முறையும் அன்பும் ஆதரவும் மிகவும் கவர்ந்து விட்டது. தனது முதல் அதிபராக திருவாளர் K.M.A.அஸீஸ் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பினால் தனது ஆசிரியர் கடமையையும் தனது பட்ட கல்வியையும் இடையூறின்றி தொடர முடிந்ததாக நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

அக்கால வேளையில் கரைத்தீவு பாடசாலைக்கு முதல் நியமனம் பெற்ற எட்டு ஆசிரியர்கள் கடமை ஏற்றி கிராமத்திலேயே இருந்து கல்வி நடவடிக்கைகளை மேற் கொண்டனர். இவர்களுடன் இணைந்து கற்பித்ததுடன் சீருடை திருத்தம். காலணி பாவனை, இலவச மாலை நேர கற்பித்தல் வகுப்புகள் என்பவத்தின் ஊடாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்தினார். அத்துடன் கல்வியின் அவசியத்தை ஊக்கப்படுத்துவதற்காக வீடுகளுக்கு சென்று பெற்றோர்களுடனான கலந்துரையாடல் களை மாலை வேளையில் மேற்கொண்டு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார். இங்குள்ள மாணவர்களின் கல்வி, கலை ஆர்வங்களையும் திறமைகளையும் கண்டு,அதனை வெளிக்கொணரும் வகையில் கலை விழாக்கள், நாடக நிகழ்வுகள், மாணவ மன்றம்,இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் இணைப்பாட விதானங்களிலும் தாங்களும் ஒரு பங்கு பற்றுனராக இணைந்து சிறப்பாக நடத்தி ஊக்கப்படுத்தினர். அதன் பின்னரான காலத்தில் பாடசாலைக்கு வந்த புதிய அதிபருக்கும் சமூகத்தினருக்கு ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களினால் மிகுந்த மன வேதனையுடன் இலவன்குளம் முஸ்லிம் பாடசாலைக்கு தனது புதிய பயணத்தை துணைவியாருடன் **1.7.1993** ஆம் ஆண்டு இடம் மாற்றம் பெற்று சென்றார்.

இல்லறம்

வாழ்வில் திருமண பந்தம் முக்கியமானது என்ற வகையில் இறை நாட்டத்தில் கலாசிஜோன் வைத்தியரின் மகளும் விஞ்ஞான பாட ஆசிரியருமான அன்சிலா மியூரியல் அதாவது மஞ்சுளா என்பவரை விரும்பி **21.10.1991** அன்று கரம் பிடித்து தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டு இல்லற வாழ்விற்கு நுழைகின்றார். திருமணமாகி **9** வருடங்கள் கழிந்து இந்தியாவின் சென்னை மாநகரை 2 வருட வாழ்விடமாக மாற்றிய பிறகு **14.06.2000** அன்று ஒரு அழகான பெண் குழந்தை பிறக்கிறது. அவருக்கு அம்மா அப்பாவின் பெயரில் உள்ள இரண்டு A எழுத்தை முதல் எழுத்தாகவும் தாயின் இறுதிப் பெயரையும் இணைத்து AADHARSHA MURI (ஆதர்ஷா மியுரி) என்ற நாமத்தைச் சூட்டி அன்பாக வளர்த்தெடுக்கிறார்கள். இக்குழந்தை இவரது வாழ்வில் கடவுள் நிகழ்த்தப்பட்ட மற்றும் ஒரு அற்புதமாகும். இயல்பாக கல்வியில் ஆர்வம் கொண்ட ஆதர்ஷா, பன்மொழிகளில் ஆளுமை கொண்டவராக காணப்படுகின்றார். தற்போது தனியார் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் கற்றுக்கொண்டு, தனியார் நிதியியல் நிறுவனத்தின் இளம் வயதில் சிரேஷ்ட அதிகாரியாக கடமை புரிந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாண்மைக்கு பலம்

அருணகிரி என்று அழைக்கப்பட்ட அருணகரன் ஐயா அவர்களின் உயர்மட்ட வாண்மை படிப்புகள் இல்லற வாழ்க்கையின் பின்னரே தொடர்கின்றன. பட்டப் பின் படிப்புக்களை தனது வாழ்க்கைத் துணைவியாரின் பல தியாகங்களினாலும் சகிப்புக்களி லும் விட்டுக்கொடுப்புக்களுடனும் கிடைக்கப்பெற்றதாக கூறுகின்றார். கல்விமுதுமாணி கற்கும் வேளையில் வாழ்க்கைத் துணைவியார் கல்விமாணி பட்டப்படிப்பை தொடர்ந்து கொண்டிருந்தார். கைக்குழந்தையான தனது அன்பு மகள் ஆதர்ஷாவை பொறுப்பாக கவனிக்கும் அன்புத் தாய், மகளின் அன்பிற்கு முன்னிடம் அளித்து தனது பட்ட படிப்பை தியாகம் செய்து தனது கணவரின் படிப்பை தொடர்வதற்கு வழிவகுத்தார்.இது கணவனின் உயர்வுக்கு உறுதுணையாக மனைவி உள்ளார் என்பதையும் அவர் வாழ்விலும் காணமுடிகின்றது. இவ்வாறு இருக்க **1996** ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்கின்றார். **1.11.1998** ஆண்டில் இவர் ஆசிரியர் ஆலோசராக பதவி உயர்த்தப்பட்டு புத்தளம் கல்வி வலயத்திற்கு இணைப்புச் செய்யப்படுகின்றார். அதன் பின்னர் வடமேல் மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களில் (அமரர் K.A. பாயிஸ் அவர்களின் முயற்சியினால்), தமிழ் மொழிப் பாடசாலை கல்வி அபிவிருத்திக்காக தமிழ் பிரிவு என்ற நிருவாக அலகு உருவாக்கப்பட்டது. அதில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு M.M.M ஜவாத் மரைக்கார் ஆசிரிய ஆலோசகர் திரு Z.A.சன்ஹீர் அவர்களுடன் தமிழ் பிரிவில் **1.6.2008** ஆம் ஆண்டு பாட இணைப்பாளர் (பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்) என்ற பதவியில் இணைப்பு செய்யப்பட்டார்.

### நட்பும் மாண்பும்

அக்காலகட்டத்தில் தற்போதைய ஆண்டிமுனை தேசிய பாடசாலையின் அதிபர் திரு.பத்மானந்தன் அவர்களுடைய நட்பினால் , அவர் வழங்கிய நல்ல ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பினால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முது கல்விமாணி(M Ed) பட்டப் படிப்பு தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இக்காலகட்டதில் பல நட்பு உள்ளங்கள் கிடைக்கப்பெற்றது. அவர்களுள் பேராசிரியர் கலாநிதி கலாமணி அவர்களின் கற்பித்தல் முறையும் அவருடைய அன்பும் இற்றளவு மறக்க முடியாதவை என்கின்றார்.

இவருடைய ஆசிரிய ஆலோசகர் செயற்பாடுகளின் சிறப்புக்களையும் ஆற்றல்களை யும் அறிந்த, புத்தளம் வாண்மை நிலைய முகாமையாளர் திரு.M.H.M.நவாஸ் அவர்களினால் தொலைக்கல்வி பகுதி நேர விரிவுரையாளராகவும் பல பாடநெறி வளவாளராகவும் கடமை புரிய வாய்பளித்தார். பின்னர் வடமேல் மாகாண முன் பிள்ளை விருத்தி டிப்ளோமா ஆசிரியர்களின் விரிவுரையாளராகவும் தேசிய கல்வி நிறுவனம், திறந்த பல்கலைக்கழக புத்தளம் கற்கை நிலையத்தில் கல்விமானி பட்டப்படிப்புக்கும் இன்னும் பல பாடநெறி களுக்கும் வருகை தரும் விரிவுரையாளராக தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். இவருடைய கற்பித்தல் பணியின் சிறப்பு ஆரம்பக் கல்வியில் ஆரம்பித்து பல்கலைக்கழக கற்பித்தல் வரை சென்றுள்ளதை குறிப்பிட முடியும்.

### பொழுதுபோக்கு

இவரது பொழுதுபோக்குகள் பற்றி வினா தொடுத்த போது தனது உள்நாட்டு வெளிநாட்டு நண்பர்களுடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகளை மேற்கொள்ளுவதுடன் அவர்களுள் கனடா கயிலாயன், வசந்தன் சுவிஸ் மோட்சன், துரை கரைத்தீவு சமீம் என்போர் நெருங்கிய தொடர்பாடலில் உள்ளதை அறியமுடிந்தது. அத்துடன் வானொலி கேட்டல், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாசிப்பதையும் சமூக ஊடகப் பயன்படுத்தலையும் வழக்கமாக்கிக் கொண்டுள்ளார். இளமைக் காலத்தில் தந்தையின் விவசாயத்துக்கு தனது ஒய்வு நேரத்தை செலவழித்து அவருக்கு ஒத்தாசை புரிந்துள்ளார்." கூடி வாழ்ந்தால் கோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை" என்பதற்கு இணங்க தனது குடும்பத்துடன் அண்ணன், தம்பி ,சகோதரிகள் உற்றார் உறவினர்களுடன் சிறிது நேரத்தை ஒதுக்கி அன்பைப் பகிர்ந்து குடும்பத்தின் பாசப் பிணைப்பில் இணைந்திருப்பதற்காக அதிக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வதை அறிய முடிந்தது. மட்டக்களப்பில் வாழ்ந்த காலத்தில் சாரண இயக்கம் இளைஞர் மன்றம், கரப்பந்தாட்ட அணி போன்றவற்றில் பங்கு பற்றியுள்ளார். மேலும் எழுத்து படைப்பை எடுத்து நோக்கும் போது வார பத்திரிகை, சஞ்சிகைகள், நினைவு மலர்கள், சமூக ஊடகங் களில் சில ஆக்கங் களை வழங்கியுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தில் கற்கை காலத்தில் நூலாக்க குழுவில் ஓர் உறுப்பினராகவும் இருந்துள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

தனது கடமைக்காலத்தில் புத்தளம் வலயக் கல்வி பணிமனையில் 26 வருடங்களாக கடமை புரிந்த சந்தர்ப்பத்தில், தனது பணியை சரியாக செய்ய பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய உயர் அதிகாரிகளுடன் நேர் நிலைத் தொடர்புகளுடன் பணியாற்றி அவர்கள் மனதிலும் இடம் பிடித்துள்ளார். அப்படிப்பட்டவர்களின் ஒருவர் இன்றும் அவரது மனதில் நிலைத்து நிற்கின்றார் என்பதை அறிய முடிந்தது. அவர் ஒரு நிறுவனத் தலைவராக இருந்து தனக்கு கீழ் உள்ள அலுவலர்களின் மீது அளவுகடந்த அன்பும் அக்கறையும் கொண்டவர். அத்துடன் கல்வி செயற்பாடுகளையும் மாணவர் சமூகத்தையும் பாடசாலை சமூகத்தையும் இனம் கண்டு செயல்பட்ட விதம் அவரை மனித நேயம் மிக்க மாமனிதர் என்பதற்கு முன் உதாரணமாக கொள்ள முடியும் என்று கூறுகின்றார். அவருடன் சாதாரண பணியாளராக கடமையின் நிமித்தம் பழகும் வாய்ப்பு கிடைத்து அவருடன் அறிமுகம் ஏற்பட்டதன் பின்னர் தன் மீதும் தன் குடும்பத்தின் மீதும் அதிக அக்கறை எடுத்து பல இன்னல்கள் நிறைந்த வேளையில் தனக்கு தேவையான வழிகாட்டலையும் ஆலோசனையும் வழங்கி ஆறுதல் அளித்து பக்கபலமாக இருந்துள்ளார். அலுவலகத்தில் பல பணிகளை அவரிடம் ஒப்படைத்து அதில் கடமையாற்ற வைத்து எப்போதும் ஊக்கப்படுத்துவதாக வும் கூறினார். அவர் ஒரு உறவினராகவும் நல்ல ஆசானாகவும் சிறந்த ஒரு அதிகாரியாகவும் இந்த நிமிடம் வரை பக்கபலமாக இருந்த அந்த உயர்ந்த உள்ளம் கொண்ட மனிதர் வேறு யாருமில்லை. அவர் அரச பணி நிறைவு பெற்ற புத்தளம் மற்றும் சிலாபம் வலயக் கல்வி பணிப்பாளர் பணிபுரிந்த W.P.S.K.விஜேயசிங்க அவர்கள் என்பதை கூறிய போது அவர் மேல் எனக்கும் மிகப்பெரிய மரியாதை வந்தது.

ஆக மொத்தத்தில் தேனாட்டில் உதயம் பெற்று புத்தளம் மண்ணில் காத்தடம் பதித்து, தான் கற்ற கல்வியினை இங்கு வாழும் சமூகத்துக்கு உவப்புடனே அளித்துக் கொண்டி ருக்கும் ஓர் ஆசானாக, ஆசிரிய ஆலோசகராக, பாட இணைப்பாளராக, ஒரு வளவாளராக, ஒரு விரிவுரையாளராக, ஒரு எழுத்தாளராக, நல்ல நண்பராக, பல் வகைமைப்பட்ட ஆளுமைத் திறமைகளைத் தன்னகத்தே வைத்து பெருமை என்பது சிறு துளி கூட இல்லாத "கற்றவனுக்கு சிறப்பு பணிவு"என்பதற்கிணங்க அனைவரும் மனதிலும் நீங்காத இடம் பிடித்திருக்கும் எம் அருணாகரன் ஐயா அவர்களின் பணி நிறைவுக்கு பாராட்டு நிகழ்வு நடாத்தவது சாலச்சிறந்தது ஆகும். எனினும் எம் கல்வி புலத்தினருக்கு அரச பணிரீதியாக அவரூடாகக் கிடைக்கப் பெற்று வந்த பல ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறாமல் போவது பாரிய இழப்பே, இது ஒரு வாழ்க்கை நியதி. எது எவ்வாறு இருப்பினும் இப்பணி நிறைவு காலத்தில் இறைவன் துணையுடன் பல்லாண்டு காலம் அனைத்து ஆசிகளும் பெற்று குடும்ப சகிதம் வளமாக வாழ, புத்தளம் கல்விப்புலத்தினருடனும் சமூகத்துடனும் இணைந்து, அருணோதயத்தின் "அ" தொடக்கம் "ன்" இடைப்பட்ட வாழ்க்கை நினைவு களை எழுத சந்தர்ப்பம் கிடைத்ததை ஒரு பாக்கியமாக கொண்டு நானும் வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

இந்து மத வழிபாட்டில் அனைத்து இந்துக்களாலும் போற்றப்படும் நவசக்தி வழிபாடாம் நவராத்திரி நன் நாளில், மீன்பாடும் தேன் நகராம் மட்டுநகர் துறைநீலாவணையில் 1964.10.12 வந்துதித்த, வெள்ளகுட்டி அருணாகரன் எனும் ஆசான்.

இவர் அரச பணியில் 40 வருட காலங்கள் பணியாற்றி வந்துள்ளார். இவருடைய சேவை காலங்களில் ஆரம்ப ஆசிரியராக 1984 முதல் கரைதீவு முஸ்லிம் மகா வித்தியாலத்தின் ஆசிரியராகவும், எலுவங்குளம் வித்தியாலத்தின் ஆசிரியராகவும் கடமை ஆற்றியுள்ளார். மேலும் ஆசிரிய ஆலோசகராகவும் பாட இணைப்பாளராகவும், 1998 முதல் 2024 வரை வலய கல்வி பணிமனையில தமிழ் கல்வி பிரிவு ஆரம்ப கல்வி பிரிவு போன்றவற்றில் பொறுப்பதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

நான் இவரை கடந்த 20 வருட காலமாக நன்கறிவேன். இவர் கல்வி துறையில் அலப்பறிய சேவையை செய்து வந்துள்ளார். அத்தோடு சமூக சேவைகளிலும் அர்ப்பணிப்புடன் சேவையை செய்யக்கூடியவர். ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக் கவேண்டும் என்பதற்கு இவர் ஓர் சிறந்த எடுத்துகாட்டாவார்.

மணிவிழா காணும் பெறுமதிப்பிற்கும் மரியாதைக்குரிய, அருணாகரன் ஆசிரியர் அவர்களின் சேவை மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்

கிரியாகிரம சோதி தேசமான்ய வாமதேவ சிவாச்சாரியார்
சிவஸ்ரீ வெங்கட சுந்தரராம குருக்கள் (சோதிடர்) புத்தளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு
அகில இலங்கை சமாதான நீதவான்
புத்தளம் மாவட்ட சர்வமத குழு சமத்தலைவர்
சிவில் பாதுகாப்பு குழு ஆலோசகர்
புத்தளம் மாவட்ட இந்துமத ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணி நிறைவு பாராட்டல் ஆசிச் செய்தி

இயற்கை கடல் வளமே.... அடங்காத அலையும்... மீன்பாடும் இசை கேட்கும்... இதம் தரும்.... குளிர்காற்று வீசும்..... மட்டு நகர் துறைநீலாவணையை பிறப்பிடமாக கொண்டு 1964.10.12 நாளில் இன்பம் பயக்கும் வாழ்வு அடைய இயற்கை சோலையில் உதித்தவரே "அருணாகரன்" ஐயம் தீர்க்கும் அன்பராய்...

ஒற்றுமைக்கு கண்ணியமானவராய்...
ஓடி உழைக்கும் உன்னதமானவராய்...
ஔவை வழி நின்றவராய்,...
அன்பின் ஆசானாய்...
தன் முதல் நியமனத்தை 1984.12.27 ஆம் நாள் தன தாக்கிக் கொண்டார்.
தன் இளம் வயதிலே...
ஆரவாரமில்லாத ஒரு இளைஞனாக இசைப்பட வாழ்ந்தவராய்...
ஈதலுக்கு இலக்கணமானவராய்
உடல், உளத்திற்கு, ஞானம் விடுபவராய்,
ஊக்கம் தரும் உள்ளத்தவராய்,
தன் வாழ்வை மேம்படுத்தி பயன்படுத்திக் கொண்டார்.
ஆசிரியர் பணி அறப்பணி மட்டுமல்ல.....
அறிவூட்டும் பணி....
ஆத்மார்த்தமான பணி....

இப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருடங்கள் பதினாறும் ஆசிரியராக சிறப்பான பணி புரிந்தவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மாணவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அவர்களுக்கு உதவி கரம் கொடுத்து அவர்களை ஒரு படி உயர்த்தி விடுவதில் கருத்தாக கொண்டு, பாட இணைப்பாளராக16 வருடங்கள் பணிபுரிந்த அந்தப் பெருமை எம் சமூகத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். பொன்னால் செய்தால்தான் உதவி என்று இல்லாமல் எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என்ற வகையில் அவர் பணி அமைந்திருந்ததை அவதானித்துள்ளேன். அவரது கல்வித்துறையில் கனிவும் கண்டிப்பும் இரு பக்கங்களாகவே அமைந்திருந்தன. காலம் தவறாமை, கற்றல் உத்திகள், மாணவர்களை அணுகுதலின் நேர்த்தி என்பவற்றை செம்மையாக நிறைவேற்றியவராவார். அவர் பணியாற்றிய ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர் பெருமக்கள், பெற்றோர்கள், சமுதாயத்துடன் நெருங்கிய உறவும் அவர்கள் வாழ்வு எல்லா வகையிலும் உயர வேண்டும் என்று நல்ல எண்ணம் கொண்ட இவர் பல சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டவராவார்.

கல்வித்துறையில் காலடி வைத்த எம் ஆசிரியர் தன் வாழ்வையும் ஒவ்வொரு கட்டங்களாக உயர்த்திக் கொண்டார். யாழ்ப்பாணம், புத்தளம் போன்ற பிரதேசங்களில் தம் வாழ்வை நிரந்தரமாக்கியதோடு மட்டுமல்லாமல், தனது கலைமாணிப் பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பட்ட பின் கல்வி டிப்ளோமாவை N I E, லும் கல்வி முதுமாணி யாழ் பல்கலைக்கழகத்திலும் பெற்று சாதனைகள் புரிந்து உள்ளதை காண்கின்றேன். சாதனைகள் அனைத்தும் மனதில் உள்ளுணர்விலே நிகழ்பவை. அறிவால் நிகழ்வதும் சாதனையை.

அது முயற்சியின் விளைவாகும். வெற்றி எனும் வேட்கை ஒருவருள் இருக்கும் வரை தோல்வி என்னும் தடைகள் எவர் கண்முன்னேயும் காணப்படுவதில்லை. என்பதன் சான்று எம் சகோதரர் வாழ்வாகும்.

கல்வித்துறையின் கரிசனையுடன் செயலாற்றிய இவரது குடும்ப வாழ்வும் சிறப்பானது."நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்" என்று குடும்ப விளக்கின் முன்னுரையில் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

இல்லது என் - இல்லவள் மாண்பானால் உள்ளது என்
இல்லவள் மாணாக்கடை

எனும் திருக்குறளின் உண்மைக்கேற்ப இவர் வாழ்க்கைத் துணைவியான அ.அன்சிலா விஞ்ஞான ஆசிரியை, இருவருமாக அமைத்துக் கொண்ட குடும்பத்தின் சிறப்பு போற்றுதற்குரியதே. இவர்கள் அன்பு உறவின் உதயமான மகள் அ. ஆதர்ஷா மியூரி மிகவும் கொடுத்து வைத்தவளே.

சிறப்பான பண்பான அறிமிக்க பெற்றோரின் அரவணைப்பில் வாழ்ந்திட இறை ஆசீர்.

என் கடன் பணி செய்து கிடப்பதுவே என்றார் - நாவுக்கரசர்.
வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்றார் -வள்ளலார்.

ஆசிரியர் பணியை அரைப்பணியாகச் செய்யாமல் அறப்பணியாக செய்தமைக்காக பாராட்டுதல் பொருத்தமானதே.

நல்லுள்ளம் கொண்ட இவர் இன்னும் அர்ப்பணிப்போடு சமுதாயத்துக்கு பணி செய்ய வாழ்த்துகின்றேன்.

இறைவன் துணை என்றும் உங்கள் பலமாகும்.
ஓய்வு காலம் வளமும் நலமும் கொடுத்து தாங்கள் இனிதே வாழ வாழ்த்துகின்றேன்.
வாழ்வாங்கு வாழவே, வாழ்க வளமுடன் வாழ்க நலமுடன்...
பணி ஓய்வல்ல....
இது பணி நிறைவென்பேன்.

அருட் சகோதரி.M.J.S.மலர் லுயிஸ்,
முதல்வர், திருச் சிலுவை சிறுவர் இல்லம்,மாரவில.
(முன்நாள் அதிபர்,சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம் புத்தளம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

*40* வருட அரச சேவையை பூர்த்தி செய்துவிட்டு பணி நிறைவு பெறும் திரு ஏ. அருனாகரன் அவர்கள் பற்றி இவ்வேளை வெளியிட முனைந்திடும் நூலிற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

முதுகலைமானிப்பட்டதாரியான இவர் இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து எப்போதும் புன்சிரிப்பும் இன்முகமும் கொண்டு எல்லோருடனும் பழகுபவர். பணி உடமை கொண்டவர்.

***27.12.1984*** இல் ஆசிரியர் நியமனம் பெற்ற இவர் பின்தங்கி இருந்த கரைத்தீவு மக்களின் அறிவுப்பசிக்கு ***14*** வருடங்கள் தீனி போட்டு அவர்களை வளர்த்தெடுப்பதில் தன்னை அர்ப்பணித்து வெற்றி கண்டவர்.

பின்னர் தனது சேவை கரைத்தீவைத் தாண்டி முழு புத்தளம் சமூகத்திற்கு சென்றடையவேண்டும் எனும் அவாவில் தனக்குக்கிடைத்த ஆசிரியர் ஆலோசகர் பதவியை ***1.11.1998*** முதல் பயன்படுத்தி பாடசாலைகள் தோறும் சென்று ஆசிரியர்களைப் பயிற்று விப்பதிலும் கருத்தரங்குகள் மூலம் அதிபர்களுக்கு வழிகாட்டுவதிலும் தனது பணியை செம்மையாகச் செய்தார்.

இன்னும் தனது சேவையை காத்திரமாகச் செய்வதற்கு தனக்குக் கிடைத்த ஆரம்பப்பிரிவு இணைப்பாளர் பதவியை *2008* முதல் மேற்கொண்டு புத்தளம் வலயப் பணியகத்தின் தமிழ்ப்பிரிவு மூலம் புத்தளம் கல்வி வளர்ச்சிக்கு புத்துயிர் ஊட்டினார்.

தனது 40 வருட அரச பதவியிலிருந்து ***11.10.2024*** ஆம் திகதியிருந்து பணி நிறைவு பெற்றிருந்த போதிலும் உலகம் உள்ளளவும் தனது நாமம் நினைவு கூறத்தக்க நூல் ஒன்றினையும் வெளியிட முனைந்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும்.

அரச சேவையிலிருந்து மட்டும் விடுகை பெறும் எனது மதிப்புக்குறிய திரு அருணாகரன் அவர்கள் மக்களுக்கான தனது கல்விச் சேவையை தொடர்ந்தும் முன்னெடுக்க எல்லாம் வல்ல ஏக இறைவன் என்றும் துணை நிற்பானாக.

வாழ்க உங்கள் சேவை!

அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம்
அதிபர், காஸிமிய்யா அரபுக் கல்லூரி,புத்தளம்.

சமதலைவர், சர்வ மத ஒன்றியம், புத்தளம் மாவட்டம்.
நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அகில இலங்கை உலமா சபை.

முன்னாள் தலைவர்,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, புத்தளம் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ජේ.එච්.එම්.අර්ජුන,
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
කලාප අධ්‍යාපන කාර්යාලය,
පුත්තලම


**සුභ විශ්‍රාම දිවියක් අරුණාකරන් මැතිතුමනි!**

පුත්තලම අධ්‍යාපන කලාපයේ දෙමළ මාධ්‍ය අංශයේ ප්‍රාථමික විෂයය සම්බන්ධිකාරකවරයා ලෙස කටයුතු කළ වී.අරුණාකරන් මහතාගේ විශ්‍රාම ගැනීම වෙනුවෙන් පණිවිඩයක් එකතු කරන්නට අවස්ථාවක් ලැබීම සතුටට කරුණකි.

1984.12.27 දින ප්‍රාථමික ගුරුවරයෙකු ලෙස පු/කරතිව් මුස්ලිම් විද්‍යාලයේ ගුරුවරයෙකු ලෙස රාජකාරියට වාර්තා කළ ඔහු 1998.11.01 දින සිට ගුරු උපදේශකවරයෙකු ලෙස උසස්වීම් ලැබීය.ඉන්පසු 2008.06.01 දින සිට දෙමළ මාධ්‍යය ප්‍රාථමික විෂයය සම්බන්ධීකරණ නිලධාරියා ලෙස පත් කළ ඔහු විශ්‍රාම යන තෙක්ම එම තනතුරේම රාජකාරි ඉටු කරන ලදී.

ගුරුවරුන්ගේ සහ විද්‍යාලපතිවරුන්ගේ ගෞරවය සහ විශ්වාසය දිනාගනිමින් පුත්තලම අධ්‍යාපන කලාපයේ දෙමළ මාධ්‍යය ප්‍රාථමික අංශය නඟා සිටුවීම සඳහා මහත් කැපවීමක් කළ ඔහු තමාට පැවරුණ රාජකාරිය සඳහා මහත් කැපවීමකින්ද අවංකව ද සිය රාජකාරිය ඉටු කළ රාජ්‍ය නිලධාරියෙකු ලෙස හැඳින්විය හැක.

අධ්‍යාපනපති උපාධිය ද හදාරමින් සිය වෘත්තිය දැනුම සංවර්ධනය කර ගැනීම සඳහා කටයුතු කළ ඔහු පරිපූර්ණ අධ්‍යාපනඥයෙකු වීම සඳහා අවශ්‍ය ප්‍රායෝගික හා න්‍යායාත්මික දැනුම වර්ධනය කර ගැනීම සඳහා මහත් වෙහෙසක් ගෙන කටයුතු කළ අයෙකි.ක්ෂේත්‍රයේ නවකයින් සඳහා ඔහු සැම විටම ආදර්ශයක්ම විය.

අවංකව හා නිහතමානීව කටයුතු කරමින් දෙමළ මාධ්‍ය ප්‍රාථමික අංශයේ උන්නතිය සඳහා කටයුතු කළ ඔහුගේ විශ්‍රාම ගැනීම නිසා ඇතිවන අඩුව පිරවීම සඳහා තව බොහෝ කාලයක් ගතවනු ඇති බව මගේ හැඟීමයි.

හොඳින් රාජකාරි කටයුතු කළ අරුණාකරන් මහතාට සුවදායක විශ්‍රාම දිවියක් ප්‍රාර්ථනා කරමි.

ජේ.එච්.එම්.අර්ජුන,
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
පුත්තලම



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிழ்ச்சிகரமான பணி நிறைவுக்குரிய அருணாகரன் அவர்களுக்கு

திரு A.H.M.அர்ஜுனே.
வலயக்கல்விப் பணிப்பாளர்.
புத்தளம்.

புத்தளம் கல்வி வலயத்தில் தமிழ் மொழிப் பிரிவு ஆரம்பக் கல்வி இணைப்பாளராக சேவை செய்த V. அருணாகரன் அவர்களின் அரச பணி நிறைவுக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**1984.12.27**ஆம் திகதி ஆரம்பக் கல்வி ஆசிரியராக புத்தளம் கரைத்தீவு முஸ்லிம் வித்தியாலயத்தில் இணைந்த அவர்கள் **1998.11.1.** முதல் ஆசிரியர் ஆலோசகராக பதவி உயர்வு பெற்றார். அதன் பிற்பாடு **2008.06.1.** ஆம் ஆம் திகதியிலிருந்து தமிழ் மொழி பாடசாலைகளின் ஆரம்ப கல்வி இணைப்பு அதிகாரியாக இணைக்கப்பட்டு அரச பணி நிறைவு பெறும் வரை அப்பதவியில் சேவை செய்தார்.

ஆசிரியர்களினதும் அதிபர்களினதுவும் கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றெடுத்து, புத்தளம் கல்வி வலயத்திலே தமிழ் மொழி, ஆரம்பக் கல்வி பிரிவு உயர்ச்சிக்கு மிகவும் தன்னை அர்ப்பணித்து, அவருக்கு வழங்கப்பட்ட சேவைகளை மிகவும் பொறுப்புடனும் நம்பிக்கையுடனும் சேவை செய்த அரச அதிகாரி என்பதைக் காண முடிகின்றது.

முதுகல்விமாணி பட்டத்தைப் பெற்று, அதன் வாண்மையுடன் கல்வி அபிவிருத்திக்காக சேவை செய்த பூரணமான கல்வியாளராவார்.

தேவையான பிரயோக தத்துவார்த்த அறிவு விருத்தியை தன்னகத்தே கொண்டு, அதை உச்ச அளவு பயன்படுத்தி பல முயற்சிகள் மேற்கொண்டு சேவை செய்தவராவார். துறை சார் விடயங்களில் புதிய முறையில் பயன்படுத்துவதில் முன்மாதிரியாளராக திகழ்ந்தார்.

நம்பிக்கையுடனும் பணிவுடனும் சேவை செய்ததன் மூலமாக தமிழ் மொழி ஆரம்ப கல்விப் பிரிவை உயர் மட்டத்துக்கு உயர்த்தியவர். அவருடைய பணி நிறைவு பெறுதலினால் ஏற்பட உள்ள வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்கு மிகக் கூடிய காலம் எடுக்கும் என்பதை நான் உணருகின்றேன்.

மிகவும் திருப்தி கரமான அரச சேவை செய்த அருணகரனின் எதிர்காலம் ஆரோக்கியமானதாகட்டும். அவரது சிறப்பான பணிக்கு வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

ஆர்.எம்.ஐ. முஹம்மது அலி ஜின்னா.
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்விப் பணிமனை, மாகோ

புத்தளம், கல்விப் பணிமனையின் பாட இணைப்பாளர் ஆசிரியர் திரு.வெள்ளக் குட்டி அருனாகரன் அவர்களின் பணி ஓய்வுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். திரு.வெள்ளக்குட்டி அருணாகரன் அவர்கள் கடந்த 40 ஆண்டுகாலமாக கல்வித்துறையில் பணியாற்றி அரசு பணியிலிருந்து கட்டாய ஓய்வு பெறுகிறார். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.வெள்ளக்குட்டி அருனாகரன் அவர்கள் என்னுடன் புத்தளம், கல்விப் பணி மனையின் ஒன்றாக பணியாற்றியவர். மிகவும் அமைதியாக இருப்பார். கல்விப் பணிமனை யில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளிலும் நிகழ்ச்சிகளிலும் கலந்துக்கொள்வார். இவர் 14 ஆண்டுகள் ஆசிரியராகவும் 10 ஆண்டுகள் ஆசிரிய ஆலோசகராகவும் 16 ஆண்டுகள் பாட இணைப்பாளராகவும் பணியாற்றி இருக்கிறார். தொடக்காலத்திலேயே அவருடைய ஆழ்மனதில் கல்வி துறையில் நாம் சாதித்து காட்டவேண்டும் என்ற விவேக எண்ணம் வேரூன்றி இருந்துள்ளது. அதனால்தான் அவர் ஆசிரியர் பணிகாலத்திலேயே தன்னுடைய இளங்கலை பட்டப்படிப்பை முடித்து, முதுகலைப் பட்டப்படிப்பையும் நிறைவு செய்தார். இது மிகப்பெரிய சாதனையாகும். அவருடைய அந்த உயரிய முயற்சிக்கும் எண்ணத் திற்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய கல்விதுறையின் நீண்ட நெடிய பயணத்தில் அவர் அதிகமான மாணவர்களை மிகச்சிறந்த போதனைகள் மூலம் உயர்நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறார். அதோடு மட்டுமல்ல தன்னுடன் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு முன் உதாரணமாகவும் இருந்திருக்கிறார். மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் பயனான வாழ்க்கையில் வாழ்ந்து பிறரையும் பயன்மிகுவழிக்குக் கொண்டு வர வைப்பதே நீதி ஆகும். அந்த பணியினை மிகச்சிறப்பாகச் செய்துள்ளார் ஆசிரியர் திரு.வெள்ளக்குட்டி அருனாகரன் அவர்கள் “காட்டில் நிலவாய் கடலில் மழையாய் பிறந்தால் யாருக்கும் லாபம் பசியில் உணவாய், பகைக்கு உறவாய் இருந்தால் ஊருக்கு லாபம்” என்ற பாடல் வரிகளுக்கேற்ப அவரின் சேவைகள் அமைந்துள்ளது.

ஆசிரியர் திரு.வெள்ளக்குட்டி அருனாகரன் அவர்கள் அவர்கள், தன்னுடைய நீண்ட கால கற்றல் கற்பித்தல் அனுபவங்களைத் தொகுத்து நூல் வடிவமாகக் கொண்டு வந்தால் பிறருக்கு பயனாக அமையும், கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் போது அவர் பயன்படுத்திய யுக்திகள், வழிவகைகளை மையமாக வைத்து எழுதினால் இளம் ஆசிரியர் களுக்கு அது ஒரு வழிகாட்டியாகவும் அமையும். அரசு பணிக்குதான் ஓய்வு, கல்விப்பணிக்கு அல்ல. ஆகவே கல்விப்பணியையும், சமூக பணியினையும் தொடர்ந்து சமுதாயத்திற்கு வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். திரு.வெள்ளக்குட்டி அருணாகரன் அவர்கள் அவர்களும், அவர் தம் குடும்பத்தாகும் நீண்ட ஆயுளுடன் வளமும் நலமும் பெற்று சிறப் பாக வாழ என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, “நெஞ்சம் மறப்பபதில்லை, நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் அந்த நினைவில் உங்கள் சேவைகள் என்றென்றும் நிலைத்திருக்கும். நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## මා දකින Ve.අරුණාකරන්..................

පුත්තලම් කලාපයේ දෙමළ මාධ්‍යය අධ්‍යාපනයේ ගුණාත්මක සංවර්ධනය වෙනුවෙන් මහඟු දායකත්වයක් ලබාදුන් අයෙකු ලෙස Ve.අරුණාකරන් මහත්මා නම් කළ හැකිය. අවුරුදු 40 කට ආසන්න කාලසීමාවක් ගුරුවරයෙකු ලෙස ගුරු උපදේශකවරයෙකු ලෙස ප්‍රාථමික විෂය සම්බන්ධීකරණ නිළධාරී ලෙස අධ්‍යාපන පද්ධතියට ඔහු විසින් ඉටු කළ මෙහෙවර ප්‍රශංසනීය බව ගෞරවයෙන් සඳහන් කරමි.

සහතික ලත් ගුරුවරයෙකු ලෙස වෘත්තීය ජීවිතයට එකතුවන Ve.අරුණාකරන් මහත්මා පේරාදෙණිය විශ්ව විද්‍යාලයෙන් (අභ්‍යන්තර) ශාස්ත්‍රවේදී උපාධිය හා යාපනය විශ්ව විද්‍යාලයෙන් අධ්‍යාපනපති උපාධිය හා පශ්චාත් උපාධි අධ්‍යාපන ඩිප්ලෝමාව ජාතික අධ්‍යාපන ආයතනයෙන් ලබාගැනීම තුල අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ වෘත්තීය දැනුම හා කුසලතා එකතුකර ගැනීම ඔහුගේ වෘත්තීමය පරිපූර්ණත්වයට හේතු වූ ප්‍රධාන සාධක ලෙස දක්වනුයේ ආඩම්බරයෙනි.

ඔහු සැබවින්ම උසස් මානව හිතවාදී චරිතයකි.තම ආයතන ප්‍රධානීන් සමඟ ඉතාමත් සුහදශීලීව සහයෝගයෙන් කටයුතු කළ හැකි පෞර්ෂයකින් හෙබි නිළධාරියෙකි. උතුම් මිනිසෙකි.

2014 අප්‍රේල් සිට 2022 ජනවාරි දක්වා වූ කාලසීමාව තුල රාජකාරිමය වශයෙන්ද මේ දක්වා පෞද්ගලිකවද ඇසුරු කළ අයෙකු ලෙස ඔහු ගැන කියවීමට හැකි වීම මා ලද වටිනා අවස්ථාවක් ලෙස ප්‍රකාශ කරනුයේ හදවතට දැනෙන අපරිමිත සතුටිනි. ඔහුගේ ආදරණීය පවුලට ආදරණීය මැණියන් ප්‍රමුඛ සහෝදරියන්ට ඥාතීන්ට හිතවතුන්ට මෙන්ම මිතුරන්ට අසල්වැසියන්ට දක්වන සෙනෙහෙබර ලෙන්ගතු සම්බන්ධතාවය ඉතාමත් ප්‍රශංසනීය වේ.

රාජකාරි ජීවිතයේදී තම පෞද්ගලික කාර්යයන් දෙවැනි කොට එය සාර්ථකව ඉටු කිරීමට අරුණාකරන් මහත්මා ඉතාමත් කැපවීමෙන් කටයුතු කළ ආකාරය ඔහු වෙත පවරන සෑම වගකීමක්ම සාර්ථකව ඉටු කරදීමට ඔහු තුළ ඇති උවමනාව, පූර්ව සැලසුම්කරණය, අවශ්‍ය සියලු දේ සපයා ගැනීම, කාර්යය නිම කිරීමෙන් පසු එම කාර්යය ඉටු කිරීමේ ක්‍රියාවලියේ සාර්ථකත්වය පිළිබඳ පසු විපරම සහ සමාලෝචනය ඔහු තුළ තිබූ ප්‍රබල කාර්ය සාධනයට බලපවත්වන ලද ධනාත්මක සාධක ලෙස දැක්විය හැකිය.

ගුරු පුහුණු වැඩ සටහන් වලදීත් පාසල් අධීක්ෂණ හා නියාමන වැඩ සටහන් වලදීත් පාසල්වල හා අප කාර්යාලයීය විශේෂ වැඩසටහන් වලදීත් ශිෂ්‍ය අධ්‍යයන සම්මන්ත්‍රණ වලදීත් පන්ති කාමරයේදීත් සම්පත් දායකයෙකු ලෙස සහභාගී වූ දේශන හා වැඩමුළු වලදී ඔහුගේ පරිපූර්ණ නායකත්ව ලක්ෂණ විද්‍යමාන වීම කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂකවරයා ලෙස මා පෞද්ගලිකවම කරන ලද අධීක්ෂණවලදී හා නියාමනයේ දී හඳුනා ගැනීමට හැකිවීම පිළිබඳව සටහන් තබනුයේ ඔහුගේ හැකියාව සහ දක්ෂතාවය සම්බන්ධව සාක්ෂිකරුවකු ලෙසිනි.

පුත්තලම අධ්‍යාපන කලාපයේ පමණක් නොව හලාවත අධ්‍යාපන කලාපය තුළද වයඹ පළාත තුළද ගුරු පුහුණු වැඩසටහන් වල සම්පත් දායකයෙකු ලෙස කටයුතු කිරීම නව අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ හඳුන්වාදීමේදී ක්‍රියාශීලීව මැදිහත්වීම ජාතික අධ්‍යාපන ආයතනය අධ්‍යාපන අමාත්‍යංශය වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව තුල ක්‍රියාශීලී සම්පත් දායකයකු ලෙස ඔහුගේ සේවාව ලබාගැනීමට එම ආයතන කටයුතු කෙරෙහි විශ්වාසය මා පෞද්ගලිකවම දනිමි.

පූර්ව ළමාවිය සංවර්ධනය වෙනුවෙන් පෙර පාසල් ගුරුවරුන් පුහුණු කිරීම සඳහා සම්පත්දායකයෙකු ලෙස කටයුතු කිරීම, නවක උපාධිධාරීන් ගුරු සේවයට බඳවාගැනීමේ දී පළාත් මට්ටමේ දෙමළ මාධ්‍ය සම්පත්දායකයෙකු ලෙස කටයුතු කිරීම, ශ්‍රී ලංකා විවෘත විශ්ව විද්‍යාලයේ බාහිර කථිකාචාර්යවරයෙක් ලෙස කටයුතු කිරීම, පශ්චාත් උපාධි අධ්‍යාපන ඩිප්ලෝමා පුහුණුලාභී ගුරුවරුන් මෙන්ම ජාතික අධ්‍යාපන ආයතනයේ සන්තතික ගුරු පුහුණු වැඩසටහන්වලදී ද අධ්‍යාපනවේදි උපාධි ගුරු පුහුණු සටහන් වල දේශකවරයකු මෙන්ම උපාධ්‍යාවරයෙකු ලෙස කටයුතු කිරීම.

සමාජ විද්‍යාව - භූගෝල විද්‍යාව, ඉතිහාසය, සමාජ අධ්‍යයනය විෂයයන් වල දී මෙන්ම විශේෂයෙන් ප්‍රාථමික අධ්‍යාපනය විෂය සංවර්ධනයේ දී ඔහු ලබාදුන් දායකත්වය පළාත් මට්ටමේ, කලාපිය මට්ටමේ ඇගයීම් හා තක්සේරු කරන ක්‍රියාවලියේ දී වඩාත් උසස් මට්ටමේ ඇගයීම් උපකරණ පිළියෙල කිරීමට ඔහු කරන ලද සේවාව ද සඳහන් කරනුයේ ඔහු ඉටුකළ මෙහෙවර තුළ වැදගත් සේවාවක් ලෙස සඳහන් කරමිනි.

සිංහල, දෙමළ, මුස්ලිම් ජාතිකත්වයන් අතරත් බෞද්ධ, කිතුනු, හින්දු, ඉස්ලාමීය ආගමිකයන් අතරත් ඉතාමත් සුහදශීලිව සමානාත්මතාවයෙන් සෑම දෙනාටම ගරුකරමින් කටයුතු කළ අයෙක් නිසා විශේෂයෙන් දෙමළ මාධ්‍ය පාසල් පද්ධතියේ දෙමළ - මුස්ලිම් පාසල්වල සියලු උත්සව හා විවිධ වැඩසටහන් වලදී ඔහුට ප්‍රමුඛ ආරාධනයක් ලැබීමට ඔහුගේ එම ගුණාංගය තහවුරු කරන අවස්ථාවක් ලෙස දක්වමි.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කාර්යාලය තුළදී ද ආයතන ප්‍රධානියාගේ සිට සියලු කාර්ය මණ්ඩල සාමාජිකයන් සමඟ ඉතා සුහදශීලිව කටයුතු කිරීමත්, තමා වෙත පවරන ලද රාජකාරී නිසි අයුරින් වගකීමෙන් ඉටුකිරීමත්, ඔහු සතු යහපත් ලක්ෂණය විය.

සේවාස්ථ / ගුරු පුහුණු වැඩසටහන් වලදී සහභාගීවන සියලු ගුරුවරුන් කෙරෙහි අවධානය යොමු කරමින් එම අයගේ අධ්‍යයන ගැටලුවලට, වෘත්තිය ප්‍රශ්නවලට හා ඒවා විසඳීමට සහයවීමෙන්, එම සියලුදෙනාම ඔහු කෙරෙහි දක්වන ලද ආදරය හා සෙනෙහස එම ගුරුවරුන්ගේ අදහස් විමසීමේ දී අනාවරණය වූ අවස්ථා බොහෝය.

විශේෂයෙන් දෙමළ මාධ්‍ය ප්‍රාථමික විෂය ගුරුවරුන්ගේ වෘත්තිය සංවර්ධනය, දෙමළ මාධ්‍ය විද්‍යාලවල ප්‍රාථමික අංශයේ අධ්‍යාපන ගුණාත්මක සංවර්ධනය වෙනුවෙන් කරන ලද උපදේශනාත්මක කාර්යභාරය, එම විද්‍යාලවල සුවිශේෂී ගැටලු විසඳීම සඳහා කරන ලද මැදිහත්වීම, දෙමළ මාධ්‍ය සිසු දරුවන්ගේ අධ්‍යාපනික සාධනය ගුණාත්මක ලෙස මෙන්ම ප්‍රමාණාත්මකව වර්ධනය කිරීමට කළ දායකත්වය හා මඟපෙන්වීම, ශිෂ්‍ය වැඩමුළුව, සම්මන්ත්‍රණ ප්‍රතිකාර්ය වැඩසටහන් ක්‍රියාත්මක කිරීම, දෙමාපියන් දැනුවත් කිරීමේ විශේෂ සම්මන්ත්‍රණ හා වැඩමුළුව සාර්ථකව මෙහෙයවීම පෞද්ගලිකවම මා වෙත ලබාදුන් සහයෝගය ගෞරවයෙන් සිහිපත් කරමි.

මඩකලපුව - තුරෙයි නීලාවනෙයි ග්‍රාමයේ ඉපදී එම ග්‍රාමයේ මෙනෝදිස්ත මිශ්‍ර ප්‍රාථමික පාසලෙන් ප්‍රාථමික අධ්‍යාපනය ලබා තුරෙයි නීලාවනෙයි මහා විද්‍යාලයේ 6 – 10 කනිෂ්ඨ ද්විතියික අධ්‍යාපනය ද සාර්ථකව අවසන්කර මරදමුනේ අල් - මිනාර් මධ්‍ය මහා විද්‍යාලයෙන් උසස් පෙළ අධ්‍යාපනය ලබන Ve - අරුනාකරන් මහත්මා පේරාදෙණිය විශ්ව විද්‍යාලයට ඇතුළත්ව ශාස්ත්‍රපති උපාධිය ලබාගැනීම තුලින් සාමාන්‍ය අධ්‍යාපනය මෙන්ම විශ්ව විද්‍යාලය අධ්‍යාපනයේ සාර්ථකත්වයට පත්වූ අයෙකු ලෙස සටහන් තබනුයේ ඉතාමත් ආඩම්බරයෙනි.

දිස්ත්‍රික් සේවා සහතිකලත් ගුරුවරුන් බඳවාගැනීමේ තරඟ විභාගය සමත්ව එවකට පැවති රජයේ ප්‍රතිපත්තිය මත 1984.12.27 දින පුත්තලම දිස්ත්‍රික්කයේ සේවයට පැමිණෙන Ve - අරුනාකරන් මහත්මා ඉතාමත් දුෂ්කර හා අපහසුතාවයන් මධ්‍යයේ පුත්තලම - කරතිව් විද්‍යාලයේ සේවයට වාර්තා කරමින්, දෙමළ මාධ්‍ය සිසු දරුවන්ගේ ඉගෙනුම් අවශ්‍යතා සපුරාලීමට කටයුතු කරමින් තම වෘත්තිය ජීවිතය හා රාජ්‍ය සේවය ආරම්භ කිරීම හා ඉන්මතු සපුරාලන අවුරුදු 40 ක ආසන්න කාලසීමාවම පුත්තලම ප්‍රදේශය මූලික කරගෙන ඉතාමත් කැපවීමෙන් හා පරිත්‍යාගශීලිව සේවය කිරීම අගය කළ යුතුය.

ශ්‍රී ලංකා විදුහල්පති සේවය iii වන පත්තිය තනතුරු සඳහා බඳවා ගැනීමට පැවති තරඟ විභාගය සමත්වුව ද, එම පත්වීම භාර නොගෙන අධ්‍යාපනයේ ගුණාත්මක සංවර්ධනය මෙන්ම ගුරු - සිසු දෙපාර්ශවයේම උන්නතිය වෙනුවෙන් ගුරු උපදේශක භූමිකාව තුළ තවදුරටත් රැඳී සිටින ලෙස එම අවස්ථාවේ දී තම ඉහළ නිලධාරීන් කරන ලද ඉල්ලීමත් පරිපාලන හා කළමනාකරණ භූමිකාවට වඩා උපදේශනාත්මක භූමිකාවට දැක්වූ අසීමිත කැමැත්ත මත පරිපාලන තනතුරු වලින් වැළකීමට ඇති ආශාවට වඩා සිසු දරුවන්ට ගුණාත්මක සේවයක් ලබා දීමේ උවමනාව හා අවශ්‍යතාවය වෙනුවෙන් කැපකරන ලද අවස්ථාවක් ලෙස සඳහන් කරනුයේ Ve - අරුනාකරන් මහතා වෙත කරනු ලබන විශේෂ ගෞරවයක් වශයෙනි.

යහපත් අධ්‍යාපන අරමුණු සහ පරමාර්ථ ඉටුකර ගැනීම වෙනුවෙන් කළ අප්‍රතිහත ධෛර්යය සම්පන්න මෙහෙවර හා කැපවීමත් ඉතා උසස් මානව ගුණාංග පිරුණු ගුරුවරයකු, ගුරු උපදේශකවරයකු, සම්පත්දායකයකු ලෙස ලබාදුන් ආදර්ශය වර්තමාන අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ නියැලි සිටින ගුරුභවතුනට ගුරු උපදේශකවරුන්ට මෙන්ම අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ අන් අයටද තම වෘත්තිය ජීවිතය සංවර්ධනයේ දී <u>පරමාදර්ශී චරිතයක්</u> ලෙස Ve - අරුනාකරන් මහත්මා හඳුන්වමින්, එතුමාගේ විශ්‍රාමික ජීවිතය ඉතාමත් නිරෝගීමත්ව සතුටින් ගත කිරීමට හැකිවේවායි සෙනෙහසින් ප්‍රාර්ථනා කරමි.

Ve - අරුනාකරන් මහත්මාණනි!

ඔබ ගත කළ ජීවිතය පුරාවට අත්පත් කරගත් දැනුමත්, ජීවිත අත්දැකීම් සමුදායත්, වෘත්තීය දැනුමත්, වර්තමාන ගුරුභවතුනට ඔවුන්ගේ වෘත්තිය කුසලතා තවදුරටත්, සංවර්ධනය කරගැනීමටත්, ඇල්ෆා - පරපුරේ සිසු දරුවනට වත්මන් අභියෝග කළමනාකරණය කරගත හැකිවන අයුරින් උපදේශනය ලබාදීමටත් ඔබගේ මානසික ශක්තිය කායික සුවපත් බව හා අධ්‍යාත්මික ශක්තිය තවදුරටත් එලෙසම ආරක්ෂාවේවායි හදවතින්ම පතමි. ඔබගේ වටිනා සේවය තවදුරටත් අපේක්ෂා කරමි.

ඩබ්.පී.එස්.කේ.විජේසිංහ,
(විශ්‍රාමික කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் காணும் அருணாகரன்

W.P.S.K.விஜேசிங்ஹ.
பணி நிறைவு வலயக்கல்விப் பணிப்பாளர்
புத்தளம், சிலாபம்.

புத்தள வலயத்தின் தமிழ் மொழி மூல கல்வி தரத்தை மேம்படுத்துவதில் பாரிய பங்களிப்பினை வழங்கிய ஒருவராக திரு Ve. அருணாகரன் அவர்களை குறிப்பிட முடியும். சுமார் 40 வருட காலமாக ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, ஆரம்பக் கல்வி பாட இணைப்பாளராக கல்வி முறைமைக்கு அவர் ஆற்றிய பணி மிகவும் போற்றத்தக்கது என்பதை கௌரவத்துடன் பதிவிடுகிறேன்.

சான்றிதழ் பெற்ற ஆசிரியராக தொழில் வாழ்க்கையில் அடி எடுத்து வைத்த திரு. Ve. அருணாகரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் (உள்வாரி) இளங்கலை பட்டத்தையும், யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமானி (M.Ed.) பட்டத்தையும் மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும் பெற்றுக் கொண்டு கல்வி புலத்தில் தொழில் வான்மையையும், திறன்களையும் சேர்த்துக் கொண்டது அவரின் பூரணத்துவத்திற்கு காரணியாக இருக்கின்றது என்பதை பெருமிதத்துடன் சுட்டி காட்ட விரும்புகிறேன்.

உண்மையிலேயே அவர் ஒரு உயர்ந்த மனித நேயப் பண்புகளை கொண்டவர். தனது உயர் அதிகாரிகளிடம் மிகவும் தோழமையுடனும் ஒத்துழைப்புடனும் செயல்படக்கூடிய ஆளுமை மிக்க ஒரு அதிகாரியாகவும் மகோன்னத மனிதராகவும் அவரை நான் காண்கிறேன்.

2014 ஏப்ரல் மாதம் முதல் 2022 ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் உத்தியோகப் பூர்வ ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும் என்னுடன் பழகியவர் என்ற ரீதியில் அவரைப் பற்றி சொல்ல கிடைத்த இத்தருணம் எனக்கு மிகவும் பெறுமதி மிக்கது என்பதை உளப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன். அவருடைய அன்பான குடும்பம், அன்பான தாயார் சகோதரிகள் உறவினர்கள் நண்பர்கள் மற்றும் அயலவர்கள் உட்பட அனைவரிடமும் அவர் காட்டும் பரிவும் பாசமும் மிகவும் போற்றத்தக்கது.

அலுவலக வேலைகளில் தனது சொந்த அலுவல்களை இரண்டாம் பட்சமாக கருதி தான் எடுத்துக்கொண்ட பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக திரு Ve. அருணாகரன் அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டமை அவருக்கு வழங்கப் படும் அனைத்து பொறுப்புகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான அவரிடம் காணப்படும் ஆர்வம், முன்கூட்டிய திட்டமிடல், தேவையான வளங்களை திரட்டி கொள்ளுதல், பணியினை நிறைவேற்றிய பின்னர் அப்பணியினை நிறைவேற்றும் செயல்பாடுகளின் வெற்றியின் தன்மைகளை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் என்பன அவரிடம் காணப்பட்ட பலமிக்க செயலாற்றலின் நேர்மறை காரணிகளாக குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பயிற்சி, பாடசாலை மதிப்பீட்டு கண்காணிப்பு, பாடசாலைகளில் இடம்பெறும் விசேட நிகழ்ச்சிகள், கல்விக் கருத்தரங்குகள், வகுப்பறையில் வளவாளராக கலந்து கொள்ளும்போது நிகழ்த்தும் உரைகள், மற்றும் பயிற்சி பட்டறைகள் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளின் போது அவரிடம் வெளிப்படும் பரிபூரண தலைமைத்துவ பண்புகளை, வலயக்கல்வி பணிப்பாளராக நான் தனிப்பட்ட ரீதியில் மேற்பார்வை செய்யும் போதும், கண்காணிக்கும் போதும் இணங்கான முடிந்ததை அவரின் திறமைகளுக்கு சான்றாக இங்கு பதிவிட விரும்புகிறேன்.

புத்தள வலயக் கல்வி பணிமனையில் மட்டுமின்றி சிலாபம் கல்வி வலயத்திலும் வடமேல் மாகாணத்திலும் ஆசிரியர் பயிற்சி செயலமர்வுகளில் வளவாளராக செயல்படுவது, புதிய கல்வி சீர்திருத்தத்தின் அறிமுக நிகழ்வுகளிலும் முனைப்புடன் ஈடுபட்டது, தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு மற்றும் வடமேல் மாகாண திணைக்களம் ஆகியவற்றின் நிகழ்ச்சி திட்டங்களில் சிறந்த வளவாளராக இவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளுதல் அந்நிறுவனங்கள் இவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கை என்பதை நான் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிறேன்.

முன் பிள்ளைப் பருவ விருத்திக்காக முன்பள்ளி ஆசிரியர்களை பயிற்றுவித்தலுக்கான வளவாளராக செயல்படுதல், புதிய பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளும் போது மாகாண மட்டத்தில் தமிழ் மொழி மூல வளவாளராக செயல்படல், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளராக செயல்படுதல் பட்டப்பின் கல்வி டிப்ளமோ பயிலும் ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் தொடர் பயிற்சி வேலை திட்டங்களிலும் கல்வியியல் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி வேலை திட்டங்களிலும் விரிவுரையாளராகவும் உபா த்தியாயராகவும் செயல்படல் போன்ற கடமைகளை சிறப்பாக செய்து வந்துள்ளார்.

சமூக விஞ்ஞானம், புவியியல், வரலாறு, சமூகக் கல்வி, விசேடமாக ஆரம்ப கல்வி பாட அபிவிருத்தியில் அவரின் பங்களிப்பும், மாகாண வலயமட்ட மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டு செயல்பாடுகளில் மிகச் சிறந்த கணிப்பீட்டு கருவிகளை தயாரிப்பதற்காக அவர் ஆற்றிய சேவையும் அவரின் பணிகளில் மிக முக்கியமானது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

சிங்களம், தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலும், பௌத்தம், கிறிஸ்தவம், ஹிந்து, இஸ்லாம் மதத்தினருக்கு இடையிலும் மிகவும் நட்புறவுடனும், சமத்துவத்துடனும் அனைவரையும் மதித்து நடக்கும் பண்புடைவர் என்பதனால், விசேடமாக தமிழ் மொழி மூல பாடசாலை முறைமையுள், தமிழ் - முஸ்லிம் பாடசாலைகளின் அனைத்து விழாக்கள் மற்றும் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளின் போதும் அவருக்கு விடுக்கப்படும் விசேட அழைப்பின் ஊடாக அவருடைய மேற்குறிப்பிட்ட பண்பு உறுதிப்படுத்தப்படுவதை காண்கின்றேன். அலுவலகத்தில் உள்ளேயும் அதன் தலைவர் முதல் அங்கு கடமை புரியும் சகலதரப்பினருடனும் மிகவும் நட்புறவுடன் நடந்து கொள்வதோடு தனக்கு ஒப்படைக்கப் பட்ட பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவது அவரது சிறப்பம்சமாகும்.

சேவை கால பயிற்சி மற்றும் ஆசிரியர் பயிற்சி வேலை திட்டங்களில் கலந்து கொள்ளும் சகல ஆசிரியர்களையும் கவனத்தில் கொண்டு அவர்களின் தொழிற்சார் பிரச்சினைகளுக்கும் கற்றல் கற்பித்தல் தொடர்பான பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்காக உதவுவதன் மூலம் அவர்கள் அனைவர் மனதிலும் இடம் பிடித்துள்ளார் என்பதுஆசிரியர்களின் கருத்துக்களை வினவும் பல சந்தர்ப்பங்களின் பொழுது தெட்டத்தெளிவாக புலனாகும் இவரின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

விசேடமாக தமிழ் மொழி மூல ஆரம்ப பாட ஆசிரியர்களின் வாண்மை விருத்தி மற்றும் ஆரம்பப் பிரிவின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆலோசனைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டல்களையும் வழங்குதல், பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு வழி காண்பதற்கும் மாணவர்களின் அடைவினை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் பயிற்சி பட்டறைகள், மீளவலியுறுத்தல்கள் போன்ற வேலை திட்டங்களை செயல்படுத்தல், பெற்றோர்களை அறிவுறுத்தும் விசேட கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகள் போன்றவற்றை

வெற்றிகரமாக செயல்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட ரீதியில் எனக்களித்த பங்களிப்பினை கௌரவத்துடன் நினைவு கூறுகிறேன்.

மட்டக்களப்பு, துறை நீலாவனை கிராமத்தில் பிறந்து அக்கிராமத்தில் மெதடிஷ் மிஷன் தமிழ் கலவன் ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்று, துறைநீலாவனை மகா வித்தியாலயத்தில் தரம் **6-10** கனிஷ்ட இடைநிலை கல்வியை வெற்றிகரமாக நிறைவேற்றி மருதமுனை அல்மனார் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்கல்வியை கற்று திரு Ve. அருணாகரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டத்தை பெற்றுக் கொண்டதன் மூலம் சாதாரண கல்வியையும் பல்கலைக்கழக கல்வியையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார் என்பதை பெருமிதத்துடன் நினைவு கூறுகிறேன்.

மாவட்ட சேவை சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களை உள்வாங்கும் போட்டி பரீட்சையில் சித்தி எய்து அப்போது இருந்த அரச கொள்கைகளுக்கு அமைய **1984.12.27** ஆம் திகதி புத்தள மாவட்டத்தில், அதி கஷ்ட பிரதேசத்தில் அமைந்திருக்கும் கரைத்தீவு முஸ்லிம் வித்யாலயத்தில் தனது முதல் நியமனத்தை பொறுப்பெடுத்து மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை செவ்வனே செய்வதன் மூலம் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்து அதன் பிறகு சுமார் **40** வருடங்களாக புத்தளம் பிரதேசத்தில் மிகவும் அர்ப்பணிப்புடனும் சேவை செய்தமை பாராட்டத்தக்கது.

இலங்கை அதிபர் சேவை II ம் வகுப்பு பதவிக்கான போட்டி பரீட்சையில் சித்தி அடைந்தும், அப்ப பதவியை பொறுப்பேற்காது, கல்வியின் பண்புசார் அபிவிருத்தி மற்றும் ஆசிரியர் - மாணவர் இரு சாராரினதும் நலன் கருதி ஆசிரிய ஆலோசகர் எனும் வகீபங்கினை மேலும் தொடருமாறு அச்சந்தர்ப்பத்தில் தமது மேலதிகாரிகள் விடுத்த வேண்டுகோளையும், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ வகீபங்கினை விட ஆசிரிய ஆலோசகர் என்னும் வகீ பாகத்திற்கு தனது

அதீத விருப்பம் என்பதையும் கருத்திட் கொண்டு, நிர்வாக பதவிகளில் கிடைக்கும் உயர்வை விட, மாணவ சமுதாயத்திற்கு தரமான சேவையை வழங்க வேண்டும் என்ற ஆர்வமும் தேவைப்பாடும் இருந்ததனால் அப்பதவியை தியாகம் செய்து, இப்பதவிக்கு தன்னை அர்ப்பணித்த திரு அருணாகரன் அவர்களை போற்றி கௌரவிக்கிறேன்.

சீரான கல்வி இலக்கினை அடைவதற்காக திடகாத்திரமான, அர்ப்பணிப்பு மிக்க, மனித நேயம் நிறைந்த ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, வளவாளராக நீங்கள் பெற்றுத் தந்த முன்மாதிரி தற்போது கல்வி புலத்தில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றுமன்றி கல்வி புலத்தில் உள்ள ஏனையவர்களுக்கும் தங்களது தொழில் வாழ்க்கையில் முன்னுதாரண புருசராக திரு. Ve. அருணாகரன் அவர்கள் திகழ்கிறார் என்பதை இங்கு குறிப்பிட்டு, அவர்களின் ஓய்வு கால வாழ்க்கை மிக ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

திரு Ve. அருணாகரன் அவர்களே!

நீங்கள் கடந்து வந்த வாழ்க்கை பூராகவும் பெற்றுக்கொண்ட அறிவு, அனுபவங்கள், தொழில்வாண்மை என்பன தற்கால ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு பங்களிக்கவும், அல்பா பரம்பரை மாணவர்களை தற்கால சவால்களுக்கு முகாமைத்துவம் செய்து கொள்ளக்கூடிய முறையில் ஆலோசனை வழிகாட்டல்களை பெற்றுக் கொள்வதற்காகவும் உங்களது உடல் உள ஆரோக்கியமும் ஆன்மீக பலமும் மென்மேலும் பாதுகாக்கப்பட வேண்டும் என உளமாற பிராத்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி அபிவிருத்தியாளரின் வாழ்த்துச் செய்தி

திரு எம்.ஏ.எம்.அனீஸ்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
வலயக் கல்விப் பணிமனை, புத்தளம்.

திரு Ve.அருணாகரன் அவர்களின் சேவை நலன் பாராட்டு மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

**1964.10.12** மட்டக்களப்பு துறை நீலாவணையில் வெள்ளை குட்டி இலெட்சுமி தம்பதிகளின் அன்பும் மகனாக இப்பூமியில் அவதரித்தார். **1984.12.27** யில் புத்தளம் மண்ணில் ஓர் ஆசிரியராக தடம் பதித்தார். பு/கரைத்தீவு மு.ம.வித்தியாலயம், பு/இலவங்குளம் மு.ம.வித்தியாலயம் என்பவற்றில் இவரது ஆசிரியர் பணி மிகவும் மகத்தானது. பொதுவாக எல்லோராலும் தூரப்பிரதேச தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் (Isolated Schools) என ஒதுக்கப்படும் மேற்படி இரு பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு இவர் வழங்கிய ஒத்துழைப்பு அளவிட முடியாதது. **1998.11.01** யில் ஆசிரிய ஆலோசகராக புத்தளம் கல்வி வலயத்தில் பதவி உயர்வு பெற்ற திரு. அருணாகரன் அவர்கள் சுமார் பத்து வருடங்கள் புத்தளம் கல்வி வலயத்தின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றினார். பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியும் யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமாணி பட்டதாரியுமாகிய திரு அருணாகரன் அவர்கள் **2008.06.01** யில் புத்தளம் கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவுக்கு பொறுப்பான பாட இணைப்பாளராக மேலும் பதவியுயர்வு பெற்று ஆரம்பக் கல்விப் பிரிவின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியுள்ளார். ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தேர்ச்சி விருத்திக்காக மட்டுமல்லாது ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக நின்று செயலாற்றியுள்ளார். வெளிவாரி பாடசாலை குழு மேற்பார்வைகளின் போது ஆசிரிய ஆலோசகர்களை ஒன்றிணைத்து சிறப்பாக வழி நடத்தியுள்ளார். பணிவும் பொறுமையும் மிக்க இவர், ஆசிரியர்களை மகனே! மகளே! என அழைத்து அவர்களை கையாளும் விதம், வழி நடத்தும் விதம் மிகவும் நேர்த்தியானது. தவறுகளை கண்டு அன்பாக கடிந்து கொள்ளும் இவரின் சுபாவம் தனித்துவமானது. இம்மண்ணின் மைந்தனாக தன்னை அர்ப்பணித்து இம்மண்ணின் கல்வி அபிவிருத்திக்கு அரும் பணியாற்றிய திரு. அருணாகரன் அவர்களை இம்மண் ஒருபோதும் மறக்காது. **2014.10.12** மணிவிழா காணும் அவர் அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரது கல்விச்சேவை தங்கு தடையின்றி மேலும் தொடர வேண்டும் என்பதே எமது அவா என்பதுடன் அச்சேவையின் பெரும் பங்கு அவரைப் போசித்து புடம் போட்ட புத்தளம் மண்ணிற்கும் கிடைக்க வேண்டும். எனவே என்னுடன் இணைந்து எமது தாயகத்தின் கல்வி அபிவிருத்திக்கு அரும்பணி செய்து அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் திரு.அருணாகரன் அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைவதுடன் அவரது ஓய்வு காலம் நோய் நொடிகளின்றி சிறப்பாக அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## සුබ පැතුම් පණිවිඩය

පුත්තලම් කලාප අධ්‍යාපන කාර්යාලයේ සේවයේ නියුක්තව සිට විශ්‍රාම ගැනීමට සූදානම් වන ගරු, වී.අරුණාසලම් මහතාට සුබ පැතුමක් එක් කිරීමට අවස්ථාවක් උදාවීම මා ලැබූ භාග්‍යයකි. මෙතුමාගේ සේවා කාලය තුළදී මා හට අවස්ථා කෙනාවකදී සහයෝගය ලබාදීමට මෙතුමා සමත් විය. එනම් මා විදුහල්පතිවරියක් වශයෙන් කටයුතු කරන සමයේදී විශේෂයෙන් කළමනාකරණ කොට්ඨාශ අධ්‍යක්ෂ වශයෙන් කටයුතු කිරීමේදී මෙන්ම අද වන විට කලාප අධ්‍යාපන කාර්යාලයේ වැඩකටයුතු කිරීමේදීද බොහෝ නිසාවට කටයුතු කළ අයෙකි. එමෙන්ම තම සේවය අතුරටම ඉමු කාරීත් දරුවන් වෙනුවෙන් හා සමාජය වෙනුවෙන් මහඟු සේවයක් කර ඇත්තෙකි. එතුමාගේ දුරදර්ශී ක්‍රියා කලාපය මගින් සැමගේ සිත් දිනා කටයුතු කිරීමට හැකි විය. වී. අරුණාසලම් මහතා බොහෝ අත්දැකීම් හා දැනුම් සම්භාරයක් සතුව ඇති කෙනෙකි. මෙතුමා අපගෙන් මිදී යාමේ පාඩුව තවත් අයෙකුගෙන් සපුරා ගැනීමට සිතීමට පවා උගහට කාරණයක් වේ. ජාති ආගම් කුලභේද වලින් තොරව කටයුතු කිරීමේ හැකියාව මෙතුමා සතු උතුම් ගුණාංගයකි. එතුමා තම සේවයේ ඉතා දුරදර්ශීව සිතා බලා නිහතමානීව කටයුතු කරන ආදර්ශවත් පුද්ගලයෙකි. එමෙන්ම මෙතුමාගේ සේවා කාලය පිළිබඳ සලකා බැලුවහොත් 1984 වර්ෂයේදී ගුරුවරයකු වශයෙන් පළමු පත්වීම ලද මෙතුමා ඉන්පසු 1998 වර්ෂයේ දී ගුරු උපදේශකවරයකු වශයෙන්ද ඉන් පසුව පුත්තලම් අධ්‍යාපන කලාපයේ දෙමළ මාධ්‍ය අංශය භාරව, ප්‍රාථමික විෂය සම්බන්ධීකාරක තනතුර දරමින් කලාපයේ දෙමළ මාධ්‍ය ප්‍රාථමික අංශයේ දියුණුවට මෙන්ම ගුරුවරුන් වෙනුවෙන් කළ සේවය ඉතාමත් ප්‍රශංසනීය වේ. ගරු වී. අරුණාසලම් මහතාණෙනි, ඔබ ආරම්භ කිරීමට බලාපොරොත්තු වන විශ්‍රාම දිවියට සුභපැතුම් එක්කරන අතරම එය සාර්ථක හා සතුටින් පිරි එකක් වීමටත් නිරෝගී සුවය සහ දීර්ඝායුෂත් ප්‍රාර්ථනා කරමි.

එන්.එම්.ආර්. දිල්ෂිනී ප්‍රනාන්දු,
නියෝජ්‍ය අධ්‍යාපන අධ්‍යක්ෂ (සැලසුම්),
කලාප අධ්‍යාපන කාර්යාලය,
පුත්තලම්.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

திருமதி.N. M. R. தீப்தி பரணாந்து.
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்),
வலயக்கல்விப் பணிமனை, புத்தளம்.

புத்தளம் வலயக் கல்விப் பணிமனையில் சேவை புரிந்து அரச பணி நிறைவு பெற்றுக் கொள்வதற்கு தயாராகும் மதிப்பிற்குரிய வீ.அருணாகரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதற்கு வாய்ப்பு கிடைத்தமை எனக்கு கிடைத்த ஒரு ஆசீர்வாதம் ஆகும்.

இவரது சேவை காலத்துக்குள் பல சந்தர்ப்பங்களில் எனக்கு ஒத்துழைப்பு நல்கினார். அதாவது நான் ஒரு அதிபராக சேவை செய்த காலத்திலும் விசேடமாக கற்பிட்டி கோட்டக்கல்வி பணிப்பாளராக சேவை செய்த காலத்திலும் அதேபோல் இன்று வரை வலயக் கல்வி பணிமனையில் சேவை செய்யும் போதும் நட்போடு பணிபுரிந்த ஒருவர் ஆவார். அத்தோடு தனது சேவையை மிகச் சரியாக செய்து பிள்ளைகளுக்காக மற்றும் தமிழ் பிரிவுக்காக பெரும் சேவை செய்தவர். அவரது தூர நோக்கான செயற்பாடுகள். வலயத்தின் ஊடாக பலரது மனதில் இடம் பிடிக்கக் கூடியதாக இருந்தது.

வெ. அருணாகரன் அவர்கள் நிறைய அனுபவங்களையும் அறிவையும் தன்னகத்தே கொண்டிருக்கிறார். இவர் எங்களிடமிருந்து விடை பெறுவதனால் இச்சேவையை இன்னொருவரிடம் இருந்து பெறலாம் என்று நினைப்பது கூட பொருத்தமாகவோ சாத்தியமானதாகவோ அமையாது எனவே நினைக்கிறேன். ஜாதி, மத பேதங்களை விடுத்து சேவை செய்யக்கூடிய திறன் இவரிடம் உள்ள விசேடமான ஒரு பண்பாகும். இவர் தனது சேவையில் தூரநோக்குடன் நன்றாக சிந்தித்து அடக்கமாக ஒழுகும் ஒரு முன்னுதாரணமான ஒரு நபர்.

இவரது சேவை காலம் தொடர்பாக நோக்கினால் **1984** ஆம் ஆண்டில் ஒரு ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற இவர் பின்னர் **1998** ஆம் ஆண்டில் ஆசிரிய ஆலோசகராகவும் பின்னர் புத்தளம் கல்வி வலயத்தின் தமிழ் மொழிப் பிரிவின் ஆரம்பப் பிரிவிற்கான பாட இணைப்பாளராக பதவியேற்று

வலயத்தில் ஆரம்பப் பிரிவு பிள்ளைகளின் மற்றும் ஆசிரியர்களின் வளர்ச்சி மட்டத்திற்காக பணியாற்றியது போற்றுதற்குரிய விடயமாகும்.

மதிப்பிற்குரிய

வீ. அருணாகரன் அவர்களே, நீங்கள் ஆரம்பிக்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அரச பணி நிறைவு நிலைக்கு வாழ்த்துக்களை சேர்ப்பதோடு உங்கள் பணி நிறைவோடு கூடிய வாழ்க்கை சிறப்பாக மற்றும் சந்தோஷத்தோடு கூடிய ஒன்றாக இருந்து ஆரோக்கியமாக நீண்ட ஆயுளோடு வாழ எனது பிரார்த்தனைகளில் தங்களை இணைத்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# අපේ අරුණා

අදට වූ ශුභාරංචියේ තලෙන්තු පිළිබඳ උපමාවෙහි මෙසේ දැක්වේ. "යහපත් විශ්වාසීදාසය ඉතා අගෙයි. ඔබ ස්වල්ප දෙයක් කෙරෙහි විශ්වාසී වූ බැවින් බොහෝ දේ කෙරෙහි අධිපති කරමි. ඔබ දැන් අවුත් ඔබේ ස්වාමියාගේ ප්‍රීතියට සහභාගී වන්න "(මතෙව් 25 14-30)

මා දන්නා අරුණිකාවන් ස්වල්පයම දේ පිළිබඳව ඉතා සැලකිල්ලෙන් කටයුතු කළ. ඇය වෘත්තීය ජීවිතය තුළ වගකීම් පිළිබඳව තම විශ්වාසය ඒකඳව ආරක්ෂා කළ සැබෑ රාජ්‍ය නිලධාරියෙකු විය.

පුත්තලම් අධ්‍යාපන කලාපයේ ප්‍රාථමික අංශය සුළු අගයක් ගිනී අංශයක සිට සතුටුදායක අගයක් ගිනී අංශයක් කරා ඔසවාතැබීමට ඇයගේ වෘත්තීය හමින් සහයා වූයේ අරුණිකාවන් මහත්මිය බව මා සිහිපත් කරන්නේ අවංක ගෞරවයෙනි. එම සාධනීය මෙහෙයුම තුළ නිරන්තර කැපවීමෙන් හා නිරන්තර වගවීමෙන් ඇය කණ්ඩායම තුළ සැබෑ ක්‍රියාකාරිකයෙකු ලෙස එතුමා කටයුතු කරන ලදී.

ප්‍රාථමික අධ්‍යාපනයේ දෙමළ මාධ්‍ය සාධනය වෙනුවෙන් විශේෂ කාර්යභාරයක් ඉටු කරමින් ඇය හා අත්වැල් බැඳ කටයුතු කළ අප ආදරණීය සහෝදරයා ලෙස, මගේ රාජකාරී ජීවිතය තුළ "අරුණා" අරුණෝදයෙන්කෙට මට සිහිපත් වේ. විවිධ වූ සම්පත් ප්‍රධානයන් හරහා සාපල දරන ඇණියකො දරුවන් පිළිබඳව හා ඔවුන්ගේ සාධනීය සංවර්ධනය වෙනුවෙන් අධ්‍යාපන ක්‍රියාකාරකම් නිර්මාණය කිරීම සඳහා ද, මා හා එක්ව කැපවීමෙන් ක්‍රියා කළ අරුණෝදයට මිතුරු විය

අරුණිකාවන් සහෝදරයා තුළ මා දුටු වූ ඉදිරිගාමීම ගුණාංගයක් වන්නේ සැබෑවෙන සියලු කාර්යයන් නිරවධ්‍ය වශයෙන්ම අවසානය තෙක්ම කැපවීමෙන් ඉටු කිරීමයි. විශේෂයෙන් අඩු පහසුකම් හා හීන සම්පත් යන අභියෝගයන් නොසලකා හරිමින් තම අභිමතාර්ථ සාධනය කර ගැනීමට එතුමා ඇප කැප විය. අරුණිකාවන් මහත්මිය සතුව ඇය දුටු නිහඬ බව කෙසේවෙතත් සවිඥානකත්වයෙන් යුතුව කොහෝ අසීරුතා ජයගත් බව අවධාරණය කළ යුතුම කරුණකි. තම නිහඬ පැවිදිවිනාවය තුළ තම ආශීර්වාද අරමුණු හා අභිමතාර්ථ මැනවින් වටහාගෙන ඒවා සාධනය කර ගැනීමට අනෙක් සියලුම ආයතන සහයෝගය දිනා ගැනීමට එතුමාට හැකි විය.

අද මෙතලප විශ්‍රාම ලබන වී. අරුණිකාවන් මහත්මිය, පුත්තලම් අධ්‍යාපන කලාපය වෙනුවෙන් කොට ඉමණාමයට ලක් කිරීම, කළ යුතුම වූ සත්කාරයක් බව සිහිපත් කරන අතරම ඒ සඳහා කටයුතු සංවිධානය කළ සංවිධායක කමිටුවෙහි කාර්යභාරයද අගය කරමි.

එමෙන්ම සාපනය වැනි දුර බැහැර පෙදෙසක වාසයමින් වුවද අරුණිකාවන් මහත්මිය පුත්තලම් අධ්‍යාපන කලාපයට කළ සේවය සඳහා එතුමාට අවශ්‍ය ශක්තිය හා ධෛර්යය සැපයූ එතුමාගේ ප්‍රිය භාර්යාව මෙන්ම දියණියද ගෞරවයෙන් සිහිපත් කරමි.

අවසන් කොට මෙතෙක්වත්ම අවංක වූ ද කාර්ය ශූර වූ ද රාජ්‍ය සේවයකට සමුදෙන අපගේ ආදරණීය සොයුරු වී. අරුණිකාවන් හෙවත් "අපේ අරුණා"ගේ ලුවදායී මෙන්ම නිරෝගී ඉසිතුවක් වේවායි ප්‍රාර්ථනා කෙනෙමි. පුත්තලම් අධ්‍යාපන කලාපයේ ප්‍රාථමික අධ්‍යාපනය වෙනුවෙන් ඔබ විසින් ඉටු කරන්නට යෙදුණු ඒ මහඟු සේවය සඳින් සඳ යුගයෙන් ඔබට සංගාට හා ස්නේහ පිරිනමන අතර, පුත්තලම් අධ්‍යාපන කලාපයේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අභියෝග ද දරුවන්ගේ හුරුබුහුටු හැදීමට ඔබ ගත් ඒ වෙහෙස මහන්සිය ඔබේ ජීවිතයේ ඉදිරි ගමන් මග මෙන්ම ඔබේ දරුවන්ගේ ඉදිරි ගමන් මග ද සාර්ථක කර ගැනීමට ආශිර්වාදයක් වනු ඇත. එමෙන්ම ඔබ ගත කළ නිකැලැල් රාජ්‍ය සේවයේ වෘත්තීය ජීවිතය දෙවියන් වහන්සේගේ ආශිර්වාදයෙන් සපිරුණු සතුටින් පූර්ණ සෞඛ්‍ය ඉදිරියේ ගත කරන්නට නියමිත විශ්‍රාම ජීවිතය තුළද දේවාශිර්වාදයේ බහුලව සහිත වේවායි ප්‍රාර්ථනා කරමි.

"ඔබේ ජීවිතය තුළ නිරන්තරයෙන් මහිමාන්විත වූ දෙවියන් වහන්සේ ඉදිරියටත් ඔබේ ජීවිතය මත සිය ආශිර්වාදය වස්වාලනු පිණිස මගේ යැදුම් වලදී ඔබ සිහිකරමි.

මීට
සුජීවිතා චන්ද්‍රසේකර
නියෝජ්‍ය අධ්‍යාපන අධ්‍යක්ෂ (අධ්‍යාපන පරිපාලන),
කලාප අධ්‍යාපන කාර්යාලය,
පුත්තලම්





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் அருணன்

திருமதி சுஜீவிக்கா சந்திரசேகர,
பிரதி கல்விப் பணிப்பாளர். கல்வி நிர்வாகப் பிரிவு.
புத்தளம் வலயக் கல்வி பணிமனை. புத்தளம்.

திருவிவிலியத்தில் தாலந்து உவமையிலே இவ்வாறு கூறப்படுகிறது. "நம்பிக்கைக்கு உரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர், எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உன் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்". (மத்தேயு25:14-30)

நான் அறிந்த மட்டில் அருணாகரன் அவர்கள் சிறிய விடயங்களிலும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு தன்னுடைய பணி வாழ்க்கையில் பொறுப்புக்கள் சார்பில் தன் முழு நம்பிக்கையையும் வைத்து அதைக் காப்பாற்றிய நேர்மையான ஒரு அரச அதிகாரி ஆவார்.

புத்தளம் கல்வி வலயத்தில் ஆரம்பப் பிரிவின் வளர்ச்சி மட்டத்தை உயர்த்துவதில் என் பணி வாழ்வில் உதவிய அருமை நண்பனே அருணாகரன் ஐயா என்பதை கௌரவத்துடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இப்பணியை அர்ப்பணம் மற்றும் பொறுப்புடன் எமது குழுவில் இருந்து நிறைவேற்றிய ஒருவரே இவர் ஆவார்.

ஆரம்பக் கல்வியின் தமிழ்மொழி சார்பாக விசேட காரியங்களை நிறைவேற்றி எம்மோடு இணைந்து செயலாற்றிய அன்பான ஒரு சகோதரனாக எனது பணி வாழ்வில் "அருணா" ஒரு உதயசூரியனாகவே என் நினைவுக்கு வருகிறார். பல்வேறுபட்ட சமூக நிலைமைகளில் இருந்து பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் தொடர்பாக, அப்பிள்ளைகளின் சிறப்பான முன்னேற்றத்திற் காக கல்வி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக என்னோடு இணைந்து அர்ப்பணத்துடன் செயற்பட்ட உதயசூரியனே இவர்.

சகோதரன் அருணாகரனிடத்தில் நான் கண்ட சிறப்பான ஒரு குணம் என்னவெனில் எந்த செயற்பாடாக இருந்தாலும் அமைதியாக இறுதி வரையில் அர்ப்பனத்துடன் செயல்படுவதே ஆகும். விசேடமாக வளப்பற்றாக்குறை, குறைவான வசதிகள் என எவை இருப்பினும் அவற்றைக் கருத்தில் கொள்ளாது அவர் முழு அர்ப்பணத்துடன் செயல்படுவார். அருணாகரன் அவர்கள் அமைதியுடன் அர்ப்பனத்துடன் எத்தனையோ தடைகளை தாண்டி வெற்றிகளை கைக்கொண்டவர். அமைதியான முதுமை பருவத்துடன் ஆன இக்காலத்தில் தான் வாழும் சூழலின் நோக்கம், குறிக்கோள்களை நன்றாக உணர்ந்து ஏனைய ஒரு ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொண்டு செயல்படுவதில் வல்லவர்.

இன்று இவ்வாறு ஓய்வு பெறும் அருணாகரன் அவர்கள் புத்தளம் கல்வி வலையம் சார்பாக கௌரவப்படுத்தல் கட்டாயமானது எனக் கூறிக் கொள்வதோடு அதற்காக செயற்பட்ட குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று யாழ்ப்பாணம் எனும் தூரப் பிரதேசத்தில் வசித்தாலும் அருணாகரன் அவர்கள் புத்தளம் கல்வி வலயத்திற்கு செய்த சேவைகளுக்காக ஒத்துழைப்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைரியத்தையும் வழங்கிய அவரது அன்பு மனைவி, அவரது மகள் என்போரையும் மரியாதையுடன் நினைவுப்படுத்தி நன்றி கூறிக் கொள்கின்றேன்.

இறுதியாக நேர்மையாக காரியதரிசியான முறையில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் எமது அன்பார்ந்த நண்பர் அருணாகரன் எனும் "எமது அருணன்" அவர்களுக்கு ஆரோக்கியமான சுகவாழ்வினை பிரார்த்திக்கின்றேன். புத்தளம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்விக்காக நீர் செய்த அளப்பரிய சேவை எம்முள் நிரந்தரமானது. அதற்காக உமக்கு வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும். புத்தளம் கல்வி வலயப் பிள்ளைகளின் அறிவு மட்டத்தை உயர்த்துவதற்கு நீரடைந்த சிரமமான, அர்ப்பணிப்பான சேவை உமது எதிர்கால வாழ்க்கை பாதை மற்றும் உமது பிள்ளைகளின் வாழ்வையும் சிறப்புறச் செய்யும்என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதுவரையில் அவர் செய்த அரச சேவை ஆண்டவருடைய ஆசீர்வாதம். அதேபோல் எதிர்கால ஓய்வு வாழ்வும் அதே ஆண்டவருடைய ஆசீர்வாதத்தால் நிறையப் பெற வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். இறை இயேசுவின் ஆசிர் எப்பொழுதும் உம்மைத் தொடர என் ஜெப வேளைகளில் உமக்காக பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் பணிப்பாளரின் வாழ்த்துரை


எம்.கமலேந்திரன் (SLEAS),
உதவிக் கல்விப் பணிப்பாளர்.
தமிழ்மொழி. ஆரம்பக்கல்விப்பிரிவு
வலயக் கல்விப் பணிமனை.புத்தளம்.


அரச பணியினை தனது சுயபணியாகக் கருதி சேவையாற்றிய புத்தளம் பிரதேசத்தின் மாபெரும் அரண் அருணாகரன். சிறந்த ஆளுமை மிக்கவர் சிறந்த பண்பாளர் அதிசிறந்த கல்வி ஆலோசகர். தனது 40 வருட கால கல்விப் பயணத்தின் நிறைவின் பின்னர் திருப்திகரமாக ஓய்வுப்பாதையினை நோக்கி பயணிக்கின்றார்.

இவர் புத்தளம் கல்வி வலயத்தில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பாட இணைப்பாளராக கடமையாற்றி கல்விப்புலத்திற்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார். கல்வி முதுமாணிப் பட்டத்தினை (Master of Education) பெற்றுள்ள இவர் முழு கல்வித் துறை சார் சமூகத்திற்குமே முன்மாதிரியாக திகழ்பவர். புத்தளம் கல்வி வலயத்தின் தமிழ் மொழி மூல பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு தொடர்பான வழிகாட்டல்களை மிகவும் சிறப்பாக செயற்படுத்தியவர். "ஆரம்பப்பிரிவில் அனைவரும் வாசிப்பர் எழுதுவர்". தமிழ்மொழி மூல ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு செயற்றிட்டம். ஓய்வுநிலை தமிழ்ப்பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் இஸட்.ஏ.ஸன்ஹீர் அவர்களின் வழிகாட்டலில் ஆரம்பப்பிரிவு பாட இணைப்பாளராக இருந்து இச்செயற்றிட்டத்தினை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தியவர். மேலும் ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர் டபிள்யூ.பீ.எஸ்.கே. விஜேசிங்க அவர்களின் ஆலோசனைக்கமைய அவருடன் இணைந்து இச்செயற்றிட்டத்தினை மேலும் உயிரோட்டமுடையதாக பாடசாலைகளில் நடைமுறைப் படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்தது. அருணாகரன் அவர்கள் ஆசிரியர் களின் தொழிற்தகைமைகளை விருத்தி செய்யக்கூடிய பல்வேறு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து புத்தளம் பிரதேசத்தின் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திக்காக செயற் பட்டவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை, ஆசிரியர் வாண்மைத்துவ பயிற்சி நிலையம் ஆகிய நிறுவனங் களின் சிறந்த வளவாளராக பங்களிப்பு செய்து கல்வித் துறை சார்ந்த வாண்மை மிக்கவர் களை உருவாக்க முன் நின்றவர். ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திக்கான செயலமர்வு கள், பாடநெறிகளில் வளவாளராகவும் வசதியளிப்பவராகவும் தொழிற்படுபவர். மேலும் ஆரம்பப் பிரிவு தொடர்பான மாணவர் செயற்பாடு, ஆசிரியர் செயற்பாடு என்பவற்றினை ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர்களுடன் ஒன்றிணைந்து சிறப்பாக நடைமுறைப் படுத்தியவர். இவர் வலயக் கல்வி அலுவலகத்தின் சேவையாற்றும் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்கள் மத்தியிலும் நற்பெயரைக் கொண்டவராகவும் விளங்கினார். இவரது கல்வித் துறை சார்ந்த சேவை மற்றும் அர்ப்பணிப்பு மிகவும் உயர்ந்த மட்டத்தில் பாராட்டப்பட வேண்டியது. இவருக்காக வெளியிடப்படுகின்ற இவ் மலர் மிகவும் பிரகாசமாக மலர்வதற்கும், ஏற்பாடு செய்யப்படுகின்ற பாராட்டு விழா சிறப்பாக நடந்தேறுதவதற்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துப்பா

ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறும்
திருவாளர் வெள்ளைக்குட்டி அருணாகரன் ஆசிரியர் அவர்களுக்கு உவந்தளிக்கும்
வாழ்த்துப்பா
வாழ்த்துகின்றோம்

ஆம்பல் அங்கே அம்பவள வாய்திறக்கும்
அம்புலியின் புன் சிரிப்பல் அல்லி முகம் மலரும்

கதிரவனின் வரவுகண்டு கமலம் முகம் மலரும்
கொக்கும் நாரையும் சிறகுலர்த்திக் குளிர் காயும்
வனப்புறு வயலும் வாவிகளும் நிறைந்த
வளமிகு மண்ணாம் துறைநீலாவணையில்

அன்பும் பண்பும் மிக்கவர் வெள்ளைக்குட்டியும்
அவர் பத்தினி இலட்சுமியும் பெற்றனர்
அறிவாற்றல் மிக்க அருணாகரன் என்னும்
பண்புடை மகனை

அருணாகரன் படிக்கும் வேளை பட்டாம் பூச்சி
ஆசிரியர் போற்றும் மாணவன் படித்தேறிப்
பட்டம் பெற்று இன்று சிறந்த ஆசிரியர்
கொள்வோர் கொள்வகை அறிந்து அறிவை
அள்ளிக் கொடுத்து மாணவர்களை வளர்த்து
ஏற்றி வைத்த ஏணியாய் நிமிர்ந்து நிற்கும் இவர்
அன்று பள்ளியில் கற்பிக்கும் வேளை
ஆசிரியை மஞ்சுளா என்னும் சிட்டுக் குருவியின்
விழியில் விழுந்து இதயம் நுழைந்தார்
காதல் தேரில் பயணித்த இருவரையும் பெற்றோர்
திருமணப் பந்தலில் உற்றார் சுற்றம் வாழ்த்த
மாங்கல்யம் புனைந்து மகிழ்ந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் இருவர் கருத்தொருமித்து
சொத்தாக ஒரு பெரும் முத்தினைப் பெற்று
இன்று அவர் உயர்ச்சியில் மகிழ்ந்து வாழ்கின்ற இருவரும்
ஆயிரம் ஆயிரம் மாணவர்களை வளர்த்து
இன்று அவர்கள் பல் துறையில் உயர்ந்து வாழ
மகிழ்ந்து வாழும் நல்லாசான் அருணா!
ஊர் என்றால் உருகிநிற்பார்
உற்றார் சுற்றம் உறவைப் பேணி
அற்றாருக்குதவும் அன்புடை ஆசிரியர்
கற்றோர் பலர் போற்ற கவினுடன் வாழும்
அருணாகரன் ஆசிரியர் வாழ்க! வாழ்க!
சீரும்திருவும் பொலிய இறையாசியோடு
நிறைவாகப் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாய்
அவர் குடும்பம் வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழ்க
வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழ்க!
என வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்துபவர்கள்

திரு திருமதி கயிலாயமூர்த்தி கலைச்செல்வி குடும்பத்தினர்
கனடா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச பணி நிறைவு பெறும் அருணகிரிக்கு எனது பாராட்டுக்கள்

மோட்சன்
சுவிற்சர்லாந்து

நான் முதன்முதலாக அருணகிரியை 1975 ம் ஆண்டு தைமாதம் ஆறாம்வகுப்பில் சந்தித்தேன். இரண்டு மாதங்களின் பின்னர் வேறு பாடசாலைக்கு மாற்றலாகி சென்றுவிட்டேன்.

மீண்டும் நான் உயர்தரம் கற்க 1980 ம் ஆண்டு எனது கிராமத்திற்கு திரும்பியிருந்த நேரம் மீண்டும் எங்கள் நட்பு துளிர்விடத்தொடங்கியது,

இந்த வருடத்துடன் எங்கள் நட்பு நாற்பெத்துநான்கு ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

அருணகிரி பழகுவதற்கு இனிமையானவர் மட்டுமல்ல மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு ஊக்கமூட்டக்கூடியவர்,

தன்னால் முடிந்த உதவிகளை மற்றவருக்கு செய்யத்தயங்காதவர்.

எனது முன்னேற்றப்பாதையில் சறுக்கிவிழுந்த போதெல்லாம் எனக்கு ஆறுதலையும் மனத்தைரியத்தையும் ஊட்டியவர்.

அவருடைய நல்ல பண்புகளுடன் சேவையிலிருந்து சேவையிலிருந்து ஓய்வுபெற்று மன அமைதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகிறேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இஸட்.ஏ. ஸன்ஹிர்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு நிலை)

*புத்தளம் கல்வி வலயத்தில் நீண்டகாலம் என்னுடன் சேர்ந்து பணியாற்றி ஓய்வுநிலையடையும் நண்பன் திரு அருணாகரன் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவில் வெளியிடப்படும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வெய்துகிறேன்.*

*மட்டக்களப்பு, துறைநீலாவணையைச் சேர்ந்த, பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான அருணாகரன், புத்தளம் கல்வி வலயத்தில் வடக்குக் கோட்டத்தில் அமைந்துள்ள கரைத்தீவு முஸ்லிம் வித்தியாலயத்தில் தனது முதல் ஆசிரிய நியமனத்தைப் பெற்றார். காலவோட்டத்தில் அங்கு விஞ்ஞான ஆசிரியையாகக் கடமை புரிந்த "மஞ்சுளா டீச்சர்" என மாணவர்களால் அன்பாக அழைக்கப்படும் அன்சிலா மியூரியல் அவர்களைத் தனது துணைவியாகக் கரம் பற்றினார். 1978 -1990 காலப்பகுதியில் கே.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் அப்பாடசாலை அதிபராகக் கடமையாற்றினார். பல்துறை வல்லுநர் "அஸீஸ் மாஸ்டர்" அவர்களுக்கு இவ்விருவரும் ஆசிரியர்களாக அமைந்தமை ஒரு வரப்பிரசாத மாகும். இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை பங்கேற்கச் செய்து அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதில் இத்தம்பதியினர் அவருக்கு உறுதுணையாய் அமைந்தனர் என்பதை கரைத்தீவு மக்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூருவர்.*

*சமூகக் கல்விப் பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் ஒருவர் அன்று எமது கல்வி வலயத்தில் இல்லாத நிலையில், 1990களில் நான் அப்பாடத்துக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதுண்டு. அருணாகரன் அவர்கள் சமூகக்கல்வி ஆசிரியராக இருந்ததனால் எனது பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்வார். கலந்துரையாடல்கள். முன் வைப்புக்கள் போன்றவற்றில் அக்காலப்பகுதியில் அவர் மிக முனைப்புடன் ஈடுபடுவார். தரவுகளையும் தகவல்களையும் இற்றைப்படுத்தி அவர் கலந்துரையாடும் பாணி அலாதியானது.*

*நுரைச்சோலை முஸ்லிம் வித்தியாலயத்தில் 1997 காலப்பகுதியில் இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பொன்றின்போது "எல் நினோ" பற்றி அவர் அளித்த விளக்கம் என்னை மிகவும் கவர்ந்தது. அன்றுமுதல் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளுக்கு அவரையும் வளவாளராக அழைத்துச்செல்வேன். இதுவே எமது நட்பின் தொடக்கம். அந்நட்பு குடும்ப உறவு வரை நீடித்தது. நம் குடும்பங்கள் இன்பம் துன்பம் அனைத்திலும் பங்கேற்றன.*

*பின்னர் சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகராக நான் நியமனம் பெற்றேன். தொடர்ந்து வந்த காலங்களில் வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் வெற்றிடம் ஏற்பட்டவேளை, முற்றிலும் தகுதியும் தகைமையும் கொண்ட அவருக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பதவி கிடைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்வெய்தினேன். அன்று முதல் நாம் ஒன்றாக இணைந்து பயணிக்கத் தொடங்கினோம். பாட இணைப்பாளர்களாகவும் நாம் ஒன்று சேர்ந்து சேவையாற்றினோம். எமது அவாக்களை புத்தாக்க சிந்தனைகளுடன் நடைமுறைப்படுத்த அவரின் அறிவும் ஆலோசனைகளும் தியாக உணர்வும் நட்பும் எமக்குப் பக்கபலமாக அமைந்தன. அதிபர், ஆசிரியர் களப்பயணங்கள் பலவற்றை நாம் ஒழுங்கமைத்து மேற்கொண்டோம். அக்காலப் பகுதியில் செயற்பாடுகளற்ற எந்தவோர் பயிற்சி வகுப்புக்களும் இருந்ததில்லை எனத் துணிந்து கூறலாம்.

புத்தளம் கல்வி வலயத்தில் எம்.எச்.எம்.எம். மஹ்ஷூப் மரைக்கார், எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார் ஆகியோர் கல்விப் பணிப்பாளர்களாக சேவையாற்றியுள்ளனர். இவர்கள் தேசிய மட்டத்தில் புகழ்பூத்த கல்விமான்களாவர். இவ்விருவரும் பல்துறை வல்லுநர்கள். சிறந்த சிந்தனையாளர்கள். அவர்களின் எண்ணங்களை எமது பாடசாலைகளில் விதைத்து வளர்த்தெடுக்க அருணாகரன் அவர்கள் அரும்பாடுபட்டார் என்பது மிகையல்ல. அவரின் கடின உழைப்பும் ஒத்துழைப்பும் மட்டுமின்றி பணிவும் கீழ்ப்படியும் பண்பும் காரணமாக அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவராகவும் அவர் திகழ்ந்துள்ளார். இன்றும் திகழ்கின்றார்.

புத்தளம் கல்வி வலய தமிழ்ப் பிரிவை **2012**இல் நான் பொறுப்பேற்ற பின்னர் எனது வலக்கரமாக இருந்து, அனைத்து செயற்பாடுகளுக்கும் தோளோடு தோள் கொடுத்து உதவிய அருணாகரனை இவ்வேளை நான் நன்றியுடன் நினைவுகூருகிறேன். கால நேரம், சாதி சமயம் என எதனையும் கருத்திற்கொள்ளாது, அனைத்துக்கும் அப்பால் நின்று என்னுடன் இணைந்து பணியாற்றினார். தமிழ்ப் பிரிவின் பணிகளுக்கும் வெற்றிகளுக்கும் பின்னணியில் அவர் இருந்தார்.

கல்விப் பணிமனையின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்டு, எண்ணற்ற செயலமர்வுகளை நாம் நடாத்தியுள்ளோம், களப்பயணங்கள் மேற்கொண்டோம், "வித்தியாலயம்" என்ற பெயரில் புத்தளம் பிரதேசக் கல்வி வரலாற்றை ஆவணப்படுத்தினோம். "பாடசாலை முகாமைத்துவ ஆலோசனைகள்" உட்பட பல கையேடுகளையும் நூல்களையும் வெளியிட்டோம். பாடசாலைகளில் பல்வேறு மாணவர் கழகங்களை உருவாக்கி மாணவர் ஆளுமை விருத்திக்கு உரமிட்டோம். தமிழ் மொழித் தின விழாக்கள் உட்பட போட்டி நிகழ்ச்சிகளில் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தினோம். இவை அனைத்திலும் பங்கேற்று, ஆலோசனைகள் வழங்கி, அவற்றை நடைமுறையைச் சாத்தியமாக்கி வெற்றிபெற வழிகோலியவர் நண்பர் அருணாகரன் ஆவார்.

பாடசாலையொன்றில் ஆரம்பப் பிரிவு பிரதான இடத்தை வகிக்கின்றது. மாணவர்களின் ஆளுமைக்கான அடித்தளம் அங்குதான் இடப்படுகின்றது. ஆரம்பப் பிரிவுப் பாட இணைப்பாளராக அருணாகரன் பொறுப்பேற்ற பின்னர் எமது கல்வி வலய தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு உத்வேகம் பெற்று பயணிக்கத் தொடங்கியது. ஆசிரியர்கள் சினேகபூர்வமாக செயலாற்றத் தொடங்கினர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்பனை வளம், எழுத்தாக்கத் திறன், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல் போன்றனவற்றை வளர்க்கவென, **2010** காலப்பகுதியில் சிறுகதை எழுதுமாறு மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். அவற்றில் தெரிவுசெய்யப்பட்ட சிறுகதைகள் தொகுக்கப்பட்டு ஒரு புத்தகமாக வெளியிடப்பட்டது. மேலும், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் எழுத்தறிவையும் வாசிக்கும் திறனையும் மேம்படுத்த **2017** இல் நாம் மேற்கொண்ட **2020** ஆரம்பப் பிரிவில் அனைவரும் வாசிப்பர் எழுதுவர்" என்ற செயற்றிட்டத்தை அமுலாக்கினோம். இச்செயற்பாடுகளுக்கு அச்சாணியாக நின்றுழைத்தவர் திரு அருணாகரன் அவர்களே.

ஆசிரியர்கள் என்றென்றும் மாணவர்களாக இருக்கவேண்டும். தேடித் கற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். புதியன புகும்போது நல்லவற்றை ஏற்று அதற்கேற்ப இயைபாக்கம் அடைய வேண்டும். கல்விப் புலத்தில் மேலும் மென்மேலும் கற்று தனது தகைமையை மேம்படுத்த வேண்டும். தமது ஆற்றல்களையும் அனுபவங்களையும் ஒன்றிணைத்து நல்வழி காட்ட வேண்டும். இவ்வனைத்துப் பண்புகளும் ஒருங்கியமைந்த உரிய குணமிக்க ஒரு நல்லாசான் அவர்.

அரச பணியில் ஓய்வு நிலை என்றபோதும் கல்விப் பணியிலிருந்து அவர் ஓய்வுபெறமாட்டார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதற்கான தேக ஆரோக்கியத்துக்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். நண்பர் அருணாகரன் தனது குடும்பத்துடன் வளமாக வாழப் பிரார்த்திக்கின்றேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வு நிலையில் மகிழ்ந்திருப்பாய்

திரு. ஆர். எஸ் இம்மானுவேல் புஸ்பராசா,
அரசபணி நிறைவு உதவிக்கல்விப்பணிப்பாளர்
புத்தளம்

மீன்பாடும் தேன் நாட்டின்
கவிதை வாழும் துறைநீலவானை
வான் முட்டும் அறிஞர் வாழ்
தமிழ் வளரும் தனிநிலம்தான்
ஈன்ற மகன் அருணாகரன்
ஈடில்லை அவன் நட்புக்கு
ஈன்ற தாய் தந்தையுடன்
நாமிணைந்து அகமகிழ்வோம்..

மெதடிஸ்த மிஷன் தந்த
முதல்மட்ட அறிவுசேர
இடைநிலையில் துறைநீலவானை
கலாசாலை பட்டைதீட்ட
இடைநிலையில் அல்மனள்
அறிவுயர்த்தி புடம் போட
பல்கலைக் கழகமது அழைத்து
மெருகூட்டி பட்டம் சூடியதே..

ஆண்டவன் தான் அழைத்தானோ
ஆய கல்விப் பணி செய்ய
வரகவி வாழ்ந்த ஊரில்
வந்து பதித்தான் முதற்பாதம்
பின்ன இலவங்குளம் சென்று
மடைமை இருளகலப் பணிசெய்தான்
உரிய புகழ் ஆங்கும் பெற்று
கல்விப் புலத்தில் துலங்கிட்டான்..

இல்லறத்தில் நல்லறமாய்
"அன்சிலா"வைக் கரம் பிடித்தான்
ஆசைக் கொன்றாய் ஆதர்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியுரி மகள் வந்துதித்தான்
செல்வ மகள் வளர வளர
"அருணா"வும் வளர்ந்தான் அறிவுலகில்
கல்விப் புலத்தில் சிறப்புடனே
மின்னலென மிளிர்ந்திட்டான்..

தொண்ணூற்றெட்டில் ஆசிரியர்க்கு
ஆசிரியராய் ஆகி நின்றான்
பன்னூல் கற்ற கல்வி ஏணியில்
உச்சம் கண்டு உயர்ந்திட்டான்
பாட இணைப்பாளராகி பயனுற
பணிதனை புத்தளம் வலயத்தில்
கனிதரும் நிலைக்கு உயர்த்தி
கண்ணியத்தைப் பெற்றிட்டான்..

குடும்பத்தில் முதலாம் பிள்ளை
வகுப்புகளிலும் அதையே கண்டான்
கடும் உழைப்பின் விளைவினாலே
உயர் விரிவுரையாளரானான்
திறந்த பல்கலைக்கழக மென்ன
தேசிய கல்வி நிறுவக மென்ன
அனைத்தும் உள்ளீர்த்து இவனை
உரிய பயன் பெற்றனவே..

பல்லாண்டு பணி செய்தே
பரிசேற்றான் நல்லாசானென
எல்லோர்க்கும் முகம்மலர
பகிர்ந்திட்டான் அன்பை அள்ளி
வல்லோனாய் மாறி நின்று
வரிந்துழைத்தான் கல்விப் புலத்தே
நல்லோனே நற்குணமே
நல் வாழ்த்தை ஏற்றிடுவாய்..

வலயத்தின் தமிழ்ப்பிரிவில்
தக்க பணி தானும் செய்தான்
கலயத்துக் கஞ்சி என
ஆரம்பப் பிரிவினிலே பசி தீர்த்தான்
இமயத்தின் உயரம் போல
உயர்ந்த நற்பண்பு கொண்டோனே
இச்சமயத்தில் வாழ்த்துகிறேன்
ஓய்வு நிலையில் மகிழ்ந்திருப்பாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Message for Magazine "Arunan"
## A Wishes to a Dedicated Educator

Shivanantham Sritharan(SLEAS Class I)
Zonal Director of Education,
Paddiruppu,, Zonal Education Office,
Kaluwanchikudy.Batticaloa

**"Arunan: A Rising Sun in Education"** As the sun rises each morning, casting its warm glow upon the world, so too has Arunan illuminated the lives of countless students throughout his remarkable 35-year career in education. It is with great pleasure that I contribute to this wishes to a man who has been a beacon of light in the field of Education.

I had the privilege of studying alongside V.Arunakaran Annan at the University of Jaffna, where I witnessed firsthand his unwavering commitment to learning and his exceptional qualities. His cooperative spirit, genuine brotherhood, and helpful demeanor made him a beloved colleague and friend.Mr.V. Arunan Annan's humanitarian approach to education has undoubtedly inspired countless individuals to reach their full potential.

As Aruna Annan embarks on this new chapter of his life, I extend my heartfelt wishes for his well-being, happiness, and continued success. May his days be filled with joy, good health, and prosperity. I also express my hope that his dedication to education will continue to benefit the Batticaloa community and the Eastern Province as a whole.

Aruna Annan, thank you for your invaluable contributions to the field of education. Your legacy will undoubtedly endure for generations to come.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனதில் நீங்காத ஆளுமை மிக்க ஆசிரியரைப்பற்றி

M.H.M.Nawas
Ex - Teacher centre manager
Puttalam.

புத்தளம் கல்விப் பிரதேசத்தின் வலயக் கல்விப் பணிமனையில் பாட இணைப்பாளராக, ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி 2024 அக்டோபர் 12ஆம் திகதி அரசு பணி ஓய்வு பெறுகின்ற எமது மனதில் நீங்கா இடம் பிடித்துள்ள ஆளுமை மிக்க கல்விமான் அருணாகரன் அவர்களுடைய கல்விப்பணி தொடர்பாக ஒரு சில விடயங்களை இப்பதிவில் இடுவதையிட்டு மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்/துறைநீலாவணையில் ஆரம்ப கல்வி முதல் கல்வி பொது தராதரம் சாதாரண தரம் வரை கல்வி கற்று, பின் மருதமுனை அல்மனார் மத்தியக் கல்லூரியில் கல்விப் பொது தராதரம் உயர்தரம் வரைக் பாடசாலைக் கல்வியை கற்றார்.அதன் பின்னர் உயர் கல்வியின் இளம் கலைமாணிப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டார்.

மாவட்ட ரீதியிலான ஆசிரியர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றி புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள பு/கரைத்தீவு முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் 1984.12.27ஆம் திகதி ஓர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அப்பாடசாலையில் சேவையாற்றிய பின் பு/எலுவாங்குளம் முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கும் சேவையாற்றினார்.

இதே வேளை இவர் புத்தளம் வலயக்கல்வி காரியாலயத்திற்கு ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்பட்டு மிகவும் சிறந்த பாராட்டத்தக்க சேவையினை வழங்கி வந்தார். இதனைத் தொடர்ந்து இவர் ஆரம்பக் கல்விப் பாட இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டு ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு தன்னாலான பல்தரப்பட்ட செயலற்பாடுகளையும் முன்வைத்து அதனை ஆசிரியர்கள் மூலம் நடைமுறைப்படுத்தி ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு நீங்கா இடத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

இவருடைய கல்வியின் சிந்தனைப் போக்கு,நவீன கல்வியின் தேடல், தொடர்ந்தும் கல்வியில் தன்னை இற்றைப்படுத்தல் காரணமாக தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி டிப்ளோமா பட்டப்பின் படிப்பையும் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப் படிப்பையும் பூர்த்தி செய்தார்.

நான் ஆசிரிய ஆலோசகராக,சிரேஷ்ட போதனா ஆசிரியராக, ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளராக கடமையாற்றியக் காலத்தில் இவருடையக் கல்வி சம்பந்தமான சிந்தனைப் போக்கு மற்றும் ஆசிரியர்களுடன் எப்பொழுதும் இனிய முகத்தோடு பழகும் விதம், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களுக்கான சிறந்த வழிகாட்டல் போன்ற பற்பல அம்சங்களை கருத்திற் கொண்டு இவரை என்னுடைய சேவையின் ஒரு பங்காளராக இணைத்துக் கொண்டேன். உண்மையாக கூறப்போனால் மேற்படி சேவைகளை திறம்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில் இவருடைய பங்களிப்பு மிகவும் அளப்பரியது.

இவர் எனது சேவைக் காலத்தில் தேசியக் கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியில் சமூகக் கல்வி,ஆரம்பக் கல்வி போதனாசிரியராகவும், திறந்த பாடசாலை போதனாசிரியராகவும் ஆசிரியர்களுக்கான தொடருறு கல்வியின் போதனாசிரியராகவும் கடமையாற்றினார். வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள முன் பள்ளிப் பருவ அபிவிருத்தி அதிகாரி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட முன்பள்ளி பருவ சான்றிதழ் கற்கை நெறி, டிப்ளமோ கற்கை நெறிகளின் வளவாளராக கடமையாற்றினார். தொடர்ந்தும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

ஆசிரியர் மத்திய நிலையத்தில் கல்வி அமைச்சு, வடமேல் மாகாணத் திணைக்களம், புத்தளம் வலயக்கல்விப் பணிமனை மற்றும் யுனிசெப் ஆகியவற்றால் நடாத்தப்பட்ட பல்வகையான செயற்திட்டங்கள், ஆசிரியர்கள்,அதிபர்கள் ஆகியோரை பயிற்றுவிக்கும் பயிற்சிகளிலும் ஒரு வளவாளராக கடமையாற்றினார்.

மேலும் ஆசிரியர்களின் வினைத்திறன்காண் பயிற்சி நெறியின் வளவாளராகவும், செயல்நிலை ஆய்வு மற்றும் கள ஆய்வு ஆகியவற்றின் வளவாளராகவும் ஓர் ஆய்வாளராகவும் செயற்பட்டார். தொடர்ந்தும் அச் சேவையினை செய்து வருகின்றார்.

தற்பொழுது திறந்தப் பல்கலைக்கழகத்தின் புத்தளம் கற்கை நிலையத்தில் கல்விமானி(B.Ed) , B.A (Hons)in tamil language, tamil teaching Advance certificate in social science ஆகிய பாடநெறிகளின் வருகைத் தரு விரிவுரையாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

கல்வி அமைச்சு மற்றும் வடமேல் மாகாணத்தில் நடாத்தப்பட்ட பல கருத்தரங்குகளிலும் பயிற்சி நெறிகளிலும் எனது பிரதிநிதியாக கலந்துக் கொண்டு அங்கு கொடுக்கப்பட்ட பயிற்சியையும் தகவல்களையும் மிகவும் நேர்த்தியாக முன் வைப்பதில் மிகவும் சிறந்து காணப்பட்டார். அதேவேளை ஏனைய கல்வி வலயங்களிலும் ஆசிரியர் மத்திய நிலையங்களிலும் வளவாளர் தேவையேற்படும் போது அங்கு சென்று தனது கடமையை திறம்பட செய்து பாராட்டும் பெற்றுள்ளார்.

கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகவும் வட மாகாணத்தைப் புகுந்த இடமாகவும் கொண்டு புத்தளம் பிரதேசத்தின் மாண்புமிகு கல்வியாளராக கடமையாற்றிய திரு. வி .அருணாகரன் அவர்களுடைய அரச பணி ஓய்வு நிலையை அடைந்தாலும் தம் கல்வியின் பணி தொடர நீண்ட ஆயுளையும் உடல் ஆரோக்கியத்தையும் வழங்க இறைவனிடம் வேண்டிக்கொள்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

அ. பங்கையற்செல்வன் அதிபர்
கிளி/ முருகானந்தா கல்லூரி.
முரசு மோட்டை, கிளி நொச்சி

எமது முது கல்விமானி கற்கையை நிறைவு செய்து இன்று 12 ஆண்டுகள் கடந்தும் அருணாவின் தொடர்பும் நட்பும் நீண்டு நிலைப்பதில் மிகவும் மகிழ்ச்சி.

திரு. வி.அருணகரன் அவர்கள் மட்டக்களப்பு துறை நீலாவணையில் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமானிப் பட்டத்தை பெற்றுக்கொண்டு புத்தளப் பிரதேசத்தில் தனது பணிக்காலத்தில் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர். இளம் வயதிலேயே ஆசிரியர் பணியில் இணைந்து கொண்டதால் 40 ஆண்டுகள் கல்விப் புலத்தில் நிறைவான பணி செய்தமை வெளிப்படையானது.

"பிறரை நேசிப்பதும் பிறரால் நேசிக்கப்படுவதும்" வாழ்வின் மிகப் பெரிய சொத்தாகும். அந்த சொத்தை தன்வசம் அதிகம் வைத்திருப்பவர் அருணா! அவரது நட்பும் அன்பும் ,இனம், மதம், மொழி,பிரதேசம் கடந்தது. பெரும்பான்மையான மக்கள் வாழும் பகுதிகளில் தமிழ் மொழி பேசி சமூகங்களுக்கு பணியாற்றுவதென்பது மிகவும் சவாலானது, அர்ப்பணிப்பு மிக்கது .

அத்தகைய சூழலில் தனது அன்பாலும் ,நட்பாலும் எல்லோர் மனங்களையும் வென்று கல்வித் தாகம் உள்ள சிறார்களின் தேவையைப் பூர்த்தி செய்தவராக அருணா திகழ்கிறார் .அது மட்டுமின்றி தனது துறை சார்ந்த ஆசிரியர்களை மிகச் சிறப்பாக வழிநடத்திய ஒருவராக தன்னை தகைமைப்படுத்திக் கொண்டார். பிறர் உயர்வு கண்டு மகிழ்வதும், பாராட்டுவதும் ,பிறர் துன்பம் அறிந்து அதற்காக மனம் வருந்துவதும் அருணாவிடம் உள்ள மிகப்பெரிய மனித நேயப் பண்பாக எப்போதும் நான் உணர்கிறேன்.

அருணா தனது 40 ஆண்டுகால கல்விப் பயணத்தில் சிறந்ததொரு வழிகாட்டியாகவும், கல்விசார் எழுற்சிக்கு வித்திட்ட சிறந்த மனிதராகவும், இனங்கள் ,மதங்கள் என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் கட்டி எழுப்பும் ஒரு தூதுவராகவும், பணியாற்றியமை இங்கு முக்கியமானது

நான் கிளி நொச்சியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எனது செயல்பாடுகள் பற்றி அதிகம் அக்கறையும்,விருப்பம் கொண்டு அடிக்கடி உற்சாகப்படுத்தும் ஓர் உற்சாக பானமாக எனக்கு அவர் இருந்திருக்கிறார். என்னைப் போல் பலருக்கும் உற்சாகமூட்டி எமது பணியினை சிறப்பாக செய்ய ஒரு தூண்டுகோலாக அவர் இருப்பது எமக்கு மிக மகிழ்ச்சியானது.

திரு வி அருணா அவர்கள் மட்டக்களப்பில் பிறந்து, புத்தளத்தில் பணியாற்றி, யாழ்ப்பாணத்தில் குடி இருந்தவர். இதன் மூலம் ஓர் பிரதேச வலைப் பின்னலை உருவாக்கியவர் என்றால் அது மிகையல்ல. தனது வாழ்க்கை காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு காலம் கல்விப் பணியாற்றி மணிவிழா காண்பதென்பது அசாத்தியமானது .அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் வாய்க்காத ஒன்று. அருணாவிற்கு அது வாய்த்த பெரும் பேறாகும்.

தனது பணிக்காலத்தில் பல்லாயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டி பல நூறு ஆசிரியர்களுக்கு வான்மைத்துவ திறன் வளர்த்து பணி ஓய்வு பெறும் நாளில் அவரை வாழ்த்தக் கிடைத்தமை எனது பெரும் பேறாகும். அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும், கல்விப் பணியில் தொடர்ந்து எமது சமூகத்திற்கு கலங்கரை விளக்கமாக அருணா ஒளிபரப்ப வேண்டும் என வாழ்த்துகிறேன். நீண்ட சுகத்துடனும் நிறைந்த செல்வத்துடனும் உறவுகள் புடை சூழ வாழ்ந்து மகிழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.



CS CamScanner



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டு நகரின் முத்து

திருமதி ஏ. ஆர். அதவியா
ஆசிரிய ஆலோசகர் - தமிழ்

மீன் பாடும் தேன் நாட்டின் முத்தாய்
துறை நீலாவணையின் சொத்தாய்
பிறந்தது ஒரு முத்து (1964) அது
அருணா என்ற வித்து

சிரித்த முகம் சாந்த குணமும்
எளிய தோற்றமும் வலியை இதயமும்
பூட்டிய பெட்டகமாய் - என்றும்
பொறுமையே உருவமாய்...

கல்விப் பணிமனையே இல்லமாய் அதன்
வெற்றியை எண்ணும் உள்ளமாய்
கடமையாற்றி ஓய்வு பெறும்
அருணா என்ற கருணை மழையே!

கடிந்து கொள்ளும் போக்கும் இல்லை
கைவிட்டு ஒதுங்கும் குணமும் இல்லை - ஆசிரியர்களை
கையாள்வதில் நீங்கள் ஒரு ஞானி
கைதேர்ந்த உளவியல் மேதை

ஆசிரியர் பணியில் அன்புள்ள ஆசானாய்
ஆலோசகர் சேவையில் அருமையான வழிகாட்டியாய்
நிர்வாகப் பணியில் நுணுக்கமான சிற்பியாய்
நட்புக் கொள்வதில் வாஞ்சை மிக்க நண்பனாய்

நான்கு தசாப்தங்கள் ஓ... நான்கு தசாப்தங்கள்
நிறைவாகக் கடந்து விட
மணிவிழா காணும் உங்களை
மனம் திறந்து வாழ்த்துகிறேன்

வாழ்க என்றும் வளமுடன்
வட்டம் இன்றி நலமுடன்
வீழ்க வாழ்வின் தொல்லைகள்
வளர்க உம் புகழ் பல்லாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமை நிறைந்தஇனிய நண்பன்...

கவிஞர் கனகசூரியம் யோகானந்தன்
அதிபர் அரசபணி நிறைவு
திருகோணமலை.

நட்பு ஆழமானது என்பர். அந்தவகையில் எனக்கும்
அருணகிரிக்குமான நட்பு 1983 களில்
தும்பறை வளாகத்தில் தொடங்கி,
பேராதனைப் பல்கலைக்கழகம் வரை
நீட்சிபெற்று இன்றுவரை மாறாது தொடர்கிறது.

ஆளுமை கொண்ட கல்வியாளனாக,
மடைமாற்றம் செய்யும் பாட இணைப்பாளனாக அருணகிரியைக்
காணுகின்றேன். அவருடைய கல்விச்
சிந்தனைகள் வாண்மைவிருத்தி,
பயிற்றுவிப்பின் மூலம் கிடைத்திருக்க
வேண்டும். என்பது எனது நம்பிக்கை.

மட்டக்களப்பில் பிறந்து, புத்தளத்தில்
ஆசிரியர், பாட, இணைப்பாளராகக்
கடமையாற்றி, யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்ததன் மூலமாக,
அனைவருடைய நன்மதிப்பினைப் பெற்றுள்ளார். சிறந்த வளவாளராகக்
கடமையாற்றியதன் மூலமாக தமிழ், முஸ்லீம் ஆசிரியர்கள் மத்தியில்
பேரபிமானம் பெற்றவராகத் திகழ்கிறார்.

நட்பின் மகிமையை உணர்ந்து கால, நேர, வர்த்தமானங்களுக்கு அப்பால் பயணம்
செய்து, நட்பினை மேலோங்கச் செய்யும் இனிய நண்பனாகவும் பல
தடவைகள் அவரைக் கண்டிருக்கிறேன்.

தன் கடமையைச் சரிவரச் செய்பவன்
எப்பொழுதும் அழகுடையவனாகவே
விளங்குவான். என்பது நிதர்ஷனமானது. செய்யும் தொழில்மீது எவன் ஒருவன் பக்தி
கொள்கிறானோ அவன் துன்பங்கள்
அடைவதில்லை. என்பார்கள். நண்பன்
இக்கூற்றிற்கு மிகப்பொருத்தமானவனாகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
நாங்கள் கல்வி கற்றகாலம்.என்றுமே
உள்ளத்திற்கு இனிய நினைவுகளை
சுமந்துவரும் காலம் என்பேன்.அக்கால உரையாடல்கள்,
விரிவுரை மண்டப நினைவுகள் என்றுமே பசுமையானது.

தான் பெற்றவற்றை,கற்றவற்றை
மற்றவர்க்குச் சொல்லிக் கொடுப்பதில் நண்பன் பின்நின்றதில்லை.அறிவூட்டும்
உரையாடல்களைக் கேட்பதற்காக சுற்றியிருப்போம்.

எல்லோரும் ஓய்வு பெற்றுவிட்டோம்
என்பதை மாற்றுச்சிந்தனை மூலமாக
பணிநிறைவு பெற்றுவிட்டோம்.என்பார் .உண்மையில் ஓய்வு என்பது மனிதனின்
மரணம்தானே! வாழும் வரை மனிதன் இயங்குசக்திதானே!

பிறரோடு உரையாடி மகிழ்வதென்பது
எல்லோருக்கும் வாய்த்து விடுவதில்லை.சிலருக்கு மட்டும்
முழுமையாகப் பொருந்திவிடுகிறது.
அந்தவகையில் நண்பன் அருணகிரி சிறப்பிற்குரியவர்.

தான்சார்ந்த மொழிமீதும்,இனத்தின்
மீதும்,இலக்கியங்கள் மீதும் அசையாத பற்றுறுதி கொண்டவராக
பல தடவை கண்டிருக்கிறேன்.கல்வி
உலகில் சிந்தனைத் தெளிவும்,புதியகோணத்தில் சிந்திக்கும் திறண்
கொண்டவர்களால் மாத்திரமே வெற்றிபெற முடியும்.

மரபுசார்ந்த கற்பித்தல் முறைகளில்
இருந்து ஆசிரியர்களை மாணவர்களின் சிந்தனை,மகிழ்ச்சி
சார்ந்த கற்பித்தல் முறைகளுக்கு,
புத்தளவலய ஆசிரியர்களை நேர்
மனப்பாங்குடன் செயற்பட பலதடவைகள் ஊக்கமளித்த ஒருவராகவே காணுகின்றேன்.

ஆசிரியர்களுக்கான சிறியளவிலான சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து
அவர்களோடு அந்நியொன்னியமாக உறவாடி சாதித்த பெருமை இவருக்குரியது.

பணிநிறைவென்பது ஒவ்வொருவருக்கும் உரித்தானது.
ஆற்றல் மிக்கவர்கள் விலகிச் செல்லும் போது,அவர்களுடைய
ஊடாட்டம் இல்லாமல் போகும் காலங்களில் இடைவெளிகள்
உருவாகிவிடுவதும், தவிர்க்க முடியாதது.

இடைவெளிகள் இட்டுநிரப்பப்பட
வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.நண்பன் அருணகிரி
தேகாரோக்கியத்துடனும்,மகிழ்ச்சியோடும் பணிநிறைவுக்காலம் கழிந்து
போக மனதார வாழ்த்தி நிற்கின்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவைக்கு உதாரண புருஷர் அருணாகரன் Sir

A.K.Naimulla SLPS 1 BA Dip.Edu.PGDEM
Principal
Karaitiv Muslim Maha Vidyalaya

கரைத்தீவு, எலுவன்குளம் கிராம மக்களால் அருனா Sir; என அன்பாக அழைக்கப் படும் V. அருனாகரன் Sir தனது பணியை கரைத்தீவு பாடசாலையில் தொடங்கி எலுவன் குளம் பாடசாலையில் தொடர்ந்து அதன் பிறகு ஆசிரிய ஆலோசகராக , பாட இணைப்பாளராக சேவையாற்றி 2024.10.11 ஆம் திகதி தனது வயது நிறைவு காரணமாக பணி நிறைவு பெற்றிருக்கின்றார்.

மேற்படி இரண்டு பாடசாலைகளிலும் இவருடன் இணைந்து பணியாற்றியவர் என்ற வகையில் இவர் சம்பந்தமாக சில வரிகளை எழுத வேண்டும் என்ற எண்ணம் கொண்டதால் இங்கு பதிவிடுகிறேன்.

இவர் பணியை தொடங்கியது கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்திலாகும். இவர் பணியை தொடங்கிய காலம் கல்வியின் பயனை அறியாத சவால் நிறைந்த கால கட்டம். எட்டாம் ஒன்பதாம் வகுப்புக்களுடன் பாடசாலை கல்வியை இடைநிறுத்திய அக் காலத்தில் அச் சவாலை வெற்றி கொண்டு சகல மாணவர்களையும் சாதாரண தரம், உயர்தரம் வரை கல்வியைப் பெற சாதகமான அடித்தளமிட்டார். அதனால் இன்று "பல துறைகளிலும் உயர் கல்வியை பெற்ற அல்லது பெற்றுக் கொண்ட பெரும் கூட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது". என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு கோடியில் பிறந்து வடமேல் மாகாணத்தில் ஒரு கோடியில் அமைந்துள்ள மேற்படி பாடசாலையில் பணியாற்றி கல்வி பயின்ற மாணவர்களின் எழுச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் தன்னகத்தே சில பண்புகளை உருவாக்கிக் கொண்டதை நான் நேரடியாக அனுபவித்திருக்கின்றேன்.

எல்லா மாணவர்களும் கல்வி வாய்ப்பை பெற வேண்டும் என்ற அவாவினால் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பிள்ளைகளின் கல்வி பெறும் வாய்ப்பினை உறுதி செய்ததுடன், மின்சார வசதி, நீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத கஷ்டமான கால கட்டத்திலும் பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கரிசனையேபடு சேவையாற்றியமை இன்னும் என் மனக்கண்முன்னே காட்சி தருகின்றது. மேலும் தொலைதொடர்பு வசதிகள் இல்லாத அக் காலத்தில் தனது அறிவை இற்றைப்படுத்திக் கொண்டு புத்தாக்க சிந்தனையுடன் பாடசாலை மாணவ சமுதாயத்தை வழிநடத்தியதுடன் தனது கற்பித்தல் பணியை சுவைபட மேற்கொண்டதால் மாணவர் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வருடமும் பாடசாலை தவணையின் தொடக்க நாள் மற்றும் இறுதிநாள் என்பவற்றை இப் பாடசாலையிலேயே தொடங்கி இப் பாடசாலையிலேயே முடிப்பார். கடந்த சேவை முன் ஓய்வு விடுமுறையைக் கூட இப் பாடசாலையிலே தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தனது பணியை மேற்கொண்டதால் மக்கள் மனங்களில் நீங்காத இடத்தினை தக்கவைத்துக் கொண்டார். இதனால் கல்வி தொடர்பான ஆலோசனைகள், சந்தேகங்கள், மாணவர்களுக்கான வழிகாட்டல்கள் என்பவற்றை இச் சமூகம் இவரிடமிருந்தே பெற்றுக் கொள்ள முனைவது இவர் இப் பணியை சிறப்பாக செய்தார் என்பதற்கு வலு சேர்க்கிறது.

மேலும் இச் சமூகத்தின் ஒரு அங்கத்தவர் போல இவர் அழைக்கப்படாத வைபவங்களே இல்லை என்ற அளவிற்கு சமூகத்துடன் பின்னிப் பிணைந்து இருக்கமான உறவை கட்டியெழுப்பிக் கொண்டார். எனவே ஆசிரியர் என்ற பதவிக்கு உதாரணப் புருஷராக திகழ்ந்த அருனா Sir ( V அருனாகரண் ) **2024.10.11** ஆம் திகதி தனது பணியை நிறைவு செய்து கொண்டார். அவரிடம் காணப்படுகின்ற அலாதியான ஆற்றலும், வழிகாட்டலும் கல்வி சமூகத்துக்குப் பயனுள்ளதாக அமையவும், அவர் பூரண ஆரோக்கியத்துடன் நீடுழி வாழவும் இறைவணைப் பிராத்திக்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகன்

அதிபர், ஆசிரியர்கள்
புனித சாந்த மரியாள் ரோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலயம்
புத்தளம்

மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மண்ணின் மைந்தனே! புத்தளம் எனும் உப்பளத்தின் புகழ்பெற்று விளங்கும் ஆசிரியப் பெருந்தகையே!

ஆசிரியனாய், ஆலோசகனாய், விரிவுரையாளராய், ஆரம்பப் பிரிவு இணைப் பாளராய் நண்பனாய், விரும்பப்படுபவனாய், தந்தையாய் ,மூத்தோனாய் ,வரலாறு கற்பிக்கும் ஆசானுக்கு வரலாறுகள் பல.

இலங்கை வரலாற்றைக் கற்கும் மாணவர்களை இலக்கை நோக்கி ஓட வைக்கும் இலட்சியவாதி

அறிவு ,ஆளுமை, ஆற்றலைத் தட்டி எழுப்பி அன்புடன் பணிவு கூறும் பண்பாளன்.

ஆசிரியர் எனும் படகேறி கரைசேரும் அகவை அறுபதில் மணி விழா நாயகனே! நீண்ட ஆயுள் நிறைந்த மகிழ்ச்சி நலமும் செல்வமும் குறையாது பெற்றிடுவாய்.

அகவை அறுபது அரச ஊழியனுக்கே!

ஆயிரம் பணிகள் ஆசான் உமக்கு இன்றும் என்றும் இன்னும் தொடர இருக்கின்றது உம் வாழ்க்கைப் பயணத்தில்...

புனித மரியாள் பாடசாலைப் பொறுப்பாளனாய்
பல வளர்ச்சிகளை நாம் காண
பணிபுரிந்த உங்களை வாழ்கவென பாராட்டி
வாழ்த்திப் பணிந்து நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருணாகரன் எனும் விருட்சம்

அதிபர்
திரு எம். எல். எம்.றிபாய்தீன்
புழுதிவயல் மு .வித்தியாலயம்

புத்தளம் கல்வி வலயத்தின் மூத்த ஆலமரமொன்று ஓய்வு பெற்றபோது அவரது சேவையைப்பாராட்ட வேண்டிய சில வரிகள்

ஆசிரியராக:- அருணாகரன் என்ற அழகிய பெயருடன் ஆண்டுகள்பல அன்பான ஆசிரியராய் உம் பணியை திறம்பட திறமைவாய்ந்தனவாகச்செய்தீர்

அதனைத்தொடர்ந்து ஆசிரிய ஆலோசகராக உருமாற்றமடைந்து புத்தள கல்வி வலயத்தின் சகல பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர்களை அன்பாய் அரவணைத்து ஆலோசனைகள் பல வழங்கி ஆசிரியப்பணியை ஆர்வமாய்ச் செய்ய வழிவகுத்த முத்து நீர் எனலாம்.

ஆசிரிய மத்திய நிலையத்தின் இதவடிவ செயற்பாட்டின் போது இதமாய் பேசி இனிக்க கற்றுக்கொடுத்து இதய பூர்வ செயற்பாட்டை இனிமையாக்கினீர் எனலாம்.

இன்னும் பாட இணைப்பாளராக இணைந்து கருத்தரங்குகள், களப்பயணங்கள், கல்வி சார் நடவடிக்கைகளில் கருத்துடன் செயற்பட்டு கண்ணியமாய் கடமையைச் செய்தீர் இன்றோடு உம் பணி முடிவடையவில்லை இன்னும் உம்பணி எமது புத்தள கல்வி வலயத்திற்கு மட்டுமல்லாது இவ்வைகத்திலுள்ள அனைத்து கல்வித்தாகம் உள்ள அனைவருக்கும் சென்றடைய இறைவனை வேண்டுகிறேன்.

தொடரட்டும் உம்பணி
ஒலிக்கட்டும் உம் குரல்
ஓங்கட்டும் உம்கரம்

என்றும் ஆசிகள் கூறி இறைவனை வேண்டுகின்றேன் உம் நீண்ட சுகமான வாழ்விற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருணாகரன் பணியில் நாயக்கர் சேனை பாடசாலை

வீ.இராமநாதன் அதிபர்,
நாயக்கர் சேனை அரசினர் இந்து தமிழ் வித்தியாலயம்.
புத்தளம்.

கற்றோர் மேன்மை பெற்றவர்கள் என்பதற்கு இணங்க திரு. V. அருணகரன் ஐயா அவர்கள் சிறப்புக்குரிய ஒருவராக திகழ்ந்து கொண்டு இருக்கின்றார். ஆரம்ப பிரிவு பாட இணைப்பாளர் என்ற வட்டத்துக்குள் மட்டும் நின்று விடாது அவருடைய எண்ணங்களும் செயல்களும் விரிவடைந்து கொண்டு செல்வதை உணரக்கூடியதாக உள்ளது.

இவர் பாட இணைப்பாளராக மட்டுமின்றி ஆலோசகராக, சகோதரராக, நண்பராக, வளவாளராக, வழிகாட்டியாக, முன் மாதிரியாக மனதை எப்போதும் மகிழ்ச்சி கடலில் மூழ்கி அடிக்கும் சிறப்புடையவராக திகழ்கின்றார் என்பதில் ஐயமில்லை.

எமது தனித்துவமிக்க பாடசாலையான நாயக்கர் சேனை அரசினர் இந்து தமிழ் பாடசாலையில் அவருடைய பங்கை நோக்கும் போது அதை அளப்பரிய சேவையாக கருத்தலாம். பாடசாலையில் நடைபெறக்கூடிய நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் அவருடைய பங்களிப்பு நிச்சயமாக இடம்பெற்றிருக்கும். அது மட்டுமல்லாது ஒவ்வொரு வருட பெறுபேறுகள் வெளியாகும் சந்தர்ப்பங்களில் நிச்சயமாக என் கண் முன்னே காட்சியளிக்காமல் இருந்ததே இல்லை எனலாம். அது தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சைகவோ, க.பொ.த சாதாரண தரப் பரீட்சையாவோ வேறு ஏதாவது பரீட்சை விடயங்களாகவோ இருக்கலாம். எந்த விடயமாக இருப்பினும் உடனடியாக எமது பாடசாலைக்கு சமூகம் அளித்து விடுவார் இது எனது பாடசாலைக்கு கிடைத்த வரப்பிரசாதம் என நான் நினைக்கின்றேன்.

என்னது பாடசாலைக்கு வருகை தரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அருணாகரன் ஐயா அவர்கள் என்னுடனும் பாடசாலையின் ஆசிரியர் குழாத்துடன் மகிழ்ச்சிகரமாக உரையாடுவது மட்டுமின்றி மனதார பாராட்டுகளையும் தெரிவித்து விட்டு செல்லக் கூடியவராக திகழ்ந்தார்.

விளையாட்டு போட்டி என்றாலே அருணாகரன் ஐயா அவர்கள் இல்லாமல் அரங்கேறியதே இல்லை என்று கூறலாம். நட்சத்திர கூட்டத்தில் நடுவே தாரகை ஒளி வீசுவது போல சிரித்த முகத்துடன் எம் நிகழ்வில் கலந்து சிறப்பிப்பது மாத்திரம் அன்றி நிகழ்வுல் முடியும் வரை பொறுமையாக இருந்து எல்லா நிகழ்வுகளும் முடிந்த பின்னர் அந்நிகழ்வு தொடர்பான கருத்துக்களை என்னிடமும் எமது ஆசிரியர் குழாத்திடமும் கலந்துரையாடுவதுடன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்து விட்டுச் செல்வார்.

இவர் எனது பாடசாலையில் சிறந்த நண்பர் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். உயர் அதிகாரிகள் பொதுவாகவே தங்களுடைய வேலைகளை உரிய நேரத்தில் முடித்துவிட்டு சிலர் முடிக்கும் முன்னரே வெளியேறி விடுவதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து இருக்கின்றோம். ஆனால் அருணாகரன் ஐயா அவர்கள் ஒரு அதிகாரி, இணைப் பாளர் என்ற எண்ணம் தன் மனதை துளியளவு இருந்ததாக கண்டதில்லை. பதைய குழு மேற்பார்வை ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு பாடசாலையும் நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் எமது பாடசாலைக்கு வரும் குழு மதிப்பீட்டுப் பணியில் அருணா கரன் ஐயா அவர்கள் கலந்து கொள்ளாமல் இருந்ததில்லை. அத்தருணங்களில் நான் கண்ட நிறைவான விடயங்களை பற்றி மகிழ்ச்சியோடு முன்வைத்து விடுவதில் சிறப்புடையவர் சில குறைகளை அவதானித்தால் அதனை பக்குவமாக உரிய தரப்பிடம் ஒப்பவித்து விடுவது மட்டுமின்றி அதனை முழுமையாக்குவதற்கான வழிவகைகளையும் இன்முகத்துடன் கூறிவிடும் மனப்பக்குவம் கொண்டவர் என்றால் மிகயாகாது.

எமது பாடசாலையின் சமய நிகழ்வுகளை எடுத்துக் கொண்டால் அது நிகழ்வுகளிலும் பங்குபற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நிகழ்வளில் அளிக்கப்படும் விருந்துபசாரத்திலும் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்வது மட்டுமின்றி அவ்விருந்துபசாரம் தொடர்பான சிறந்த கருத்துக்களை கூறிவிட்டு பாராட்டுக்களையும் தெரிவிப்பது வழக்கமாகும். இது ஒரு மேன்மை பெற்றவரின் பண்பாகும்.

ஆரம்பப் பிரிவு பாட இணைப்பாளர் என்ற வகையில் எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குரிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதுடன் அவ் மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகளையும் மேற்கொள்பவராக திகழ்ந்துள்ளார். மேலும் மாணவர்களுக்காக வினாத்தாள்கள் தொடர்பான தெளிவு படுத்தல்களை வழங்குவதுடன் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கான பெறுமதி மிக்க கருத்துக் களையும் ஆலோசனைகளையும் வழங்குவதும் அவருடைய சிறப்பான பணிகள் ஆகும். அது மட்டுமன்றி க.பொ.த சாதாரண தர மாணவர்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து அவர் களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் இடைநிலை பிரிவு ஆசிரியர் களுக்கான தெளிவுபடுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி சிறப்பித்துள்ளார்.

நாயக்கர் சேனை பாடசாலையின் பௌதீக சூழலை அலங்கரிப்பு செய்வதிலும் ஆரம்ப பிரிவு வகுப்பறை அலங்கரிப்பிலும் அருணாகரன் ஐயா செல்வாக்கு செலுத்தி உள்ளார். சூழல் அலங்காரங்களை மேற்கொள்ளுமாறு அன்பான வேண்டுகோள்களை முன்வைப்பதுடன் அதற்குரிய ஆலோசனைகளை முன் வைத்து விடுவார்.இவ் ஆலோசனைகளுக்கு இணங்க இன்று எமது பாடசாலையில் பௌதிக சூழலானது பார்ப்பவரின் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது. இதற்குரிய பெருமை அருணாகரன் ஐயா அவர்களையும் சாரும் என்றால் மிகையாகாது.

இவ்வாறு நாயகர் சேனை பாடசாலையில் திரு.ஏ. அருணகரன் ஐயா அவர்களின் பங்களிப்பு போல் எமது அனைத்து பாடசாலை செயற்பாடுகளிலும் வளர்ச்சியிலும் நட்புறவிலும் ஒன்றோடு ஒன்று கலந்து இருப்பதனையும் மறுக்க முடியாது. காலத்தின் கட்டாயத்துக்கு ஏற்ப அரசு சேவை நிறைவு காலத்தில் சேவையிலிருந்து உத்தியோகபூர்வ மாக விலக வேண்டிய நிர்ப்பந்தம் அனைவருக்கும் ஏற்படும். அதன் அடிப்படையில் அருணாகரன் ஐயா அவர்கள் சேவையிலிருந்து பணி நிறைவு பெறும் கட்டாயத்தில் உள்ளார். இது எமது பாடசாலைக்கு மட்டுமின்றி முழு கல்வி வலயத்திற்கும் மாபெரும் இழப்பாகும் என நான் கருதுகின்றேன். அவருடைய இடத்தை ஈடுசெய்ய இன்னொரு வராலும் முடியும் என நான் நினைக்கவில்லை. பணி நிறைவு பெற்றாலும் எமது பாடசாலை உடனான உறவு நிச்சயம் தொடரும் என்பதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணி நிறைவு பெறும் பண்பான மனிதர்

திரு.மு.சிவானந்தகுமாரன்
அதிபர்
பு/ஒற்றைப்பனை றோ.க.த.வி

"குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு."

என்று நாலடியார் பாடல் கல்வி பற்றி எடுத்துரைக்கின்றது. காலத்தால் அழியாத கல்விக்கு சேவை செய்து வந்தவர்களில் ஒருவர்தான் எங்கள் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், பாட இணைப்பாளர் திரு.எ.அருணாகரன் அவர்கள் ஆவார். பிறந்த மண்ணை விட்டு பல ஆண்டுகள் புத்தள மண்ணில் தனது அளப்பரிய சேவையை கல்விக்காகவே வழங்கி பணி நிறைவு பெறுகிறார் என்றால் அதை பாராட்ட வார்த்தைகளே இல்லை.

தமிழ் பற்றாளர், தமிழ் வார்த்தைகளின் கருத்துக்களைத் தேடியறிந்து, அது தொடர்பான விளக்கத்தை வழங்கி, "இந்த சொல் இப்படித்தான் வரவேண்டும்" என்று தமிழ்மொழிக்கு வலு சேர்ப்பவர்.

சமய விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தன் கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைப்பதில் வல்லவர். பண்பாடு, கலாசாரம் என்பன பேணி பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளவர்.

பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் போது ஆசிரியர்களுக்கு பலவிதமான ஆலோசனைகளை அன்பாகவும் பண்பாகவும் எடுத்துரைப்பார். அதிபர்களுக்கும் புதுவிதமான மாற்றங்களை எப்படி செய்யலாம் என்றும் கனிவாக ஆலோசனை கூறுவார்.

எந்த நிலையிலும் மாணவர்களின் பால் தனது கவனத்தைச் செலுத்துபவர். பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டியவற்றை தேடல் மூலம் தேடிப்பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் மெல்லக் கற்கும் மாணவர்களையும் சில உத்திகளைக் கையாண்டு அவர்களையும் மேலே கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

மாணவர்களுக்கு நல்லறிவு புகட்டும் நல் ஆசானாகவும் அன்பு செலுத்துவதில் தந்தையாகவும் தன்னை வளர்த்துக்கொண்டவர். ஆசிரியர்களுக்கு நல்ல

நண்பராகவும் சிறந்த ஆலோசகராகவும் அதிபர்களுக்கு மதிநுட்பம் வழங்கும் மதியுரைஞராகவும் விளங்கினார் என்றால் அது மிகையாகாது.

எவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடிய ஒரு மனிதர். ஒருவரிடத்தில் இருக்கும் தவறுகளை கனிவாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் கொண்டவர். இதனால்தான் இவ்வாறானவர்களை பெண்புலவர் ஔவையார்.

"அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளவாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே சங்கு
சுட்டாலும் வெண் மை தரும்"

என்ற பாடலின் மூலம் பெருமைப்படுத்துகின்றார். அதாவது, நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். தம் நிலை தாழ்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்களின் நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு. பாட இணைப்பாளர் திருவாளர் எ.அருணாகரன் அவர்களின் பணிநிறைவு தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. அவர் சேவை பணிநிறைவின் பின்னர் எமது பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டும். அதற்காக இறைவன் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாட இணைப்பாளர் வெள்ளக்குட்டி அருணாகரன் அவர்களின் கல்விச் சேவை

அதிபர், ஆசிரியர்கள்
பு/இந்து மத்திய கல்லூரி
புத்தளம்

வெள்ளக்குட்டி, இலெட்சுமி அவர்களின் ஏக புத்திரனாய் பிறந்து தனது கல்வியிலே சிறந்து விளங்கி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்து நாற்பது ஆண்டுகளாக ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், பாட இணைப்பாளர் என தனது சேவையின் தரங்களை உயர்த்தி, நம் அனைவருடனும் அன்புடனும் அக்கறையுடனும் செயலாற்றியவர் தான் வெள்ளக்குட்டி அருணாகரன் எனும் ஆசான்.

ஆயிரத்து தொளாயிரத்து என்பத்திநான்காம் ஆண்டு எமது புத்தள மண்ணில் தனது சேவைக்காக காலடி பதித்தார் இந்த மட்டு நகர் மைந்தன்.

நாற்பது ஆண்டுகள் புத்தள மாவட்டத்திலே தொடர்ச்சியான சேவைகளை வழங்கினார். எமது பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் சிறந்த பல ஆலோசனைகளை வழங்கி ஆசிரியர்களின் உழைப்பில் அவரது பங்களிப்பையும் சேர்த்துக் கொண்டார் என்றால் அது மிகையில்லை.

அவர் ஒரு ஆசிரியரைப் பாராட்டினார் என்றால் அதன் பின்னணியில் சிறப்பான காரணம் இருக்கும். ஏனெனில் இலகுவாக அவரிடமிருந்து யாரும் பாராட்டுக்களை பெற்று விட முடியாது. அவ்வாறு பெற்று விட்டால் அது சிறப்பானதே.

நாம் எவ்வளவு தான் கஷ்டப்பட்டு வகுப்பறைகளை அழகுபடுத்தி ஒழுங்குபடுத்தி இருந்தாலும் அவர் வந்து வகுப்பறையைப் பார்த்த உடனே அதில் என்னென்ன குறைகள் உண்டு என்பதை உடனே கூறி விடுவார். புறத்தே கதைக்காது முகத்திற்கு நேரே கூறி அதைத் திருத்திக் கொள்ள வழி காட்டுவதில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களான எமக்கு ஒரு தந்தையாகவே இருந்துள்ளார் என்பது கண்கூடு.

அவர் ஆசிரியர்களுடன் உரையாடும் போது "மகள்" "மகன்" எனும் வார்த்தைகளை அதிகம் பயன்படுத்துவார் எம்மையும் பயன்படுத்த ஊக்கவிப்பார். அது மட்டமன்றி ஆசிரியர்களின் உடல், உள ஆரோக்கியங்கள் அவர்களது குடும்ப சூழல் அவர்களது இன்ப துன்பங்கள் அனைத்திலும் அக்கறையுடன் விசாரித்து ஆலோசனைகள் வழங்குவது அவரிற்கே உரிய தனித்துவம்.

பாடசாலைகளை மேற்பார்வை செய்ய வரும் போது தானே மாணவர்களிடம் சென்று பல விடயங்களைக் கற்றுக் கொடுப்பதும் வினாக்கள் தொடுப்பதும் அதில் மாணவர் நிலையைக் கணித்துக் கொள்வதிலும் தலை சிறந்த தலைவன் இவர் என கூறலாம்.

மட்டு நகர் மைந்தனின் மட்டற்ற இந்த சேவை எம் புத்தள மண்ணிற்கு கிடைத்தது எமது பாக்கியமே.அவரது சேவையை நாம் என்றும் மறவாது மனதில் மாண்புடன் நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம்.

"நன்றி மறப்பது நன்றன்று......" எனும் வள்ளுவர் வாக்கை நாம் மறந்துவிடலாகாது. ஏனெனில் அவர் வயதின் மூன்றில் இரண்டு பங்கை எமது வளர்ச்சியில் செலவழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வடைந்துள்ளார்.

ஓய்வு நிலையில் சென்றிருக்கும் அவர் இனிவரும் காலங்களில் தனது உறவுகளுக்கும் சிறந்த முகாமையாளராக பாதுகாவலராக சந்தோசமாக நோய் நொடியின்றி நிம்மதியுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வயதில்லை என்றாலும் எம் மனதார உளமார வாழ்த்துகின்றோம்.

"கல்வி உலகத்தில் காலடி வைத்து

கல்விக்காய் உழைப்பவர்க்கு கரம் கொடுத்து உன்னதமாய் உரிமையாய் சேவை செய்து

உயர்ந்து நிற்கும் மட்டு நகர் மனிதரே

உம்

உயர்ந்த சேவைக்கு எம் இந்துக்கல்லூரியின்

உறவுகள் அனைத்தும் இருகரம் கூப்பி

நன்றி பகர்கின்றோம்

வாழ்க உம் வாழ்வு"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

அதிபர்
M.H.U.பரீதா முஸம்மில்
பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலயம்

வயல் வளமும் கலை வளமும் செழித்தோங்கி பல சிறப்பும் பாங்காய் பெற்று கதிரவன் கரம் நீட்டும் கிழக்கு வான் திசையில் வந்து உதித்த உத்தமர் வி.அருணாகரன் இணைப்பாளர் பற்றி தொகுத்து வழங்கும் நூல் வெளியீட்டு விழாவுக்கு வாழ்த்து செய்தி வழங்குவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஈழத் திருநாட்டின் நித்திலம் கொழிக்கும் மட்டக்களப்பு மாநகரில் கடல் அலைகள் முத்தமிட்டு கரை தழுவிச் செல்லும் துறைநீலாவணையில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வி பயணத்தை துறைநீலாவணை கல்விக் கூடத்தில் மேற்கொண்டார். காலங்கள் சென்றோடின. தனது உயர்கல்விக்காக மருதமுனை அல்மனார் கல்விக்கூடத்தில் காலடி பதித்தார். பயிற்சி கலாசாலையில் பயின்ற இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராக புகழ் மாலை சூடினார்.

எட்டுத்திக்கும் கால் பதித்த சுவடுகள் இன்னும் மறையவில்லை. கல்விதனை கண்ணாக மதித்த இவர் பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து எட்டிவிட்டார், ஆசிரியர் பதிவிதனை. இவர் 1984 காரைத்தீவு மு.ம.வி முதல் நியமனம் பெற்றார். மாணவர் போற்றும் நல் ஆசானாகவும் இவர் விளங்கினார். இவரது திறமையும் விடா முயற்சியும் தன்னம்பிக்கையும் ஆசிரியர் ஆலோசகராக வருவதற்கு வழிவகுத்து கொடுத்தன. ஆசிரியர் ஆலோசகர் என்ற மமதையின்றி எல்லா ஆசிரியர்களோடும் புன்னகை பூத்த இன்முகத்துடன் சிரித்துப் பழகும் பண்பும் உள்ளவர்.

ஆசிரியர்களின் குறை நிறைகளை அறிந்து அதற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கும் நல்லதோர் ஆசிரியர் ஆலோசகராக திகழ்ந்தார். காலத்தின் ஓட்டத்தை ஞானத்தால் அறிந்து காரியங்களை சாதித்து வெற்றி பெற்ற இவர் தனது விடாமுயற்சியால் பாட இணைப்பாளராக பதவி பெற்றார். இவர் தன் சேவையை கண்ணும் கருத்துமாக களங்கமின்றி மேற்கொண்டார்.

இவரது சேவை குன்றின் மேல் இட்ட தீபம் போல எட்டுத்திக்கும் பரந்து ஒளி கொடுத்ததை மறக்க முடியாது. இவர் இளைப்பாறிச் செல்லும் இவ்வேளையில் இவர் செய்த சேவைகள் சாதனைகளை பாராட்டுவோம். இவரது ஓய்வு காலம் சந்தோஷமாகவும் பயனுள்ளதாகவும் அமைய இரு கரம் ஏந்தி பிரார்த்தனை செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

Deshamanya K. B. NIYAS (Naleemi)
Principal, P/Tharakkudivillu M.M.V
Akkaraweli. Angunawila.

*அன்பின் ஆசானாய், அதிகாரியாய்..*
*ஆரவாரமில்லா மனிதராய்..*
*இசைப்பட வாழ்ந்தவராய்..*
*புத்தளம் வலயக்கல்வி பணிமனையிலும் தெற்குக் கோட்டக் கல்விப் பணிமனையிலும்...*
*பணி பல செய்த வித்தகராய்...*
*இன்று ஓய்வூதியம் பெறும் தருவாயில் இருக்கும் மாபெரும் வழிகாட்டியே...*
*உம் சேவைகளை புகழ்ந்துறைக்க போதாதே எம் வார்த்தைகள்...*
*எம் பாடசாலைக்கென நீங்கள் செய்த பல தியாகங்களை என்றும் உயிருள்ள வரை நாம் மறவோம்...*
*உம் பணிக்கான பலன் இறைவனிடத்தில் காத்திருக்கிறது..*
*என்றும் ஆசிரியர்களுக்கு இலக்கணமாய் அமைந்த உமக்கு நன்றி கூறுவதில் ஒரு அதிபராய் பெருமை கொள்கின்றேன்..*
*நன்றிகள் பல கோடி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் தலைமுறைகளின் வழிகாட்டி

M.H. Nasmun Rila
Principal
Rawlathul Athfaal & IHH Preschool, Puttalam

மாதா,பிதா,குரு,தெய்வம் என்பது சான்றோர் சொல். வாழ்க்கை எனும் ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை, பொதுஅறிவு என்ற அனைத்தும் நிறைந்த பாடத்தை மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்து ஓர் உண்மையான வழிகாட்டியாக விளங்கி ஒவ்வொரு மாணவரையும் சிறந்த மனிதராக்குவது ஆசிரியர்கள் தான். அத்தகைய எழுச்சிமிக்க மாணவர்களை ஒரு சிறந்த ஆசிரியரால் தான் உருவாக்க முடியும். இத்தகைய பெருமை வாய்ந்த ஆசிரியரே எம் மதிப்பினை வென்ற அருணாகரன் ஆசான். இவரின் வழிகாட்டுதலில் வளர்ந்த மாணவி, ஆசிரியர் மற்றும் அதிபர் என்ற வகையில் மனதார ஆனந்தம் கொள்கிறேன். புத்தளத்தின் கல்விச் சமுதாயம் பெற்ற விலை மதிக்க முடியாத பெறுமதி வாய்ந்த ஒருவரே எம் ஆசிரிய ஆலோசகர் அருணாகரன் ஆசான்.

ஆசிரியர் அருணாகரன் தனது கல்விப் பயணத்தை ஓர் ஆர்வமுள்ள மாணவராகத் தொடங்கி, பின்னர் திறமையான ஆசிரியராக உருவெடுத்தார். ஆசிரியர் அருணாகரன் அவர்கள் ஒரு முன்னணி கல்வியியலாளர் மற்றும் வளவாளரும் ஆவார். இவர் தனது கல்வி மற்றும் அனுபவத்தின் மூலம் நவீன கல்வி முறைகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளார். இவர் தனது கல்வியை தனது ஊரில் ஆரம்பித்தாலும் பின்னர் உயர்கல்வியை பெறுவதற்காக பல்வேறு இடங்களில் பயின்று சிறந்த கல்வியியலாளராக மாறினார். இவர் கல்வியை ஒரு செயல்முறையாக மட்டுமல்லாமல் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக கருதினார். இவர் பணியாற்றும் கற்கை நெறிகளில் குறிப்பாக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி கற்கை நெறிகளில், அவர் குறிப்பிட்டு கூறத்தக்க வகையில் பங்களிப்புகளை செய்துள்ளார். இவரது பணி, இளம் மனங்களின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. குறிப்பாக முன்பிள்ளை பருவ குழந்தைகளின் மனதில் அறிவு விதைகளை விதைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். முளைக்கும் விதைகளின் ஆரோக்கியத்தில் இருக்கிறது வளரும் மரம் தரக்கூடிய பயன் என்பதைப் போல சிறுவயதிலேயே நல்லதை விதைத்து எதிர்கால சந்ததியினை சிறப்பாக உருவாக்குவதில் முன்னோடியாக திகழ்பவர் ஆவார். என் கல்விப் பயணத்தில் 2007 ஆம் ஆண்டு வடமேல் மாகாண முன் பிள்ளைபருவ அதிகார சபையினால் நடாத்தப்பட்ட முன்பிள்ளைப் பருவ டிப்ளமோ கற்கை நெறியில் அருணாகரன் ஆசிரியரிடம் என் கல்விப் பயணத்தை ஆரம்பித்தேன். இளம் சமுதாயத்தை

உற்சாகமளிக்கும் வகையில் தன் கல்வி போதனையை வழங்குபவராக இருந்தார். அனைத்து மாணவர்களையும் தன் செயல்களினால் ஈர்த்து அனைவரின் கவனத்தையும் தன் மீது வைக்கும் வகையில் கற்பிக்கும் ஆசான் ஆவார். எமக்கு ஏற்படும் சந்தேகங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான விளக்கங்கள் கோட்பாடுகளின் அடிப் படையில் சிறப்பாக விளங்கப் படுத்தக் கூடிய ஆளுமை மிக்க ஒரு வளவாளராக ஆசிரியர் அருணாகரன் விளங்குகிறார். இவ்வாறு ஆசிரியரின் உற்சாகமிக்க செயற்பாடுகளில் ஆர்வம் கொண்டு ஆசிரியரின் வகுப்பில் தவறாமல் கலந்து கொள்ள ஆர்வம் கொண்டேன்.

எம் ஆசிரியர் அருணாகரன் பாரம்பரிய கல்வி முறைகளுக்கு மாற்றாக குழந்தைகளின் இயற்கையான ஆர்வத்தை தூண்டும் புதிய கற்பித்தல் உத்திகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்துபவர். வடமேல் மாகாணத்தில் புத்தள மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் டிப்ளமோ மற்றும் சான்றிதழ் கற்கை நெறியினை ஆரம்பித்து வைத்தவர். இவ்வாறு முன் பள்ளி பருவ குழந்தைகளின் வளர்ச்சிக்கு தீர்க்கமாக பங்காற்றியவர். அவரது பங்களிப்புக்கள் எமது முன்பிள்ளை பருவ கல்வித்துறையில் ஒரு வரலாற்றுச் சின்னமாகும். இவர் குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்க்கும் செயற்பாடுகளை ஊக்குவித்தார்.

ஒவ்வொரு குழந்தையின் தனித்துவமான கற்றல் தேவைகளைப் புரிந்து தனிப் பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவங்களை வழங்குவதற்கான உத்திகளை ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கினார். குழந்தைகளின் உடல், உள, மற்றும் சமூக நலனில் அளவு கடந்த அக்கறை கொண்டவர். கல்விச் சமுதாயத்தை ஒருங்கிணைத்து, குழந்தைகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார். குழந்தைகளின் இயற்கையான கவனத்தை ஈர்க்கும் வகையில், கற்றல் சுற்றுப்புறங்களை வடிவமைக்க கற்பித்தார் மற்றும் வழி காட்டினார். விளையாட்டுக்கள், கலை, இசை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, கற்றலை மகிழ்ச்சியான அனுபவமாக மாற்றினார். எமது மனநிலையை புரிந்து கொண்டு எமது தேவைகளை நிறைவேற்றினார். இதன் மூலம் குழந்தைகளின் திறமைகள் மேம்படவும், தன்னம்பிக்கை வளரவும் உதவினார். புதுமையான கற்பித்தல் முறைகளின் மூலம் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை குறிப் பிடத்தக்க வகையில் மேம்படுத்தியுள்ளார். குழந்தைகளின் தன்னம்பிக்கை, சுயாதீனம், படைப்பாற்றல் போன்ற குணங்களை வளர்ப்பதில் அருணாகரன் ஆசிரியர் முக்கிய பங்காளர் ஆவார். இதன் மூலம் குழந்தைகள் சமூகத்தில் வெற்றிகரமாக இணைந்து வாழும் திறனை பெறுகின்றார்கள். இவர்

குழந்தைகளின் வளர்ச்சிக்காக பெற்றோர்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தி குழந்தை வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பை அதிகரித்துள்ளார். இவ்வாறு இவரின் பங்களிப்புக்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியிலும், ஆளுமை வளர்ச்சியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

மாணவர்களுக்கு மட்டும் தன் உழைப்பை வழங்காத ஆசிரியர் "சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேணும" என்ற அடிப்படையில் எம் ஆசிரிய பெருந்தகைகளுக்கும் புதிய கல்வியியல் முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்கினார்.

இதன் மூலம் ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்தி கற்பித்தல் தரத்தை உயர்த்தினார். எமது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடைபெறும் கருத்தரங்குகளில் வளவாளராக கலந்து சிறப்பித்தவர். மேலும் எமது ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ பயிற்சியினை நடாத்தி முடிக்க பெரும் பங்காற்றியவர். இதற்கு மேலதிகமாக ஜேநு இனால் நடாத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பத்து நாள் செயலமர்வில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் கிடைக்க வேண்டும் என எமக்காக குரல் கொடுத்த கற்கைநெறி இணைப்பாளர் ஆவார். இத்துடன் புத்தள நகரில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையத்தில் முன்பிள்ளைப்பருவ கல்விக்கான சான்றிதழ் கற்கை நெறி மற்றும் ஆரம்பக் கல்விக்கான கல்விமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு முக்கிய வளவாளராக கடமை ஆற்றி வருப்பவர். அதிலும் அவரிடம் கற்பதில் ஒரு ஆசிரிய மாணவராக மனம் மகிழ்வு கொள்கிறேன். என்னைப் போன்ற ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு புது உற்சாகத்தையும் நல்ல அறிவுரைகளையும் வழங்கி "மகள்" என்ற ஒற்றைச் சொல்லில் அவரிடம் அரவணைக்கப்பட்ட பிள்ளைகளாக மாறி எங்கள் கல்வி செயற்பாடுகளை திறம்பட செயற்படுத்த வைத்த கருணை உள்ளம் படைத்தவர் எங்கள் ஆசான்.

அருணாகரன் ஆசிரியர் போன்ற கல்வியலாளர்கள் நம் சமுதாயத்தின் முதுகெலும்புகள். அவரது பணி எதிர்கால தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாகும். அவரது பங்களிப்புகளை நினைவு கூறி நாம் அவரது கொள்கைகளை பின்பற்றி எம் சிறார்களின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். கல்வியில் தனது அர்ப்பணிப்பு மிக்க சேவையை அள்ளி வழங்கிய

எம் ஆசானின் சேவை என்றென்றும் தொடர வேண்டும். எமது தலைமுறைகளின் வளர்ச்சிக்கு தேவையான அடித்தளமாக அமைய என்றும் உம்மை கேட்கிறோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

ஹிதாயத்துல்லாஹ் அஜ்மல்
அதிபர். MH School of Excellence,
Madurankuliya

அவருடனான எனது உறவு ஒரு தசாப்தகாலத்தை அண்மித்தது. மர்ஹூம் கே.ஏ பாயிஸ் அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட கல்வி மறுமலர்ச்சி செயற்திட்டக் கலந்துரையாடல்களில் மதிப்புக்குரிய ஆசிரியர் அருணாகரன் அவர்களை சந்தித்து இருக்கின்றேன். அக்காலப்பகுதியில் புத்தளம் கல்வி வலயத்தில் பாட இணைப்பாளராகச் செயற்பட்ட அருணாகரன் சேர், தற்போதைய ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்களான ஜவாத் மரிக்கார் சேர் மற்றும் ZA சன்ஹீர் சேர் ஆகியோருடன் இணைந்து மிகவும் உற்சாகமாகப் பங்கேற்றதை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். அக்காலப்பகுதியில் புத்தளத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட திறந்த பல்கலைக்கழக வளாகம், ஸாஹிறா ஆரம்பப் பாடசாலை, செய்னப் ஆரம்பப் பாடசாலை, விஞ்ஞானக் கல்லூரி ஆகியவற்றின் உருவாக்கக் கலந்துயைாடல்களில் தனது முழுமையான ஈடுபாட்டுடன் பங்கேற்றது எனது நினைவுகளில் பசுமையாக உள்ளது.

வலயக் கல்விப்பணிமனையின் தொழில் சார் எல்லைகளோடு தனது பணியினை வரையறுத்துக் கொள்ளாமல் புத்தளம் சமூகத்தின் எதிர்கால சந்ததியினருக்கான கல்வி சார் முன்னெடுப்புகளில் அவரும் ஒரு பங்காளியாகப் பங்கேற்றமை நினைவு கூறப்பட வேண்டிய விடயமாகும்.

பொதுவாக இன்றைய ஆசிரியர்கள் தமது தொழில் இஸ்தீரத்திற்கு தேவையான கற்கை நெறிகளோடு தமது முறையான கற்றல் செயற்பாடுகளை வரையறுத்துக் கொள்கின்ற நிலையில் முதுமானிக் கற்கையினையும் நிறைவு செய்து இப்பிரதேச கல்வி சமூகத்துக்கு ஒரு முன்மாதிரியான ஆசானாகத் திகழ்கின்றார் எமது மரியாதைக்குரிய அருணாகரன் சேர் அவர்கள்.

அவ்வப்போது பாதையோரங்களிலும், கல்விக் காரியாலயத்திலும் சந்திக்கும் போது புன்முறுவலுடன் எம்மை எதிர்கொள்ளும் எமது அன்புக்குரிய அருணாகரன் சேர் புத்தளத்தின் கல்வி தொடர்பான ஏதாவதொரு தலைப்பில் கல்ந்துரையாடலினை ஆரம்பிப்பார். மட்டுமல்லாமல் எமது கவனத்தை செலுத்த வேண்டிய முக்கிய விடயங்களையும் எமது கவனத்துக்கு கொண்டு வருவார்.

தன் வாழ்நாளில் என்றும் கற்பவராகவே எமக்கு முன்னுதாரணமாக செயற்பட்ட அருணாகரன் சேரின் அரசப்பணியின் ஓய்வு வயதின் அடிப்படையிலான ஓய்வாகவே அமையும் அன்றி அவரின் கல்விப்பணியும், சமூக செயற்பாடுகளும் இறுதி மூச்சு வரை தொடரும் என்ற எதிர்பார்ப்புடன் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருமதி S.B.S.மாஹிரா
பிரதி அதிபர்
பாத்திமா முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயம், புத்தளம்

ஆசிரியர் ஆலோசகர் எனும் அந்தி விளக்கே
உங்கள் ஒளி என்னும்
செம்மொழியால்
பல மாணவரின்
வாழ்வில் பிரகாசம் பரப்பிய பெருமை உங்களுக்கு.
தன்னடக்கம் கொண்டு வாழும் முன்மாதிரி
நெறி,
பேதமில்லாமல்
மக்களுடன் பழகும் இனிய பேரொளி,

சீரிய சிந்தனை தான் நெஞ்சை நிறைக்கும். சுற்றும் உற்சாகம் கொண்டு செழிப்பை பெற்று தரும் ஊக்கமது உங்கள் செயலாகும்.

ஊழலும் ஊனமும் இல்லாத தன்னலமற்ற சேவையால் பாட இணைப்பாளராகவும்
ஆசிரிய ஆலோசகராகவும்
உரிய பதவி உங்களுக்கே உரியது.

அறிவும் ஆற்றலும் நிறைந்ததால் முற்றிய நெற்கதிர் போல என்றும் எப்பொழுதும் பணிவோடும் பாசத்தோடும் எம் உள்ளத்தில் முழுமதியாய் உலாவுகிறீர்.

பூவோடு சேர்ந்த நாறு போல உங்களுடன் பொதுப்பணியில் ஈடுபடும் போது - உங்கள் கலகலப்பும் உற்சாகமும் எங்களையும் ஆட்கொள்ளுமாறு அரவணைத்து நடந்திடுவீர்.

பளிச்சிடும் புன்னகையால் பாரில் அனைவரையும் வென்றெடுத்த மகானாய்,
இப்போது

ஓய்வெடுக்கும் வேளையில் உங்கள் பயணத்தின் ஒவ்வொரு கட்டமும் நம் மனங்களில் அழியாத
இரேகையாக நீடித்து இருப்பீர்கள் என்பது உறுதி.

முத்தான தருணங்களை சுவாசித்து, உயர்ந்த சிந்தனைகளை வளர்த்து, என்றென்றும் கல்வியின் ஆலயமாக உங்கள் நினைவுகள் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவமிக்க என் ஆசானே!

உங்கள் மாணவன்
அப்துல் அசீஸ் பாறிஸ் மொஹமட்.
இலவன்குளம் மு.ம.வித்தியாலயம்.

அன்பு அருண் ஆசான் அவர்களே!
கிழக்கு வானில் கிழம்பிய சூரியன்
மேற்கு திசையிலும் ஒளி பரப்பியது
வாடைக் காற்றாய் வசந்தம் வீசி
வாழ்க்கையில் ஒளி எழுப்பியது.

நான் இடைநிலை கல்வியை இடையூற்றுடன் கற்ற வேளை
இன் முகத்துடன் வருகை தந்து
இனிதாகக் கற்பித்து இறவாத புகழ் பெற்றுத் தந்தீர்கள்.

என் குடும்பத்தில் நீங்கள்
ஆசானாய் ! அன்பனாய் ! அண்ணனாய் !
எனப் பல பரிணாமம் பெற்றீர்கள்.
பண்புடனும் பாசத்துடனும் பழகினீர்கள்.

பட்டங்கள், பதவிகள் பல பெற்ற போதும்
கற்பித்த கன்னிப் பாடசாலையைக்
கனிவுடனும், கவனத்துடனும் நோக்கினீர்கள்
கரை காணாதது உங்கள் கல்விப் பணி.

எனது கல்வி, பட்டம், பதவி, உயர்ச்சி என்பவற்றில்
ஓயாது அக்கறை செலுத்தினீர்கள்
எனது விஞ்சு புகழும் மிஞ்சி வளமும் கண்டு நெஞ்சு மகிழ் கொண்டீர்கள்.

சாதிக்க முடியாத இலக்கை வழங்கினீர்.
அழிக்கவே முடியாத தடையத்தைப் பதித்தீர்கள்.
ஆசாணாய் இருந்து ஆணவமில்லாத
அதிகாரத்தையும் ஆளுமையையும் புகட்டினீர்கள்.

அரிசனர் பாடசாலையில் ஆரம்பித்த உங்கள் பணி
ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகராக பணி நிறைவு பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கல்விப் பயணத்தில் உங்கள் கல்விப் பணி
தரம் ஒன்பதில் ஆரம்பித்தது உங்கள் பணி ஓய்வில் என்னை அதிபராக்கி
நிறைவு பெற்றது.

கற்பித்தலின் போது நூல் தொடா
ஆசானை நானின்னும் காணவில்லை.
கையில் கைக்குட்டை மட்டும் மூக்கை
அடிக்கடி வருடிச் செல்லும் என்சிலா டீச்சர்
என் கற்பித்தலுக்கு வழிகாட்டியும் ஒரு
விடி வெள்ளி நீங்கள்

அருன் சேர் உங்களைத் தொட்டுச் செல்லும்
போது மூர்த்தி சேரும் என்னிதயத்தை
வருடி வருகின்றார் அவரின் கற்பித்தலுக்கும்
நிறைவான குணத்திற்கும் காட்டிய அன்பிற்கும்
வெளிக்காட்ட வார்த்தையின்றி தவிக்கின்றேன்.

காற்று நுழையா பாலடைந்த
புறாக் கூடு கட்டி வாழும் குவாட்டஸ்
அதில் ஆடும் மேசை உங்கள் அழகிய கட்டில்
அதற்கோ கண்டில்லாத ஒரு மலசல கூடம்
இவ் உலகில் இனியும் கண்டுவிடுவீர்களோ?

உங்கள் இருவரின் ஒற்றுமையும் நற்போடை நீண்டோட
வாழ்த்துகின்றேன். நீஙகள் அதிபரோடு ஒன்றாய்
பிள்ளைகள் போல் ஆறு, குளம், குட்டை
கூட்டாச் சோறுகள் இவை என் நிர்வாகத்தின்
பின் தொடர் வழிகாட்டில்.

கரைத்தீவு மண்ணுக்கு இறைவனின் அட்சய
பாத்திரங்களே என்றும் நாம் மறவோம்
மன நிறைவோடு வாழ்க வாழ்க பல்லாண்டுகள்
உங்கள் புகழ் வாழ்க வானோங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் அறிந்த அருணாகரன் சேர்...

ஏ.லோகேஸ்வரி (SLPS 2)
பிரதி அதிபர்
பு/பாத்திமா ம ம வி.

பிறப்பிடம் அறியேன்,
பெற்றவர் அறியேன்,
வளர்ந்த குலம் அறியேன்
கற்றவை அறியேன்,
நான் அறிந்த அருணாகரன் சேர்
புத்தளத்தான் என்று மட்டுமே..
பேச்சும் மொழி நடையும்
எண்ணமும் சேவையும்
புத்தளத்தின் கல்வி நிலை
என்று மட்டுமே தினம் பேசும்
இவரை,
நான் முதலில் தரிசித்தது
மணல் குன்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில்.
ஆசிரியர் ஆலோசகராக,
கண்டிப்பான மேற்பார்வையாளராக,
தெரியாததை புலப்படுத்து
அன்பான அறிவாளராக,
பண்புகள் பல கொண்ட
பணிவான பண்பாளர்
இவர்...
கல்வியியற் சேவை பயணத்தில்,
நான் காலடி வைத்த நாள் முதல்
கனிவான நல்ல அறிவுரைகளும்
காலத்தால் மறக்காத ஆலோசனைகளும்,
அள்ளி வழங்கி சேவையின் புனிதத்தை,
தேவைக்கேற்ப எடுத்துரைத்தவர் இவர்..
காணும் இடத்தின் தன்மைக்கேற்ப ,
கண்ணால் ஒரு சாடையாலும்
கனிவான ஒரு வார்த்தையாலும்,
எதிர்பாரா வேளையில் நக்கல் நையாண்டியாகவும்,
பேசி மகிழ்விக்கும் நட்பாளர் இவர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டங்கள் பதவிகள்,
பாராட்டுக்கள் பல சேர்ந்தாலும்,
எவ்விடத்திலும் எத் தருணத்திலும்,
பெருமை கொள்ளாமல்,
அனைவரையும் பெருமிதத்துடன்
அரவணைக்கும் அன்பாளர் இவர்...
ஆரம்பப் பிரிவு பாட இணைப்பாளராக,
பரிணாமம் பெற்ற போது,
ஆரம்ப பிரிவு மாணவர்களின்,
கல்வியை முன்னேற்ற,
ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கு
வழிகாட்டியவர் இவர்..
புத்தளம் கல்வி வலயத்தில்,
“2020 ஆம் ஆண்டில்
அனைவரும் வாசிப்பர் எழுதுவர்” என்ற
தொனிப் பொருளின் கீழ்
சகல தமிழ்மொழி பாடசாலையின்
ஆரம்பப் பிரிவை வலுவூட்ட உழைத்தவர் இவர்..
அப்பப்பா! இவர் சேவை
கணக்கிட கைவிரல்கள் போதாது,
எழுதிட பக்கங்கள் போதாது,
வரையறுத்து பக்கத்தில்
கட்சிமாய் இவர் பற்றிய
எனது எண்ணங்கள் இங்கே...
இவர் வயது அறுபதாம்,
அதனால் கல்வித் துறையில் பணி நிறைவாம்,
பணிக்கு வயது முட்டுக்கட்டையாகலாம்,
ஆனால் அவரின் சமூக சேவைக்கு போட முடியாது வரையறை,
எவராலும் எப்போதும்....
அவர் இதயத் துடிப்பு நிற்கும் வரை,
அவர் மூச்சு உள்ளவரை,
அவரது சேவை என்றும் தொடரும்,
தொடர வாழ்த்துகிறேன்,
வாழ்க வளமுடன்
வாழ்க நீடூழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாட இணைப்பாளராக V.அருணாகரன்

திருமதி எம்.மேர்சி
பிரதி அதிபர்
நரக்கள்ளி றோ.க.த.ம.வித்தியாலயம்

*ஆரம்பக்கல்வி பாட இணைப்பாளராக **01.07.2009** தொடக்கம் **15** வருடங்களாக புத்தளம் கல்வி வலயத்திலுள்ள சகல தமிழ் மொழி மூலமான பாடசாலையின் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்காக இவர் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவைகள் அளப்பெரியது.*

*இவரது சேவையை கருதுமிடத்து மாகாண கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் , அதிபர்கள் , ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் என அனைத்து தரப்பினருடனும் நல்ல உறவைக் கட்டிய யெப்பியவர். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்." என்று வள்ளுவர் வாக்கிற்கேற்பவும் தெய்வ ஸ்தானத்தில் பணியாற்றி இன்று அரசு பணி நிறைவின் போது ஒரு அறிவு விருட்சமாக என்னுடன் ஒரு உதாரண புருசராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.*

*இவர் தொடர்ந்து கற்பவராகவும் கற்பிப்பவராகவும் திகழ்ந்தார். முது கல்வி மாணிப்பட்டத்தை பூர்த்தி செய்த இவர் அதன் பின்னரும் பல ஆய்வுகளை கல்வி புலத்தில் மேற்கொண்டு ஒரு ஆய்வுக் கலாசாரத்தை கட்டி யெழுப்பினார் வித்தியாலயம் சஞ்சிகை யில் கூட "ஆரம்பக் கல்வியின் வாசிப்பு எழுத்துத்திறன் இடைநிலை அடைவு மட்டத்தில் செலுத்தும் செல்வாக்கு". என்ற தலைப்பில் இவரது ஒரு சிறு ஆய்வு வெளியிடப்பட்டி ருந்தது. தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெறும் பல்வேறு செயலமர்வுகளில் ஆர்வத் துடன் பங்கேற்று தான் பெற்று அனுபவங்களை ஆசிரியர்களோடும், பெற்றோர் களோடும், மாணவர்களோடும் பகிர்ந்து கொள்வார் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் பல்வேறு கருத்தரங்குகளில் சிறந்த வளவாளராக செயல்படுவார்*

*"சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க சொல்லில் பயணிலாச் சொல் " என்று வள்ளுவரின் வாக்கிற்கேற்ப சிறந்த பேச்சாற்றல் கொண்டவர் அவரது ஆழமான புத்தக வாசிப்பு கருத்துச் செறிவான இரத்தினச் சுருக்கமான அனைத்து தரப்பினரையும் கவரும் அவரது பேச்சாற்றலில் வெளிப்படும் முக்கியமாக கிராமப்புறப் பெற்றோர்கள் தமக்கு இலகுவில் புரியக்கூடிய விதத்தில் பயனுள்ள விதத்திலும் பல்வேறு கூட்டங்களிலும் விழாக்களிலும் இவரது பேச்சு அமைந்திருப்பதை மெச்சுவதையும் நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டி ருக்கின்றேன்.*

*இவரது கடமை தவறாமையை பெரும்பாலான பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களுக்கு இவரை அழைத்து கௌரவிப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தன்னை அழைக்கும் அனைத்து பாடசாலைகளின் விழாக்களுக்கும் தவறாது சமூக மளிப்பதன் மூலம் வலயத்தின் பிரதிநிதித்துவத்தை பேணுவதோடு உரிய விழாவிற்கும் மெருகேற்றவார்.*

***2020** ஆரம்பப் பிரிவில் அனைவரும் வாசிப்பர், எழுதுவர் என்ற ஸன்ஹீர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிக்கல்வி பணிப்பாளரால் கொண்டுவரப்பட்ட வேலை த்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முழுமூச்சாக நின்று உழைத்தவர். எப்போதும் தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்து நடந்து கொள்பவர் ஓய்வுநிலை உதவி கல்வி பணிப்பாளர் ஞு.யு. ஸன்ஹீர் பல சந்தர்ப்பங்களில் இவருடன் சேவையாற்றி காலங்களை பற்றி ஓய்வின் பின்னரும் நினைவு கூர்ந்துள்ளார் இவரும் ஒன்றிணைந்து பல பாடசாலைகளைத் தரிசிக்க செல்வது அவர்களது வழமை.

**2016.05.09-2016.06.16** வரை நடைபெற்ற அவ்வருடம் அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட அதிபர்களாகிய எமக்கான திசை முகப்படுத்தல் நிகழ்வின் பலவளவாளர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் Z.A.ஸன்கிர் (ஓய்வு நிலை) , கல்வி அபிவிருத்தி பிரதி கல்வி பணிப்பாளர் அணி ஆகியோருடன் பாட இணைப்பாளர் ஏந அருணாகரனும் பொறுப்பேற்று தமிழ் மொழி மூலமாக அதிபர்களுக்கு சிறந்த பயிற்சி அளித்தனர்.

பாட இணைப்பாளர் என்ற பதவிக்கு மேலதிகமாக பகுதி நேர விரிவுரையாளராக திறந்த பல்கலைக்கழகத்தில் சேவையாற்றி வருவது இவரது பன்முக ஆளுமைக்கு சிறந்தொரு எடுத்துக்காட்டாகும்.

ஆரம்பப் பிரிவில் பல மாணவர்மையமான செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக நடத்தப்படும் கண்காட்சிகள் சிறுவர் சந்தை மற்றும் பல புத்தாக்க செயற்பாடுகள் நடக்க உந்து சக்தியாக இருப்பவர். நடக்கும் நல்ல நிகழ்வுகளை சமூக ஊடகங்கள் ஊடாக அறிகைப்படுத்துபவர் இதனுடாக ஒரு பாடசாலையில் நடைபெறும் நல்ல விடயங்க்ளை ஏனைய பாடசாலைகளுக்கு பின்பற்ற வழியேற்படுத்துபவர்.

அரச பணி நிறைவின் பின்னர் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளோடும் வாழ இறையாசி வேண்டுவதோடு உங்கள் தொடர்ந்த வழிகாட்டலும், சேவையும் எனது புத்தள பிரதேசப் பாடசாலைகளுக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமென வேண்டி நிறைவு செய்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதாரண புருஷருக்கு வாழ்த்துகள்

திரு க.தொண்டமான்
அரச பணி நிறைவு அதிபர்.
சிறி கிருஷ்ணா தமிழ் வித்தியாலயம். ஆண்டி முனை.

கல்விப் பணிக்காக ஓடி ஓடி உழைத்து பணி நிறைவு கண்டுள்ள ஏ. அருணாகரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை தந்துதவிய பிரபஞ்சத்துக்கு நன்றி கூறுவதோடு மட்டற்ற மகிழ்ச்சியையும் அடைகின்றேன்.

தனக்கு ஒப்படைக்கப்பட்ட கல்விப் பணியை மிகச் சிறப்பாக செய்த ஓர் பெருந்தகை அவர். சிறார்கள் கல்வித்தரத்தை ஊக்குவிப்பதற்காக மாணவர்களை மாத்திரம் உற்சாகப்படுத்தியதுடன் நின்று விடாமல் சமூகம், ஆசிரியர்கள், அதிபர்கள், வெளிநாட்டவர்கள் என்று எவரையும் விட்டுவிடாமல் உற்சாகப்படுத்தி இலக்குகளை அடைவதற்கு வழிகாட்டிய ஓர் நேர்மையாளர். இப்பணியை மேற்கொள்ளும் காலங்களில் இவருக்கு இரவு பகல், மழை வெயில், தன் உடல் நலம் எதுவுமே பாராது மேன்மையான ஓர் உன்னத பணியை அனைத்து சமூகத்திற்கும் செய்தீர்கள், தங்களுடைய அரும்பணியை எழுதுவதற்கு வரிகள் போதாது.

யாரிடம் கொடுத்து இக்காரியத்தை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்று கண்டறியும் தீர்க்கதரிசியும் நீங்கள் தான். அந்த வகையில் நானே ஓர் உதாரணம். நான் ஆசிரியராக இருந்த காலத்தில் என்னிடமிருந்து பல விடயங்களை இனம் கண்டு ஊக்கப்படுத்தி சிறந்த நிலைக்கு கொணர்ந்த சிற்பி நீங்கள் தான். இவ்வாறு பலரை உருவாக்கி பல மாணவர்களை பயன்பெற வைத்த பெருமைக்குரியவரும் தாங்களே! தனது சொல்லினால், செயலினால், உடையினால், அழகினால்,தேசிய இலக்குகளை மாணவர் அடைவதற்கு நீங்கள் பயன்படுத்திய அஸ்திரங்கள் அவை. இது இறைவனால் தங்களுக்கு வழங்கப்பட்ட மாபெரும் சொத்து.

பாடசாலைக்குச் சென்றால் தாங்கள் கல்வி புலத்தை மாத்திரமல்லாமல் பாடசாலையின் அழகு, கட்டடங்களின் வியூகம், வகுப்பறை ஒழுங்கமைப்பு, பாடசாலையை மேம்படுத்த புதுமையான வாசகங்கள், பசுமைப்படுத்துவதில் கரிசனை,அதிபர், ஆசிரியர், மாணவர்கள், உங்களைக் கண்டு உடையில், நடையில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்களை இவ்வாறு உங்களின் அற்புதப் பணிகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். சுருங்கச் சொன்னால் உதாரண புருஷர் ஐயா நீங்கள்.

தங்கள் பணி நிறைவு காலத்தில் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளுடன், செல்வ செழிப்புடன், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், சுற்றத்தாருடன் மனம் மகிழ்ச்சியுடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித உள்ளங்களில் வாழும் அருணாகரன் சேர்

S.M.M. Razmi
பிரதி அதிபர்
கரைத்தீவு மு.மகாவித்தியாலயம்

வெள்ளக்குட்டி அருணாகரன் : 1984, டிசம்பர் 27ம் நாள் ஆசிரியராகப் பணியை ஆரம்பித்து, இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்குள்(SLISA) உள்ளீர்க்கப்பட்ட நிலையில், பாட இணைப்பாளராக பணியாற்றி, 2024, ஒக்டோபர் 11ம் நாள் அரச பணி நிறைவு பெற்றவர். இவர், மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைநீலாவணை கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கே.எம்.ஏ. அஸீஸ் என்ற ஆளுமை அதிபராக இருந்த தருணத்திலே, ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்து, தொடர்ந்து இலவன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய பின்னர் புத்தளம் கல்வி வலயத்தில் ஆசிரியர் ஆலோசகராக, பாட இணைப்பாளராக சேவையாற்றி, புத்தளம் பிரதேசத்தின் கல்விப் புலத்தின் அபிவிருத்திக்குப் பங்களித்தவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றின் வருகைதரு பகுதிநேர விரிவுரையாளராகவும்(Visiting Lecture) பணியாற்றியவர். நீண்டகால கல்விசார் அனுபவங்களை வரித்துக் கொண்டவர். தன்னை இற்றைப்படுத்திக்கொள்ளும் மரபு கொண்டவர். ஆசிரியர் கல்வியில் புத்தாக்கமும் புதுமையும் சிறக்க உழைத்து வந்த இவர், கற்றல்-கற்பித்தல் மற்றும் கல்வி அபிவிருத்திசார் செயற்பாடுகளில் சுமார் 40 ஆண்டு காலம், புத்தளம் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்.

வெள்ளக்குட்டி இலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரரான இவர் ஆரம்பக் கல்வியினை துறைநீலாவணை மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியினை துறைநீலாவணை தமிழ் மகாவித்தியாலயத்திலும், உயர்தரக் கற்கையை மருதமுனை அல்-மனார் முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் கற்றவர். இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தினையும்,(B.A.) தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்விடிப்ளோமாவையும்,(PGDE) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வகுப்புச் சித்தியுடன் கல்வி முதுமாணி பட்டத்தினையும்(M.Ed) பெற்று, தனது தகைமையையும், அறிவாற்றலையும் விருத்திசெய்து கொண்டவர். தேசியமட்டத்தில் பல கல்விசார் பயிற்சி நெறிகளிலும் பங்குபற்றியவர்.

இன்று கல்வியியல் துறையில் வளவாளராக பரிணமித்து கற்றல், தேடல் என்பதை தனது பண்புசார் கோலங்களாக வெளிப்படுத்துபவர். தமிழ்மொழி மூலமான கல்விச்சூழல், புலமைத்துவம் தொடர்பான அகல்விரி சிந்தனைகளையும், விமர்சனங்களையும் மற்றும் நடைமுறைகளையும் தன்னகத்தே கொண்டு இயங்குபவர். இவர், ஆரம்பக்கல்வி அறிவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியின் விரிவாக்கப் புலங்களை உடனுக்குடன் உள்வாங்கி, கல்விப் புலத்தில் புதுமலர்ச்சி ஏற்பட முயற்சிப்பவர். இவரது கல்விப்புலம் சார்ந்த பணிகள் அற்புதமானவை, அளவிட முடியாதவை. இதற்கு கல்விப்புலத்தில் இவரது ஈடுபாடு மேலும் வலுச்சேர்க்கின்றன. சமகால கல்வி வளர்ச்சியில் தரவிருத்தியை உறுதிப்படுத்தும் கற்றல் - கற்பித்தலை முன்னிறுத்தி இயங்கி வருபவர். இவர் கல்விப்புலத்தில் தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கி மிகச் சிறப்புடன் பணியாற்றியவர்.

இவர் கற்றல் - கற்பித்தல் பணியுடன் மட்டுமல்லாமல் ஆசிரியர்களை வளப்படுத்தி, நெறிப்படுத்தும் வளவாளராகவும் தன்னை வளப்படுத்திக் கொண்டவர். தொடருறு கல்விச் செயற்பாட்டின் பண்புசார் தரவிருத்திக்கான கல்விச் சமூகத்தின் பல தளங்களிலும் பல நிலைகளிலும் தீவிர இயக்கம் கொண்டவர். சுயதேடல், சுயகற்றல் என்பற்றில் தீவிர வேட்கையுள்ள இவர், தனது பணியில் புத்தாக்கமாகவும் புத்துணர்ச்சியுடனும் ஈடுபட்டு வருபவர். கோட்பாடும் பிரயோகமும் இணைந்த கல்விப்புலம் சார்ந்த புதிய சிந்தனைகளை தன்னகத்தே கொண்டவர்.

தன்னடக்கம், மனிதநேயம், மனிதம் போன்ற உயரிய விழுமியங்களை தனது பண்புகளாகக் கொண்ட இவர், சகோதர வாஞ்சையுடன் எல்லோருடனும் பழகும் குணம் கொண்டவர். புத்தளம் கல்வி வலயத்தின் "தமிழ்ப்பிரிவின்" (Tamil Unit) அபிவிருத்திக்கும், தமிழ்மொழிமூல பாடசாலைகளின் குறிப்பாக ஆரம்பக் கல்விப் புலத்தின் உயர்ச்சிக்கும் அச்சாணியாக விளங்கிய திரு. வீ.அருணாகரன் சேர் அவர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்களையும் தாண்டிய, மனித உள்ளங்களில் வாழும் மனிதமுள்ள மனிதர் என்றால் அது மிகையாகாது. புத்தளம் பிரதேச மண்ணிற்கு சிறந்த மாணவர் பரம்பரையை உருவாக்கிக் கொடுத்த கல்வியாளர்களில் ஒருவர். தனது நிலைக்கு மற்றவர்களையும் உயர்த்துவதற்கு அயராது உழைத்தவர். தன் மாணவர்கள் சிறந்த சிந்தனையாளர்களாக மிளிர வேண்டும் என்ற ஆவல் கொண்டவர். தன் வாழ்வை கல்விக்காகவே அர்ப்பணித்தவர். நவீன சிந்தனைகளைத் தன்னகத்தே உள்வாங்கிக் கொள்பவர். மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுப்பவர். தனது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புபவர். சிறந்த ஆலோசகர். என்னையும் கற்றலில் ஊக்கப்படுத்தி வழிப்படுத்தியவர். இவரது பணி நிறைவு ஏற்படுத்தும் இடைவெளி, பிரதியீடு செய்யப்பட முடியாதது எனக் கருதுகிறேன். ஆரம்பத்திலிருந்தே நம்ப முடியாத சிந்தனைகளையும் அர்ப்பணிப்பையும் கொண்டவர். எப்போதும் எமது கிராமத்திற்கும் சமூகத்திற்கும் முதலிடம் கொடுப்பவர். புத்தளம் பிரசேத்தின் கல்விப்புலத்தில் ஆரம்பம் முதல் அரச பணி நிறைவு பெறும் வரை யதார்த்தமான சிந்தனைகளால் மிகப் பெரிய மாற்றங்களுக்கு வித்திட்டவர்.

வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தில் அடியெடுத்து வைக்கும் அருணா சேர் அவர்களுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களும் பிரார்த்தனைத் தேடல்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடை பெறும் அன்பின் பணிவு

எஸ்.சுப்ரமணியம்,
அல் -கரம் மு.ஆ.பா.,
பள்ளிவாசல்துறை.

வாரத்தின் இறுதி நாள் இனிதே ஆரம்பிக்கும் வேளையில் வாட்சப்பில் "இன்றைய சிறப்பான நாளில் இறையன்பில் இணைந்து காலை வணக்கம் (புழுழன அழுசனைப) கூறுவதில் மகிழ்ச்சி" என்ற அருணாகரன் சேர் அவர்களின் வாழ்த்துச் செய்தியைப் பார்த்ததும் அந்த வார இறுதி மகிழ்ச்சி காணாமல் போனது. ஏனெனில் பாட இணைப்பாளர் மதிப்பிற்குரிய அருணாகரன் சேர் அவர்களின் பணிநிறைவு நாள் என்பது நினைவுக்கு வந்தது. இவ்வாறான எத்தனையோ செய்திகளை கடந்து போயிருப்பினும், இந்தச் செய்தி மட்டும் மனதில் ஒரு சோக நெருடலை தருகிறதே, ஏன்? என்பதில் தத்துவார்த்த ஆராய்வில் மனம் குழம்பி போனது.

அன்றைய தினம் Tmailunit puttalam, Kalpity GRADE 5(2024) Kalpity GRADE 4 (2024) Primary teacher put /T, Proud of tamil போன்ற வட்சப் குருப்களில் ( நான் தொடர்புடைய) மற்றும் முகநூலில் பரிமாறப்பட்ட வாழ்த்துச் செய்திகள், குறிப்புகள் என்பவற்றை அவதானிக்கும் போது அந்த நெருடல் எனக்கு மட்டுமல்ல புத்தளம் கல்வி வலயத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளதை உணர முடிந்தது.

ஆரம்பக் கல்வி பாட இணைப்பாளரின் பணி நிறைவு செய்தியின் தாக்கம், அல்லது அதன் வீச்சு எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்பதையிட்டு பூரிப்படைந்தேன். ஓர் ஆசிரியராகி வகுப்பறைக்குள் அடங்கி விடாது தன் பன்முக ஆளுமைத்திறன்கள் மூலம் புத்தளம் கல்விப் பணிமனையில் ஆரம்பக் கல்வி பாட இணைப்பாளராகி, வலயத்திலுள்ள அனைத்து ஆரம்ப வகுப்பறைகளிலும் தனது புலமையையும் அனுபவங்களை யும் பகிர்ந்து கொள்வதில் முனைப்புடன் செயற்பட்டவர்.

மீன் பாடும் தேனாடம் மட்டக்களப்பு துறை நீலாவணையை பிறப்பிடமாகக் கொண்டு பேராதனை பல்கலைகழக பட்டதாரியாகி, ஈழத்தின் தலைவாசலாம் வடமேற்கு கரைதனில் கரைத்தீவு முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் 1984 டிசம்பர் 27 அஆம் திகதி ஆசிரியராக முதல் நியமனம் பெற்றுள்ளதுடன், அங்கேயே தனது வாழ்க்கைத் துணையையும் கண்டு கொண்டுள்ளார். இதனால் புத்தளம் அவரை புதல்வராக ஏற்றதனால் தனது கல்விச் செல்வத்தை 40 வருட கல்விச் சேவையாக புத்தளத்திற்கே வழங்கிய பெருங் கொடையாளரக தன்னை அடையாளப் படுத்தியுள்ளார் அருணாகரன் சேர். ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, ஆரம்பக் கல்வி பாட இணைப்பாளர் என பல்வேறு மட்டங்களில் தனது கல்விப் பணியை முன்னெடுத்துள்ளார். இதன் மூலம் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் அபிமானத்தை வென்றவர்.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் போன்றவை மூலம் பெற்றுக் கொண்ட தகவல்கள், பயிற்சிகள், அனுபவங்களை ஆசிரியர்களுடன் முழுமையாக பகிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதில் அதீதமான அக்கறையுடன் செயற்பட்டவர்.

பாரம்பரிய சேவைக்கால பயிற்சிகளை தாண்டி செயற்பாடுகளுக்கும், ஆசிரியர்களின் முன்வைப்புகளுக்கும், அனுபவப் பகிர்வுகளுக்கும் களமாக அந்நிகழ்வுகளை வடிவமைத்ததில் அருணாகரன் சேர் அவர்களின் பங்களிப்புகள் மேன்மையானவையாகும். அருணாகரன் சேர், ஒருபோதும் அதிகாரி என்ற தளத்திலிருந்து செயற்பட்டதை நான் அவதானித்ததில்லை. நவீன தலைமைத்துவ பண்புகளுடன் தோழமையுடன் செயற்பட்டுள்ளதையே அனைவரும் உணர்ந்துள்ளோம். பாடசாலை மேற்பார்வையிடலின் போது எமது குறை பாடுகளை முதலில் அவரே ஏற்றுக் கொள்வார். எமது சமகால தனிப்பட்ட விடயங்களை சினேக பூர்வமாக விசாரித்து அதன் அதன் பின்னணியிலிருந்து நாம் திருத்திக் கொள்ள வேண்டிய பகுதிகளின் தாற்பரியத்தை உணர்த்தி உற்சாக மூட்டுவார். நீண்ட நேரத்திற்குப் பின்புதான் அவரது கடமையை கச்சிதமாக முடித்துச் சென்றதை ஆசிரியர்களால் உணர முடியும்.

மனித நேயமும் சேவையுணர்வும் கொண்ட ஒருவரின் பணிகள் எவ்வாறு அமையும் என்பதற்கு அருணாகரன் சேர் ஒரு நல்ல முன்மாதிரியாவார். புத்தளம் வலயத்திலுள்ள ஆசிரியர் குழாமினை வாசிப்பதிலும் அதிலும் தனது சேவைக்குட்பட்ட ஆசிரியர்களை எவ்வாறு கையாள்வது என்பதிலும், சிறப்பான தேர்ச்சியினை பெற்றிருக்கிறார்.

ஒரு கல்வியிலாளருக்கு பிரதானமானது எவ்வாறான சமூகக் கட்டமைப்புக்குள் தனது பணிகள் அமைகின்றன என்பதைப் பற்றிய புரிதல்களாகும். இப்புரிதல்களே தனது அறிவையும், அனுபவங்களையும், ஆற்றல்களையும் அச்சமூகத்திற்கு கடத்துவதற்கான வழிகோலுகின்றன. அதற்கான ஆளுமைகளையும் உருவாக்குகின்றன. இவ்வாறான ஆளுமைகளே சகலரினதும் மனதில் பதிகின்றன. அதற்கு சிறந்த உதாரணமாக சமகாலத்தில் அருணாகரன் சேர் விளங்குகின்றார். அதன் பிரதிபலிப்புகளே அவருக்கு சமூக ஊடகங்களில் பகிரப் படுகின்ற வாழ்த்துச் செய்திகளும், குறிப்புகளும் ஆகும்.

*40* வருட அனுபவங்களின் தொகுப்பு என்பது பலருக்கும் எட்ட முடியாத விடயமாகும். எமது ஆயுளில் ஐந்திலொரு பங்கு இவரின் அனுபவமாகும். அனுபவங்களே சிறந்த ஆசான் என்பதற்கு அருணாகரன் சேர் சிறப்பான உதாரணமாவர். அதனை ஆதாரமாகக் கொண்டே அனைத்து சேவைக்கால பயிற்சி செயலமர்வுகளிலிலும் ஆசிரியர்களுக்கு விடயங்களை புகுத்துவதிலும், செயன்முறை பயிற்சிகள் வழங்குவதிலும் திட்டமிடல்கள் அமைந்திருக்கும் போக்கினை அவதானிக்கலாம். இற்றைப்படுத்தலுடனான விடயக் கலுந்துரையாடல்களை முன்னெடுத்து ஆசிரியர்களுக்கு உத்வேகத்தை அளிப்பதில் வல்லவராகவும் தன்னை நிலைப் படுத்தியவர். இச்சந்தர்ப்பங்களில் தோழமையுடன் உறவாடி உரையாடும் அவருக்கேயுரிய பாணியினையும் அவதானிக்கலாம். இதுவே சகலரின் மனங்களிலும் இடம் பிடிப்பதற்குரிய தாரக மந்திரமாகவும் இவருக்கு விளங்கியதெனலாம். குளத்தளவே தாமரை எனும் கோட்பாட்டுக்கு அப்பால் நின்று, கல்வி, ஆன்மீகம், நவீன உலகியல் போக்குகள் என சகல துறைகளிலும் தொடர்ச்சியான வாசிப்பினையும், அவதானிப்புகளையும் கொண்டு, தனது துறைசார்ந்த, பதவிசார்ந்த நிபுணத்துவத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் மாணவனாகவும் தன்னை வெளிப் படுத்தியவர் அருணாகரன் சேர் ஆவார். செயலூக்க அமர்வுகளில் கலந்து கொள்கையில் நான் அவரிடம் அவதானித்த விடயங்களில் ஒன்று சபைக்கு அடங்குதலும், சபையை அடக்குதலும் ஆகும். இவ்விரு விடயங்களும் அவருக்கு கைவந்த கலையாகும். அதற்கு காரணம் அவரின் தோழமை எண்ணங்களும், தொடர்ச்சியான அறிவுத் தேடல்களும், அனுபவங்களுமாகும். பங்கு பற்றுனர்கள் குளத்தின் நீர் மட்டமாகும் போது அவர் அதில் பூத்திருக்கும் தாமரையாக திகழ்கிறார்.

கல்வித் துறை சார்ந்தோர் புத்தாக்க சிந்தனைகளுக் கும், படைப்புகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலூக்கம் வழங்கும்போது கல்விப் புலத்தில் மாற்றங்களை உருவாக்க முடியும். இந்த மாற்றங்களிலிருந்தே வாண்மைத்துவமிக்க ஆசிரியர்களும் உருவாக முடியும். இலங்கையின் சமகால கல்விப் போக்குகளுக்குள் அதற்கான தளங்களை திறந்து விடுவதற்கும் ஆழ்ந்த விடய அறிவும், கல்விக் கொள்கை பற்றிய தெளிவும் கொண்ட அசாத்தியமான தற்றுணிவும், அவசியமாகும். இத்தகைய பின்னணிக்கு அருணாகரன் சேர் கச்சிதமாகப் பொருந்தக் கூடியவராவார்.

இவ்வாறான தன்மைகள் அருணாகரன் சேர் தாரளமாகவே கொண்டிருக்கின்றார். ஆசிரியர் செயலூக்க அமர்வுகளின் போது முன்வைக்கப்படும் விடயங்களை நன்கு அவதானித்து அவற்றில் புதிய போக்குகளை வெளிப்படுத்தும் விடயங்களை முன்னிலைப் படுத்துவதிலும், அத்தகைய அனுபவங்களுக்கு முன்னுரிமை அளித்து ஏனையொருக்கும் எடுத்து காட்டாக்குவதிலும் ஒரு போதும் பின்னிற்பதில்லை. அத்தகைய ஆசிரியர்களை இனங்கண்டு தனிப்பட்ட ரீதியாகவும் உற்சாகமூட்டுவதிலும் முனைப்புக் காட்டி வருபவர். நல்ல தலைவர்கள் தனக்குப் பின்னரும் நல்ல தலைவர்களை உருவாக்குவதில் பின்னிற்க மாட்டார்கள். ஆம் அருணாகரன் சேர் நல்ல தலைவராகவும் விளங்குகின்றார்.

ஆன்மீகம் ஒரு மனித குலத்தை நல்வழிப்படுத்தும் சிறந்த கருவியாகும். அக்கருவியை பயன்படுத்துவதற்கு சிறப்புத் தேர்ச்சியை பெற்றிருப்பது மிக முக்கியமாகும். தான் சார்ந்துள்ள சமூக இயங்கியலின் ஆன்மீக கருது கோள்களை அறிந்திருப்பது மிகவும் முக்கியமாகும். அருணாகரன் சேர் அவர்களின் பல்லின, சமய, கலாசார, விழுமியங்களை மதிக்கும் பண்பு இதனை நன்கு உணர்ந்தவராக எம்மத்தியில் அவரை நிலை நிறுத்தியுள்ளது எனின் அது மிகையன்று. இவரது பேச்சுக்களின் போது மேற்படி விடயங்களை நன்கு உணர முடியும். அதனால்தான் பணி நிறைவையொட்டி அண்மைக் காலங்களில் அவருக்கு சமய, மொழி வேறுபாடுகள் கடந்த நிலையில் பல பாடசாலைகளிலும் வரவேற்பளிக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார்.

கல்வி புலம் சார்ந்த அதிகாரிகளுள் ஆசிரியராக நான் சந்தித்தவர்களில் ஓரிருவர் மட்டுமே என்னை தொடர்ந்தும் ஞாபகத்தில் கொண்டு அவ்வப்போது கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டு வருபவர்களாக உள்ளனர். அவர்களில் முதன்மையானவராக அருணாகரன் சேர் விளங்குகின்றார். எனது அனுபவங்களையும், கருத்துக்களையும், மதித்து உற்சாகம் அளிக்கும் நண்பராகவும் அவர் என்வரையில் செயற் பட்டுள்ளமையை மறவேன். இவ்வாறான அனுபவங்கள் நானறிந்த பல ஆசிரிய நண்பர்களும் பெற்றிருப்பதையும் நான் அறிவேன். இதுவே அவருக்குரிய வாழ்த்து மழையின் கருவூலமாகும்.

புத்தளம் கல்வி வலயம் முக்கியமான தருணத்தில் முக்கியமான நபரின் சேவையை இழந்துள்ளது. இவருடைய அனுபமும் அர்ப்பணிப்பும் சில காலம் தொடர்ந்தும் கிடைத்திருக்குமாயின் மாற்றங்களை அடைந்து கொள்ள இலகுவாக இருந்திருக்கும். இருப்பினும் இவரிடம் இருந்து பெற்றுக் கொண்ட சமகால தலை முறையினர் ஒன்றிணைந்து, செயற்படுவோமாயின் அதுவே அருணாகரன் சேர் அவர்களின் பணியின் தொடர்ச்சியாகும். அதுவே அவருக்கு அளிக்கப் படக்கூடிய மிகச் சிறந்த கொளரவமாகும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது என்பது எனது கருத்தாகும்அவரது பணி நிறைவின் பின்னரான காலம் மகிழ்ச்சியாகவும், உடல், உள ஆரோக்கியத்துடன் மேன்மையுடன் திகழ கல்பிட்டிக் கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் சார்பில் வாழ்த்துகின்றேன்.

எங்கள் வாழ்த்துக்கள் நிதர்சனமாவது, புத்தளம் கல்வி வலயத்தின் கல்வி எழுச்சியில், அருணாகரன் சேர் எம்மிடம் எதிர்பார்த்த அர்ப்பணிப்புமிக்க பங்களிப்புகள் உறுதிப்படுத்தும் போதாகும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

சந்திப்போம் சேர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்ப பிரிவு பாட இணைப்பாளர் திரு .வி. அருணாகரன் அவர்களின் பணி சிறப்பு

திருமதி. வசந்த பூரணி இராமநாதன்.
ஆரம்ப பிரிவு பகுதி தலைவர்
பு/சென்மேரிஸ் த. ம.வி

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மண்"

ஆசிரியத்துவம் என்பது தன்னலம் கருதாத சேவையாகும். பணம், பதவி, புகழ் ,விருது வேண்டாமல் மாணவர் மனதினில் புகுந்து அவர்களை நன்னெறிப் படுத்துவது ஒரு புனித வேள்வி ஆகும்.

இத்தகு பெருமை வாய்ந்த ஆசிரியப் பணி என்னும் உயர்தொழிலுடன் 1984 ஆம் ஆண்டு தனது சேவையினை ஆரம்பித்த திரு .வி. அருணாசரன் அவர்கள் 1998 ஆம் ஆண்டு சமூக விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்றார்.

2008 ஆம் ஆண்டு ஆலோசனையும் வழிகாட்டலும், வாழ்க்கை தேர்ச்சி, சமாதான கல்வி ஆகிய பாடநெறிகளுக்கு ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றியதுடன்

இவ்வாண்டிலேயே ஆரம்ப பிரிவுக்கான பாட இணைப்பாளராக பதவி உயர்வு பெற்றார். முதுகல்விமானி, பட்டபின் கல்வி டிப்ளமோ ஆகிய கல்வி தொழில் தகைமை களைப் பெற்ற அருணகரன் ஐயா அவர்கள் வடமேல் மாகாண ,வட மாகாண முன் பள்ளி ஆசிரியர் டிப்ளமோ பயிற்சி நெறியின் வளவாளராகவும், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் வருகை தரு விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்...

அருணாகரன் ஐயா அவர்கள் ஆரம்பக் கல்வி பிரிவின் பாட இணைப்பாளராக கடமை ஏற்ற பின்னர் புத்தளம் கல்வி வலயத்தின் தமிழ் மொழி மூல ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர்கள், ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்றிணைத்த ஒரு குழுவின் தலைவராக ஆரம்பப் பிரிவினை செம்மையாக வழிநடத்திச் சென்றுள்ளார் என்றால் அது மிகையாகாது .

இவர் ஒரு தலைவருக்கான சிறப்பியல்புகளை தன்னகத்தே கொண்டிருப்பதனால் அவரால் சிறப்பாக செயலாற்ற முடிகிறது. அவருடைய வார்த்தையில் வீரம், அன்பு, பண்பு எல்லாமே ஒன்றிணைந்திருக்கும். ஒவ்வொரு ஆசிரியரையும் "மகன், மகள் "என விளித்து நட்புடன் உரையாடும் பண்பு இதற்கு உதாரணமாகும்.

கற்கத் தொடங்குபவன் மாணவன். கற்றுக்கொண்டே இருப்பவன் ஆசிரியன். இத்தகைய ஆசிரியர்கள் கற்பதற்காக புதிய விடயங்களை அறிந்து கொள்வதற்காக .திரு.வி. அருணாகரன் ஐயா அவர்கள் தான் பங்கு பற்றிய செயலமர்வுகளில் இருந்து பெற்றுக் கொண்ட விடயங்களை ஆரம்பப்பிரிவு செயலமர்வுகள் , பயிற்சிப் பட்டறைகள் ,குழு மேற்பார்வைகளின் போது ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கு வழங்கி அவர்களை வழிப் படுத்தியவர்.

காலந்தோறும் மாறும் இயல்பினைக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயல்முறை களுக்கு முகம் கொடுக்கும் வகையில் ஆசிரியர்களை இற்றைப் படுத்தலில் ஈடுபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி வினைத்திறனுடனான பங்காற்றலுக்கு வகை செய்தவர். அவரது ஆரம்பப் பிரிவு தொடர்பான பரந்த அறிவு ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் சுய அறிவு விருத்தி, அவர்களின் பலம், பலவீனங்களை இனங் கண்டு குறைபாடுகளை வெற்றி கொள்ள வழி வகுத்தது.

அருணாகரன் ஐயா அவர்கள் ஆசிரியர் வாண்மை விருத்தி கருத்தரங்குகள், செயல் அமர்வுகள், தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான ஆசிரியர் தரவட்ட கலந்துரையாடல்கள் பயிற்சி பட்டறைகள் நடைபெறுவதற்கு பாட இணைப்பாளராக முன் நின்று செயல்பட்டிருக்கிறார் இவற்றின் மூலம்

(தரம் 1-5 )வகையான ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை திட்டமிட உதவுதல்.

பொருத்தமான தர உள்ளீடுகளை தயாரிப்பதில் ஆலோசனை வழங்கள்.

தரம் ஐந்திற்கான பெறுபேற்று அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் செயற்பாடுகள். கற்றல் கற்பித்தல் திறனை வெளிக்காட்ட உதவுதல்.

கல்வி இணைப்பாடவிதான நிகழ்வுகளை ஒழுங்கமைக்க உதவுதல்.

செயல்பட்டு மகிழ்வோம் ,சுற்றாடை பாசறைகளை ஒழுங்கு செய்தலூடாக எமது ஆரம்ப பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும் பல பயன்களை அடைந்துள்ளனர்.

வலயக்கல்வி பணிமனையின் குழு மேற்பார்வை பாடசாலை தரிசிப்புகளின் போது ஆசிரியர்கள் மாணவர்களை மதிப்பிடுவதற்கு தேவையான ஒழுங்கமைப்புடன் வருகை தருபவர்.

சிறப்பான வழிகாட்டலை வழங்கி ஆசிரியர்கள் செயல்நிலை ஆய்வினை மேற்கொள்ள தூண்டுகோலாக இருந்தவர்.

பிள்ளை விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் அனைத்து காரணிகள் தொடர்பான நிபுணத்துவம் பெற்றவராகவும் இருப்பது எமது ஆரம்ப பிரிவிற்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும்.

ஐயா அவர்கள் பாடசாலைக்கு வரும் வேளைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் பொருத்தமான கற்றல் சூழல் நிலவுகின்றதா? என்பதனை அவதானித்து ஆலோசனை வழங்குதல். அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியின் அடைவு மட்டத்தினை பரீட்சித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றார்.

அருணாகரன் ஐயா அவர்களின் பணி ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் வளர்ச்சிக்காக தொடர்ச்சியாக வழி காட்டப்படுகின்ற, ஊக்குவிக்கின்ற செயல்முறையாக அமைந்திருக் கின்றது.

இதன் அடிப்படை குறிக்கோள் மாணவரின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அடிப்படையாக உள்ள அனைத்து காரணிகளையும் கூட்டாக இணைத்து விருத்தி செய்வதாகும்.

புத்தளம் வலயக்கல்வி பணிமனையின் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு .Z.A. சன்ஹீர் ஐயா அவர்களுடன் இணைந்து அருணாகரன் ஐயா அவர்கள்

"2020இல் அனைவரும் வாசிப்பர்,எழுதுவர்" என்ற செயல் திட்டத்தினை 2017 ஆம் ஆண்டு அமுல் செய்வதற்கு முன்னின்று உழைத்ததுடன் அதற்கான கையேடு ஒன்றிணையும் வெளியிட்டிருந்தார்.

சுற்றாடல் பாசறைகளின் போது மாணவருக்கான வினாக்கள் அடங்கிய நூல்களை வெளியீடு செய்திருக்கிறார். ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் "அன்பு" "புலமை" ஆகிய சுவர்ப் பத்திரிகைகளும் இவருடைய காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன.

ஐயா அவர்கள் பெற்றோருக்கான வழிகாட்டல் கையேடுகளை வழங்கி அவர்களுக்கான கலந்துரையாடல்களில் கலந்து கொண்டு பெற்றோரை தெளிவு படுத்தியுள்ளார்.

பாடசாலைகளில் நடைபெறும் விழா ஏற்பாடுகளின் போது அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டல்கள் எம்மை சிறப்பாக செயல்பட உதவியுள்ளன. அதே வேளை சிறந்த விடயங்களை மனப்பூர்வமாக பாராட்டவும், குறைபாடுகளை உரியவர் மனம் புண்படாதபடி எடுத்துக் கூறவும் தயங்காதவர்.

எந்த ஒரு சேவையிலும் பற்றும், மன உறுதியும், நம்பிக்கையும், அர்ப்பணிப்பும் கொண்டு சேவையாற்றும் போது அதில் உள்ள குறையை விட நிறைவே தென்படும். கல்வித் துறையில் உள்ள எந்த ஒரு சேவையும் மாணவர்களுக்கானதே என்பதை மறந்து விடாது அருணாகரன் ஐயா அவர்கள் தனது பதவியை மாண்புறச் செய்தவர்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ,கல்வி அதிகாரிகள், பெற்றோர் என சமூகத்தில் சகலரது மனதிலும் வாழும் திரு. வி . அருணாகரன் ஐயா அவர்களின் பணி நிறைவு என்பது எமது கல்வி வலயத்திற்கு ஈடு செய்ய முடியாத விடயமாகும். புத்தளம் கல்வி வலயத்திற்கான அவரது 40 வருட சேவை என்றென்றும் போற்றுதற்குரிய அளப்பரிய பணியாகும்.

நீண்டதொரு பயணம் செய்து நெடுநாள் கடந்தின்று தூண்டாமணி விளக்காய்( 2024.10.11) தூய பணி முடித்து.

பணி நிறைவெய்தும் திரு.வி.அருணாகரன் ஐயாவின் மணி விழாவினை ஒட்டி வெளியிடப்படும் மலருக்காக அவரது பணிச்சிறப்புப் பற்றிய இக்கட்டுரையினை எழுதுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன். ஐயா அவர்களின் ஓய்வு காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடமாடும் கலைக்கூடமே !

திருமதி .வதன ஸ்ரீ கருணாகரன் .
ஆசிரியை.(BA/PGDE )
பு/ஆண்டிமுனை த.ம.வி.உடப்பு.

அறிவுலகின் வைர கல்லே உமக்காய்
உப்புக்கல்லில் கசியும் வரிகள் சில

அலைகடல் வீசும் கலைக் கடலூராம் மட்டக்களப்பில்
மலையென வந்துதித்த தலையே . உம்மை
சிலையென்று நான் வடித்து ,
விலையில்லா புகழ் மாலையை சூட்டுகின்றேன்.

இருமனம் இணைந்த ஏரம்பு வெள்ளைக்குட்டி
முத்தம்பி இலட்சுமி
திருமணம் புரிந்து செல்லக்குட்டி அருணாகரன்
கடைக்குட்டி கலைச்செல்வி என்ற
இரு மலர்களை ஈன்று பிரிவிலா வாழ்வில் திகழ்ந்தார்.

துறை நீலாவணையில் ஆரம்பக் கல்வியை
முறையாக் கற்க அடியெடுத்து
பிறைபோல வளர்ந்து மெத்தடிஸ் மிஷனில்
நடை பயின்று
மருதமுனை அல்மனார் வித்யாலயத்தில்
ஓடி இருந்து
பேராதனையில் பல்கலைகள் தேடித் திரிந்தீர்
வாழ்க வாழ்க.

கண்ணியத்தின் கலைக்கூடமே!
புண்ணியத்தின் புதையல் குடமே!
என் இதய தாமரையில் என்றும்
வீற்றிருக்கும் திருமகனே!
வாழ்க வாழ்க.

அன்னை போல் அரவணைத்து ஆசிரியராக
கரைத்தீவிலும் பின் இலவன் குளத்திலும்
திண்ணை வெளியில் பிள்ளைகளுக்கு அறிவுரைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிற்கினிய கலைமகளாம்
அன்சிலா மியூரியை அ என்ற எழுத்தில் ஆசை கொண்டு
அருணாகரன் அன்ஷிலாவை.மணம் புரிந்து
வண்ண மலராம் ஆகர்ஷா மியூரியை
மகவாகப் பெற்று
எண்ணம் போல் இன்ப வாழ்வில் திளைத்தீர்
வாழ்க வாழ்க.

நிமிர்ந்த நடையழகு நிலை கொள்ளா சிகையழகு
சிரித்த முகமழகு சிங்கார பேச்சழகு -தரம்
பிரித்துப் பார்க்காத பண்புழகு -பொருள்
விரித்துப் படிப்பிக்கும் உந்தன் அன்பழகு
அறுபதிலும் இருபதைப் போலிருக்கும் இளமை யழகு
வாழ்க வாழ்க.

நெற்றியில் கண்ணாடியோடு கிள்ளை மொழி பேசி
சுற்றியே முன்னாடியுள்ள பிள்ளை நேயக் கல்வியினைப்
பற்றியே பேசியும் பாடியும் ஆடியும் தொல்லை தீரப்
பயிற்றுவித்த உம்மைப் போற்றியே வாழ்ந்திடுவோம்
கொள்ளை இன்பம் கொள்ள வைத்தீர்
வாழ்க வாழ்க!

பட்டங்கள் பெற்று படிப்பினில் உயர்ந்து
கலைமானி முதுமானியாகி
திட்டங்கள் தீட்டி திறமையில் வளர்த்து
ஆசிரிய ஆலோசகராகி
சட்டங்கள் வகுத்து கட்டம் கட்டமாக
பாட இணைப்பாளராகி
வட்டமிட்டுத் திரிந்த அறிவுப் பெட்டகமே நீர்
வாழ்க வாழ்க

முன்பள்ளிச் சாலையிலே ஆசிரியருக்கு
முனைப்போடு அறிவூட்டி
முன்னேற்றப் பாதையிலே இளைஞர்களை
நினைப்போடு தெளிவூட்டி
பின்னேர வேளையிலே தடை தாண்டல் பரீட்சையினை
தடையின்றி நிறைவேற்றி
கண்ணியமாய் கல்வி தனை இருளகற்றி ஒளியேற்றினீர்
வாழ்க வாழ்க!

ஓய்வின்றி உழைத்து உயர்வாக வளர்ந்தீர்
தேய்வின்றி சேவை செய்ய உன் வேலை மறந்தீர்
நோயற்ற போதும் பிறர் துயர் தீர்க்க வருவீர்
தாய் போல இருந்து ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேய் தன்னைக் காத்தீர்
வாழ்க வாழ்க!

ஏணிப்படியாய் இருந்து ஏறும் வரைக்கும் உயர்த்திடுவீர்
ஏற்ற வளர்ச்சி எய்தபோது எம் மாற்றம் கண்டு மகிழ்ந்திடுவீர்
நடமாடும் கலைக்கூடமே தடம் பதிக்க திடம் பூணுவோம்.
வாழ்க வாழ்க!

காலம் தோறும் கலை வளர்த்த கல்விக்கூடமே நான்
வாழும் காலம் யாவும் உமக்கு நன்றி கூறுவேன்
விண்ணும் மண்ணும் அழியும் காலம் வந்த போதிலும்
என் நினைவில் குருவை நிறுத்தி வைத்து வாழ வேண்டுவேன்.
வாழ்க வாழ்க!

நீர் தந்த அறிவுரையை நிதம் நாளும் கண் போலக் காப்பேன்
கார்மேக மழை போல ஊர் போற்ற உமதறிவைச் சேர்ப்பேன்
சூரியரே! சுடர் வீசும் ஒளிமுதலே!
குருகுலரின் குறைதீர்க்கும் நிறை குடமே!
ஆதவனாய் மிளிரும் செழுஞ்சுடரே
உமை வாழ்த்த மாதவம் நான் செய்தேனோ?
நீர் வாழ்க நிதம் வாழ்க நிஜமாக
உன் இனம் வாழ்க வாழ்க!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகத்தான பணி வாழ்த்துகள்

நரக்கள்ளி .றோ.க.த.ம.வித்தியாலயம்.
ஆரம்பப் பிரிவு ஆசிரியை
திருமதி. S.S. அஜந்தா.

பணிகள் பல இருப்பினும் இவ்வுலகில் மகத்தான பணி ஆசிரியர் பணியாகும். பண்பான பிரஜையை உருவாக்கும் இப்பணியில் பல சாதனைகளைப் படைத்தவரும், ஆசிரியர் பணியை கல்வித் துறையை சிறப்பிக்க சிறப்பான தலைமைத்துவம் கொண்டவரும், நல்லுள்ளம் படைத்தவருமான புத்தளம் கல்வி வலயத்தில் தமிழ் பிரிவின் ஆரம்பப் பிரிவுக்கான பாட இணைப்பாளருமான திரு.V. அருணாகரன் ஐயா பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற சந்தர்ப்பம் கிடைத்தமை பெரும் பாக்கியமாக எண்ணுகின்றேன்.

திரு V.அருணகரன் ஐயா, கல்வித்துறைகளில் பல சாதனைகளையும் , ஆய்வுகளையும் , நிறைவேற்றி வெற்றி கண்ட மாமேதை என்றே கூற வேண்டும். அவரது நடை உடை பாவனை அன்று போலவே என்றும் மாற்றமின்றி ஜொலிக்கின்றது. எந்த ஒரு ஆரம்ப பிரிவு செயலமர்விலும் அழகு பெறுவதும் அர்த்தமுள்ளதாக அமைவதும் அவரது நகைச்சுவை கலந்த பேச்சு தான். நேர்கொண்ட பார்வையும் பெயர் சொல்லி இடை யிடையே ஆசிரியர்களை அழைத்து கண் விழிக்கச் செய்யும் அந்தப் பாங்கு இனி செயல மர்வுகளில் நாம் காணப்போவதில்லை என்பதை எண்ணும்போது மிகவும் கவலையை உண்டு பண்ணுகின்றது. எமது பாடசாலையை தரிசிக்க வரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வகுப்பறை மற்றும் கல்வி புலத்தில் வரும் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களும் தங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று ஆசிரியர்களின் கல்விப் புலத்திலும் ஞான கண்ணை திறந்து உயர்ச்சியை அடைய வழங்கும் அறிவுரையை கூட எம்மால் மறக்க முடியவில்லை. சில மேலதிகாரிகளை நோக்கினால் தமது பெயர் அருகில் பட்டம் பதவி என்பவை கூடும்போது தன்னகத்தே இருக்கும் நற்பண்புகளை இழந்து விஸ்வரூபம் எடுத்து பதவி மோகத்தில் தலைக்கணத்தில் செயலாற்றுகின்றனர் .ஆனால் திரு V. அருணாகரன் ஐயா 16 வருடங்களுக்கு முன் இருந்த தனது இயல்பு நிலையிலேயே இன்றும் இருந்து கொண்டு ஒளி வீசி கொண்டிருப்பதை எம்மால் காண முடிகின்றது. ஐயா உங்கள் மகத்தான சேவையானது எமது கல்வி புலத்தில் நிறைய மாற்றங்களைக் கொண்டு வர ஒரு காரணமாக அமைந்ததை எண்ணி நாம் நன்றி நவிழ்கின்றோம். இறைவனால் கல்விப் புலத்திற்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டீர்கள். உங்கள் சேவையில் இடையிடையே வந்த சவால்களை வெற்றிக் கொண்டு வீறு நடை போட்டு உங்கள் சேவையை நேர்மையாக, நிறையுள்ளதாக, அர்த்த முள்ளதாக செய்த மனத்திருப்தியுடன் இன்று பணி நிறைவு செய்வது உங்களுக்கும் எனக்கும் மகிழ்ச்சியை தந்தாலும் உங்கள் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை புத்தள வலய தமிழ் மொழி மூலம் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்கள் இழந்து விடுகின்றோம் என்பதை எண்ணும்போது மிகவும் கவலை எங்களை ஆட்கொள்கின்றது.இக்கல்வி புலத்தில் உங்கள் இடைவெளியை நிரப்ப இனி யாராலும் முடியாது என்பது உறுதி. மகத்தான பணி நிறைவு செய்யும் உங்கள் வாழ்க்கை இன்புற ,மகிழ்ச்சி பொங்க, குடும்பத்தில் சந்தோஷத்துடன் இறையருள் ஒன்றித்து வாழ, மனதார வாழ்த்தி பாராட்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகன்!

நஸ்ரா நிசாம்தீன்
B.A.(Hons),PGDE,M.phil(R)
ஆசிரியர்: கட்டைக்காடு றோ.க.த.ம.வி.

மணிவிழா கண்டார் அவர்..
மாண்புடன் பணி செய்து
மாணவம் வாழ
அனுதினமும்
கணங்களை செப்பனிட்ட சேவகன்
மணிவிழா கண்டார்...!

கல்வியால் இருளகற்ற சொப்பனங்கள் சுமந்து
நகரம் தாண்டி கிராமங்கள் தோறும்
அர்ப்பண பணி செய்த அறிவு புரவலர்
மணி விழா கண்டார்..!

பதவி கிடைப்பதற்காய்
படிப்பதென்று பாதி பேர் நினைப்பதுண்டு(!)
பதவி கிடைத்த பின்பு படிப்பெதற்கென
மீதிப் பேர் வாழ்வதுண்டு..
பதவி பல பெற்றவரே படிப்பை தொடர்ந்தது
ஏன் எதற்கு?

உபாத்தியாயன் மாணவனாய்
இருந்திடவே
சொல்லும் செயலும் அவரிடத்து..
பதவி உடையோரே
பாதை நமக்கிருக்கு...!
அறிவு சாகரத்தில் முத்தெடுக்க
மேற்கல்விதனை கற்றார்
மணிவிழா கண்டார்..!

பழகும் உறவுக்குள் எத்தனை காலமானாலும்
நினைவின் நிலையான இருப்பு..
யார் இவர் முன்னால்
ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாதவராயினும் சுக விசாரிப்பு..
பலரை அவர் அறியார்
அவரை பலர் அறிவார்!

தேடல் உலகிது வயதெல்லை ஏது
அறிவின் விரிவு அனைவருக்கும் வேண்டுமென
பலருக்கு உரம் போட்டவர் இவர்..

பட்டென பேசினாலும் பாசத்தை பகிர்ந்திடுவார்..
வெடுக்கென நடையில் எறும்பென சுறுசுறுப்பு..

வரலாறு கற்றாலும் பல்துறை ஆசானாய்
அணி செய்தார் ! ஆரவாரமின்றி
கலை பாசறையில்
"அணிகளுக்கு" ஆரமானார்..!

அவருக்குள் ஓர் எழுத்தாளன் வாழ்கிறான்!
கற்பித்தலில் புது நுட்பம் கணிசமாய் மலிந்துண்டு!
பல்லின மக்களுடன் உறவுகளாய் பழகும்
உறவே அவர்..
வளவாளராய் வளம் வந்து
வகி பாகம் முறையென செய்த வாண்மையாளன்..!

கண்டார் பழகினார் சொல்வது அவர் பற்றி
துணிவில் சுடர் பகலவன்..
பணிவின் பகர் மொழியாளன்..
எளிமைக்கு இலக்கணமாய்
எப்பொழுதும் இருப்பவராம்..
தானென்ற அகங்காரம் துளியேனும் இல்லை..
கூட இருப்பவருடன் சகஜமாய் பழகி
அறியாதவராயினும் ஆலோசனை பல கூறுவார்..
நன்மக்கள் வரிசையில்
"அருணாகரன்" ஐயா ஒருவரானார்
அவர் தம் வாழ்க்கை முறையில்
வழிகாட்டல் பலர் கண்டார்!

குருவாய் இருக்கையிலும் உயர் அதிகாரம்
உடைத்தவராய் பதவி வகிக்கையிலும்
ஒரே முகத்துடையவர்... பணி செய்த பெருமகன்
மணி விழா கண்டார்!

வாழ்க பல்லாண்டு
பண்பாளரே
வளம் நலம் பெற்று
வாழ்க...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா காணும் கதாநாயகனுக்கு...

G. P. Rosilda vaas
ஆசிரியர்:
P/kal- Navatkadu R. C. T. Vid

துறைநீலாவனையை பிறப்பிடமாகக் கொண்டு
ஆரம்பக் கல்வி தனை துறை நீலாவனை பாடசாலை
மடியினில் தவழ விட்ட எம் ஆசானே,
நீ, கடந்து வந்த பாதையில் ஆசிரியராய்,ஆசிரியர் ஆலோசகராய்,
பாட இணைப்பாளராய், பகுதிநேர விரிவுரையாளராய், திறந்த பல்கலைக்கழகத்தின்
பகுதி நேர விரிவுரையாளராய் இத்தனை வகிபாகங்களை வகிக்கும் எம் கதாநாயகனுக்கு
வண்ணக் கவிதை புனைவதில் யான் பெருமையடைகிறேன்.
காலச் சக்கரத்தின் மிக வேகமான ஓட்டத்தில்
கடந்து வந்துவிட்டது. உன் அறுபதாவது அகவை
இவ் ஓட்டப்பந்தயத்தில் உண்மை கைகளில் பொறித்து பக்குவமாய் பராமரித்து
பாதுகாத்த பரமனுக்கு சிரம் பணிகின்றேன்.
சிரித்த முகமாய் என்றும் நீர் கதைக்கும் அழகோ
தனியழகு மகள்... மகள்.. என்ற இனிமை மிகு பேச்சினிலே உண்மையாகவே மகளாகி
விடுகிறேன் தந்தையே!
அன்பு ததும்பும் மாணவர் நலனில்
அக்கறை ஓங்கும் மாசிலா உள்ளம் வதனத்தில் தெரியும்.
பள்ளிக்கூட சமூகத்தோடு பக்குவமாக உறவினைப் பேணும்
பேருளம் படைத்த குணவாளனுக்கு பெருமையோடு பாமாலை சூட்டுகிறேன்.
உண்மையாய் உழைத்து,ஊடல் தவிர்த்து
எளிமை கொண்டு ஏணியாய் நின்ற
சிந்தை மிகு நல் முன்னோடி நீர்.
நீர் இதுவரை செதுக்கிய சிற்பங்கள்
தான் எத்தனை? எத்தனை?
உம்மால் பட்டை தீட்டப்பட்ட
வைர மணிகள் தான் எத்தனை?
உங்களைப் போல ஓர் உறவு
இனியும் வருமோ தெரியாது
மனதும் கவலை கொள்கிறது
கண்ணும் கலங்கி நிற்கிறது.
நீர் வாழ வரம் வேண்டுகிறேன்
என்னை படைத்த இறைவனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரியமான ஆசானே!

உங்கள் மாணவி
S. இஸ்ஸதுல் அஸ்மியா
Teacher Elavankulam mmv, Puttalam.

கல்விக்கோ கரையில்லை.
கண்டு கொண்டேன் உம்மிடம் தான்.
ஆசானாய் தோள் கொடுத்து தோழனாய்,

ஆலோசகராய் நல் வழிகாட்டியாய் திகழ்ந்தீரே!
அறி வொளியின் பிறப்பிடமே
அறியாமை போக்கும் அரும் தொண்டு நீர் செய்தீர்.

எத்தனையோ உயரிடங்கள் பெற்றாலும்,
உம்பணிவுக்கு அவை அழகே.

பணியினிலே ஓய்ந்தாலும்
ஓயாது உம் வதனம்.
பணி ஓய்வு என்பது பொருந்தற்ற சொல்லே
ஆசானுக்கு என்றும் ஓய்வே இல்லை.
மாணவியாய் தோழியாய் பல வடிவம் என்னில் கண்டீர்.

உண்மையிலே உரைக்கின்றேன்.
கடுகளவும் மாறாத அன்பான குணம் உமதே.

பாசத்தின் பாவலரே.
பண்பான நாவலரே
பல்கலையின் பொக்கிஷமே.

எப்பதவி பெற்றாலும்
செயல் வீரம் உம் திறமை.
உன் சேவை வாழ்த்திடவே நாழிகையும் போதாதே
நீடூழி வாழ்க வாழ்க வாழ்கவென்று வாழ இறைவனை நான் வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளியூட்டிய ஆசானுக்கு வாழ்த்துக்கள்

P.M.F.SHAFNA
(கிராம அதிகாரி) மாணவர் தலைவர்,
திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம், புத்தளம்.

மாணவர்கள் வாழ்க்கையில் ஆசிரியர்கள் மிக முக்கியமான இடத்தை பிடிக்கின்றனர். அந்த வகையில், திறந்த பல்கலைக்கழக கல்விமாணி கற்கை நெறியின் வருகை தரும் விரிவுரையாளரான எமது ஆசான் திரு .வெ. அருணாகரன் மிகவும் முக்கிய நபராக திகழ்கின்றார். இவர் அவரின் அறிவையும் அனுபவத்தையும் கொண்டு ஒவ்வொரு மாணவரின் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தி மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சிறந்த ஆசானாக அனைவரின் உள்ளத்திலும் வாழ்ந்து வருகின்றார்.

மேலும் இவர் ஒவ்வொரு மாணவர்கள் பற்றியும் உளவியல் ரீதியான முறையில் கவனம் செலுத்தி உள்ளத்திற்கு ஊக்கத்தை வழங்குவதோடு அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஊக்கமளிக்கும் ஒரு தன்னிறைவு பெற்ற நபராக திகழ்கின்றார். எப்போதும் மாணவர்களின் எதிர்கால இலக்குகளை நோக்கி பயணிக்க ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றார்.

திறந்த பல்கலைக்கழக கல்விமாணிக் கற்கை மாணவர் என்ற வகையில் அவரை தனிப்பட்ட ரீதியில் கூற முற்பட்டால் மாணவர்களின் கல்வியை மட்டுமல்ல அவர்களின் செல்நெறி முறைகளையும் மனித நேயத்தையும் சமூகப் பொறுப்பையும் கற்பிக்கும் சிறப்பான நபராவார். அத்தோடு சவால்களை எதிர்கொள்ளவும் தயார் படுத்தும் ஒரு திறமை வாய்ந்த ஆசானாக காட்சியளிக்கின்றார். அது மட்டுமல்லாமல் மாணவர்களின் உள் உணர்வுகளின் வலிமை, கடின உழைப்பு மற்றும் மன ஒற்றுமை ஆகியவற்றில் அவசியத்தை கற்றுத் தந்தவர்.

இவ்வாறு ஒவ்வொரு மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியேற்றி வைத்த என் அன்புக்குரிய ஆசானே! உங்களின் வெற்றிக்கு முதலில் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். வாழ்க்கையில் வெற்றி நோக்கி பயணிக்க உங்களுக்கு அனைத்து நலங்களும் கிட்டும் நீங்கள் தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்பவர் மட்டுமல்லாமல், உழைப்பின் மகிமையையும் அறிந்து பயணிக்கும் ஒருவர்.

நீங்கள் எப்போதும் உங்கள் நற்சேவையை தொடர்ந்து செய்யவும் சவால்களை சமாளிக்கவும் உங்கள் பெற்றோர்கள், குடும்பம், சக ஆசிரியர்கள், நண்பர்கள்,உங்கள் அன்பிற்குரிய மாணவர்கள் மற்றும் சமூகத்தினரோடும் அவர்கள் அனைவரின் ஆதரவோடு, உங்களுக்கு மிகுந்த உயர்வும் மகிழ்ச்சியும் கிடைக்க வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

தங்களின் ஒவ்வொரு செயலும் வெற்றிகரமானதாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருணாகரனின் ஆரம்ப வரலாறும் சேவையும்

தங்கை திருமதி கலைச்செல்வி இராசகுமார் ( ஆசிரியை)
மட்/பட்/பெரியகல்லாறு மத்திய கல்லூரி

மீன்பாடும் தேனாட்டின் மட்டுமா நகரின் தெற்கே அமைந்துள்ள சைவமும், செந்தமிழும், சீர்மரவும் கொண்ட கற்றோரும், மற்றும் மேழிபிடித்து வாழ்வோரும் வாழும் மட்டக்களப்பு வாவியும் செந்நெல் விளையும் வயல்நிலமும் அழகாகக் காட்சி தரும் துறைநீலாவணையில் இல்லறமே நல்லறமாய் கொண்ட "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த" வெள்ளக்குட்டி இலட்சுமி தம்பதியினரின் இனிய நன்மகனாய் **1964.10.12** அன்று அவதரித்தார். உரிய பருவத்தில் ஒழுக்கநெறியின் வழிநின்று இனிய நன்மகனாகவும் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி "வையத்துள் இவன் தந்தை எண்ணுற்றான் கொல்" எனும் தமிழ்மறையின் வழியில் நின்று "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்த கோயிலும் இல்லை" எனும் அமிர்த வார்த்தையின் வழிநின்று உரிய பருவத்தில் கல்வியைத் தொடங்கினார்.

அந்தவகையில் இவர் தனது ஆரம்பகல்வியை தனது வீட்டிற்கு அருகாமையிலுள்ள துறைநீலாவணை மெ.த.க பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்று உயர்தரம் கற்பதற்காக அயல் கிராமமான மருதமுனை அல்மனார் மத்தியகல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்.

மேலும் இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொண்டிருந்த இறுதியாண்டில் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்று **1986**ம்ஆண்டு ஆசிரியராக புத்தளம் மாவட்டத்திலுள்ள கரைத்தீவு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் இவரது நண்பனான கைலாயமூர்த்தியுடன் ஆசிரியராக இணைந்து செயற்படத் தொடங்கினார். ஆசிரியருக்குரிய உதாரண புருஷராக "அன்னை யாவினும் புண்ணியம் கோடி" ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதுடன் தான் பெற்ற கல்விச் செல்வம் வையகம் பெறுக" என கடமையினைச் செய்து மாணவர்களின் உயர்ச்சிக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் தோளோடு தோள் கொடுத்து நின்றார்.

இவரின் கடமையுணர்வினையும் சேவையின் திறமையையும் கண்டு ஆசிரியர்களும் மாணவர்குழாமும், ஊர் மக்களும் தெய்வமாகப் போற்றி நின்ற ஓர் கௌரவமான ஆசான் ஆவார். இவர் ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் தனது உத்தம குணத்துடனும் ஒழுக்கநெறியுடனும் பழகி நின்றிடும் குரு ஆவார். மாணவர்களுக்கு தடி கொண்டு அலட்டாது தன் புன்சிரிப்பால் ஆலோசனை வழிகாட்டியாக நின்று தெய்வீக ஆசானாய் விளங்கினார். அவ்வூர் மக்களுடன் அன்பாகப் பழகினார். அதன் பிரகாரம் இன்றும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கிராமத்தில் ஒருசில நட்பு தொடர்ந்தவண்ணம் இருப்பதைக் காணக்கூடியதாக வுள்ளது. பாடசாலையின் அபிவிருத்தியிலும் ,கடமைநேரத்திலும், மேலதிக நேரங்களிலும் பாடசாலைக் கடமையினை கண் எனக் கொண்டு சேவையாற்றி வந்தார். அந்தக் காலகட்டத்தில் தன்னுடன் சேவையாற்றிக் கொண்டிருந்த அன்சிலா( மஞ்சுளா) என்னும் ஆசிரியையை திருமணம் செய்து கொண்டார். சில வருடங்கள் இப்பாடசாலையில் சேவையாற்றிய பின்னர் இவரும் இவர் மனைவியும் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று சென்று அங்கும் தமது கல்விப்பணியை மேற்கொண்டு வந்தனர்.

ஆசிரியர் பணியில் இருக்கும்வேளையில் வலயக்கல்வி அலுவலகத்தில் ஆசிரியர் ஆலோசகர் பணியினை தொடர்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றது. இவர் திறமையுடனும் நேர்மையுடனும் தனது கடமையைச் செய்து மேலதிகாரிகளினதும் பாராட்டுக்களைப் பெற்று சிறந்து விளங்கிய செம்மல் வற்றாத ஜீவநதியாக விளங்கினார் என்பதில் ஐயமில்லை.

மேலும் இவரின் குடும்பப் பின்னணியை நோக்கும்போது இவர் எங்கள் மீது மிகுந்த அன்பு கொண்ட சகோதரன் ஆவார். இவர் தாயைப் பார்ப்பதற்கு தாய்வீடு வந்து எனக்கு உதவி ஒத்தாசைகளை வழங்குவார். தனது தாயாருக்கு உணவு ஊட்டி பழங்கள் வெட்டிக் கொடுத்து உண்ணவைத்து மகிழ்வார். இவரது தந்தை ஒரு விவசாயி இவரது ஏனைய சகோதரர்கள் அதிபராகவும், ஆசிரியர்களாகவும் ,பிரதம எழுதுவினைஞராகவும் மைத்துனர் மைத்துனிகள் ஆசிரியர்களாகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவரது குடும்பம் கல்விப் புலத்திற்கே உரித்தான குடும்பமாகத் திகழ்கிறது என்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பா என் வாழ்வின் அடித்தளம்

Miss. A.Aadharsha Muri,
Senior Associate Branch Operations, North & East,
HNB Assurance PLC, Jaffna

குழந்தைகளின் வாழ்வில் அம்மா அப்பாவே முதல் உலகம். அவர்கள் மனதில் பிள்ளைகள் எப்போதும் குழந்தைகளாகவே வாழ்கின்றனர். எனது வாழ்விலும் அன்புக்கு அம்மா அன்சிலா மியூரியலும் அறிவுக்கு அப்பா அருணாகரனும் அவர்களின் ஆசை மகளும் ஏக புதல்வியுமான ஆதர்ஷா மியூரியாகி நான் எனது அம்மாவைப் பற்றி ஆயிரம் விடயங்கள்எழுத முடியுமானாலும் அப்பாவைப் பற்றிய சில பகிர்வுளை முன்வைப்பதற்கு கிடைத்த இந்த வாய்ப்பினை நினைத்து மகிழ்ச்சி அடைகின்றேன். என் வாழ்வில் அப்பா என்பது ஒரு முக்கியமான அங்கமாக இருக்கிறார். அப்பா என்றால் நான் நினைக்கும் முதல் விஷயம், அவர் எனக்கு அளித்த அன்பும், பாதுகாப்பும் தான். அப்பா என் வாழ்க்கையின் அடித்தளமாக இருக்கிறார். அவர் எனக்கு கற்றுக்கொடுத்தவை, எனது வளர்ச்சியில் மிக முக்கியமானவையாக உள்ளது.

என்னைச் சிறப்பானவளாக வளர்த்தெடுக்க நீங்கள் விருப்பம் கொண்டிருப்பீர்கள். அதன்படியே என்னையும் வளர்த்திருக்கின்றீர்கள். நான் அவ்வாறே வளர்ந்தேனா? என்பதனை நினைக்க கொஞ்சம் வருத்தம் எனக்குள் தொக்கி நிற்கின்றது அப்பா! நீங்கள் பெருமிதம் கொள்கின்றபடி ஏதாவது நிகழ்த்தவேண்டும் என்கின்ற ஆவல் மட்டும் பல ஆண்டுகளாக என் மனதிற்குள் கொதித்து எழுந்து அடங்கவே மறுக்கின்றது ஆனால் மேலும் திமிறுகிறது.

என் அப்பா ஒரு சாதாரண மனிதர். அவரின் வாழ்க்கை ஒரு கதை போலவே இருக்கிறது. அவர் தனது சிறுவயதில் பல சவால்களை எதிர்கொண்டார். ஆனால், அவர் எப்போதும் வலிமை காட்டினார். அவரது கதை என்னை தொடர்ந்து ஊக்குவிக்கின்றது. அவர் எப்போது ஒரு சிக்கலில் இருந்தாலும், அதை எப்படி சமாளிக்க வேண்டும் என்பதற்கான பாடங்களை எனக்கு கற்றுக்கொடுத்தார். அவர் தனது வாழ்க்கையில் நடந்த சவால்களை எப்போதும் பாடமாக எடுத்துக் கொண்டார். இது என் மனதில் ஒரு முக்கியமான பாடமாக உள்ளது. வாழ்வில் இதனை சிந்திக்க முடியுமானால் இப் பாடம் எனக்கு எளிதாக இருக்கும் என நினைக்கின்றேன்.

என் அப்பாவின் மேல் எனக்கு பயம் கிடையாது. மற்றவர்களை விட மரியாதை உங்கள் மேல் எனக்கு அதிகம். நான் உங்களிடம் அதிகம் பேசாமல் இருந்தாலும், உங்கள் அறிவுரைகளை நீங்கள் தந்துகொண்டேதான் இருக்கின்றீர்கள். அதை நான் ஒருபோதும் மறந்ததேயில்லை. ஆனால் செயல்படுத்த முடியாமல் பலவேளைகளில் திணறியிருக்கின்றேன். நீங்கள்தான் என்னை அதிலிருந்து காப்பாற்ற வேண்டும். உங்கள் வளர்ப்புமுறைகுறித்து பலரும் என்னிடம் கேட்டுள்ளனர். காரணம் எனது அணுகுமுறையாக இருக்கலாம். எனது நடத்தையாக இருக்கலாம். எப்போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு கண்டிப்பு தேவைப்பட்டதோ, அப்போதெல்லாம் வழங்கினீர்கள். எனது திறமையின் எல்லைவரை மட்டுமே உங்கள் கண்டிப்பு சென்றது. வீணாக உங்கள் விருப்பங்களை என் மேல் திணித்ததே இல்லை. எனவே நீங்கள் உன்னதமானவர். என் மேல் நானே கொள்ளாத நம்பிக்கையை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள் என்றால் அது மிகையாகாது.

அவர் எப்போதும் எனக்கு கூறுவார், "முயற்சி என்பது வெற்றியின் அடிப்படை." இந்த வார்த்தைகள் என் மனதில் பதிந்துள்ளன. அவர் கற்றுத்தந்த கல்வி, வாழ்க்கை இலக்கு, உழைப்பின் முக்கியத்துவம், நேர்மையுடன் வாழ்வது போன்றவை என் வாழ்க்கையின் அடிப்படைகள் ஆகிவிட்டன.

என்னை எப்படி வடிவமைக்க வேண்டும் என நானே சிந்திக்க நீங்கள்தான் காரணமாய் இருந்துள்ளீர்கள். உங்களை உங்கள் பெற்றோர்கள் (என் பாட்டன், பாட்டி) எப்படி வளர்த்தார்கள் என்பதை நீங்கள் கூறவும், உங்களைவிட வயதில் மூத்தவர்கள் பலரும் கூறக் கேட்டிருக்கின்றேன். உங்கள் வளர்ப்புமுறைகள் என்னை ஆச்சர்யப்படுத்து கின்றன. நீங்கள் எந்த தொழில் செய்திருந்தாலும், உங்கள் தொழிலில் உண்மை தன்மையை எப்போதும் காண்பேன். அது போல் என்னையும் வளர்த்ததனால் அருணாகரனின் மகள் என்று கூறுவதில் பெருமை அடைகின்றேன்.

அப்பாவின் அன்பு அளவில்லாமலே உள்ளது. அவர் எப்போதும் என்னை ஊக்குவித்துக் கொண்டே இருப்பதால் நான் எந்த விடயத்திலும் தோல்வி அடைந்தாலும் அவர் என்னை ஊக்கப்படுத்துகின்றார். "ஒரு தோல்வி என்பது கற்றல்" என்று அவர் எப்போதும் கூறுவார். இதனால்தான் நான் எப்போதும் வெற்றிக்காக முயற்சிக்கின்றேன். அவர் எனக்கு கற்றுக்கொடுத்தது, வெற்றி அடைய உழைப்பது மட்டுமல்ல, தோல்வியால் பயப்படாமல் மீண்டும் முயற்சிக்க வேண்டும் என்பதாகும். இது தான் என் வாழ்க்கையின் மிக முக்கியமான பாடமாக இருக்கின்றது.

நான் எப்படியான புத்தகங்கள் வாசிக்க வேண்டும் என தீர்மானித்து சிறந்த வாசிப்பு அனுபவங்களைத் தந்தீர்கள். எப்போதும் அதை நான் மறக்கவே மாட்டேன். ஒரு நாளிதழின் எந்த செய்தியை ஆழமாகப் படிக்க வேண்டும்? எதை கவனிக்க வேண்டும்? எதை ஒதுக்க வேண்டும்? செய்திகளின் உள் அர்த்தம் என்ன? எதுதான் நடுநிலைத்தன்மை? எப்படி ஒருசெய்தியைப் புரிந்து கொள்ள வேண்டும்? ஒரு வார இதழை எப்படி படிக்க வேண்டும்? எதை நினைவில் கொள்ளவேண்டும்? எதை தூர விலக்க வேண்டும்? வியாபார உத்திகள், சமகால அரசியல், வாழ்வியல், சமூகம் ......ம்ம்ம்ம் இன்னும் இன்னும் எவ்வளவோ...?? சொல்லிக் கொடுத்திருக்கின்றீர்கள். சாதாரணமாக எந்த பிள்ளைக்கும் ஒரு தந்தை இப்படியெல்லாம் சொல்லமாட்டார் என நினைக்கின்றேன். இதை எளிதாக சில ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்தேன். சிலருக்கெல்லாம் ஏன் நாளிதழ்களைப் படிக்க வேண்டுமென்றே தெரியவில்லை. சிலரோ தேவையற்ற செய்திகளில் நாட்டம் கொண்டு நேரம் களித்ததைக் கண்டிருக்கின்றேன். நீங்கள் யாருக்கும் வாய்க்காத ஒரு ஆசிரியர் அப்பா!உங்கள் அடிப்படை விடயங்கள் யாவும் என்னை பத்தாம் வகுப்பு படிக்கின்ற வரையில் நெருங்கவே இல்லை. என் சுதந்திரத்திற்காக எல்லைகளை என் வயது கூட அதிகரித்துக்கொண்டே போக இடமளித்தீர்கள். அதேஅளவு என் வயது கூடக் கூட உங்கள் மீதான எனது விருப்பமும் அதிகரித்துக் கொண்டேதான் இருந்தது.

என் கல்வியில் அப்பாவின் பங்கு மிக முக்கியமானது. நான் பாடசலையில் செல்லும் போது, அவர் எப்போதும் என்னை ஊக்கப்படுத்துவார். பாடங்களை விலங்கிக் கொள்ள எனக்கு கற்பித்தார். நான் படிக்காமல் இருந்தால், என்னை ஊக்குவிக்க பல வழிகளை கையாள்வார். அவர் எப்போதும் என்னிடம் கூறுவார், "கல்வி என்பது ஒருபோதும் முடிவடையாது." இந்த வார்த்தைகள் எனக்கு மிக முக்கியமானவை. அதனால் தற்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றேன். கல்வி என்பது வாழ்க்கையின் அடிப்படையாகும், இது நம்மை வளர்க்கின்றது அத்தோடு நம் கனவுகளை நிறைவேற்ற உதவுகின்றது.

என் வாழ்க்கையில் மறக்க முடியாத சில நிகழ்வுகளில் நீச்சல் கற்றுத்தர என்னை ஆற்றுக்கு அழைத்து சென்று, நட்டாற்றில் தள்ளி விட்டு பழக்கிய போது நான் பதறியழுது கத்திய பின் தோளில் தூக்கி கரைக்கு ஏற்றியதும், மிதிவண்டி ஓடுவதற்கு கற்றுத்தந்ததும் என் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் தான்.

நான் என் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கின்றபோது உங்கள் போல் பிரதிபலிப்பு இல்லாவிட்டாலும் உங்ளைப் போல கல்வி பெற முயற்சிக்கின்றேன் என்றும், அதன் பின் என் செய்கைகள் உங்களைப் போல் பிரதிப்பலிக்கும். இவைகளைப் பார்த்து பிறர் கூறுகையில் வியப்பைத் தவிர எனக்கு வேறேதும் தோன்றாது.

பெற்றோர்களால் இன்று சிறப்பாக இருக்கின்றாய் எனக் கூறுகின்றவர்களைக் கண்டிருக்கின்றேன், கேட்டிருக்கின்றேன் அதனையறிந்து ஆச்சரியப்பட்டு உள்ளேன். அப்பா நீங்கள் எத்தனை எத்தனை அனுபவங்களைக் கொண்டிருக்கின்றீர்கள் எனக்கெல்லாம் அப்படி அமையுமா? என காத்துக் கொண்டிருக்கின்றேன்.

நீங்கள் என்னோடு பேசுகின்ற பொழுது பல வாய்த் தர்க்கங்கள் ஏற்படும். இரண்டு பேரும் சண்டையிட்டு கொள்ளும் போது அம்மாவும் இணைந்து கொள்வார். அவ்வேளையில் சில அனுபவ அறிவுரைகளையும் பெற்றுக் கொள்வேன். அப் பேச்சுக்களின் போது பல அனுபவ அறிவுரைகளை அறிந்து கொள்வேன்.

என் ஆவலெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நான் உங்களை விட அதிக புகழ் பெற வேண்டுமென்று உங்கள் விருப்பம் இருக்கும். அது இயற்கைதான். ஆனால் எனக்கோ உங்கள் அளவாவது அனுபவங்களும், நண்பர்களும், புகழும் கிடைக்க வேண்டும் என்பதற்காக அயராது உழைக்கினறேன்

நம் உறவினர்கள் எல்லோரையும் கணக்கில் எடுத்தால் நீங்கள் மட்டும் தனித்து தெரிவீர்கள்! உங்கள் கொள்கைகள் மீது மற்றவர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும், உங்கள் மேல் யாரும் குறை சொன்னதாக அறியவில்லை. ஏனெனில் உங்கள் குணத்தாலும் செயலாலும் அந்த பெயரை ஈட்டியிருந்தீர்கள். நான் உங்கள் அளவிற்கு கடவுள் விவாதிப்பு கொள்ளவில்லை என்றாலும் மூட நம்பிக்கைகளை வெறுக்கின்ற அளவில் நானும் உங்கள் பாதையில் செல்கின்றேன். பணத்தை விட குணத்தில் சிறந்த மனித மனங்கள்தான் வாழ்க்கைக்குத் தேவை என புரியவைத்திருக்கின்றீர்கள். எனக்கு கிடைத்த அப்பா எனக்கு ஒரு நண்பனாக இருக்கின்றார் என எண்ணி மகிழ்கின்றேன். என் எண்ணங்களை, கனவுகளை மற்றும் சிந்தனைகளை அவர் எப்போதும் புரிந்துகொள்கின்றார். இது என்னை மேலும் உற்சாகப்படுத்துகின்றது.

என் அப்பா குடும்பத்தின் அடிப்படையாக இருக்கின்றார். அவர் எப்போதும் குடும்பத்தை தாங்கிப் பிடிப்பவர் போல் அல்லது அக்கறை உள்ளவர் போல் காட்டி கொள்வதில்லை. அது அம்மா அப்பாவிடம் பிரச்சினையை தோற்றுவிக்கும். அப்பா குடும்பம் தொடர்பில் அக்கறை இல்லையோ என அலசந்தர்ப்பங்களில் நான் நினைத்ததுண்டு. ஆனால் நீங்கள் குடும்பத்தில் கொண்டுள்ள ஆழமான அன்பையும் அக்கறையும் குடும்பத்தினரை சந்தித்து கதைக்கும் போது தெரிந்து கொள்வேன். குடும்பத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டால் அதனை தீர்த்துக் கொள்ள முயற்சிப்பார். அவரது அன்பு மற்றும் ஆதரவு இல்லாமல், எங்கள் குடும்பம் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அவர் எப்போதும் எங்களை ஒன்றிணைக்கின்றார். சந்தோஷங்களை பகிர்ந்து கொள்ள வலியுறுத்துகின்றார். ஆனால் அவரிடம் கண்டுகொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ தொலைபேசியில் அம்மாவிடம் மட்டும்
ஆசைதீர பேசுவேன்..
உங்களிடம் பேசுவது குறைவு.
உங்களை விசாரித்ததும் குறைவு.
இது தொடர்பில் உங்கள் மனதிலுள்ள கவலைகள்
புரியாமலில்லை எனக்கு......

இதிலுள்ளவையெல்லாம் சொற்பம்தான். எழுத நினைத்தவை இன்னும் அதிகம். நான் அதிகம் உங்களுக்கு எழுதுவதைவிட, உங்களிடம் பேசுவதற்கே விரும்புகின்றேன். அதைத்தான் நீங்களும் விரும்புவீர்கள் என எனக்கும் தெரியும். உங்களோடு மனம்விட்டு, உள்ளத்தில் எழுகிற சொற்களையெல்லாம் வெளித்தள்ளிப் பேசுகிற அந்த நாள் எந்நாளோ? தெரியவில்லை. ஆனாலும் நாம் இருவரும் பேசித்தான் ஆகணும்! அப்பா என்னுடன் பேசும்போது, நான் எப்போதும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றேன். அவர் என்னை எப்போதும் ஊக்கப்படுத்துகின்றார். எனது கனவுகளை நனவாக மாற்ற உதவுகின்றார்.

என் அப்பா எனது வாழ்க்கையின் அடிப்படையாக இருக்கின்றார். அவர் எனக்கு அன்பும், ஆதரவும் அளிக்கின்றார். அவர் எனக்கு கற்றுக்கொடுத்த பாடங்கள், என் வாழ்க்கையின் முக்கியமான பகுதிகள். அப்பா என்றால், நான் நினைக்கும் முதல் விஷயம், அன்பு, பாதுகாப்பு, மற்றும் உற்சாகம்.

என் அப்பாவை நான் எப்போதும் மதிக்கின்றேன், அவருக்கு என் வாழ்வில் உள்ள முக்கியத்துவத்தை உணர்கின்றேன். எனது பெற்றோருடன் வாழும் காலம் எனது வசந்த காலம் என உணர்கின்றேன்.

எனது அப்பாவின் சேவையை கௌரவித்து பாராட்டு நிகழ்வு நடாத்த பங்காளிகளாக இணைந்து கொண்ட மதிப்பிற்குரிய ஆசான்கள் கல்வியாளர்களை பெரிதும் மதிக்கின்றேன்.

அன்புடன்
மகள்
அ. ஆதர்ஷா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டி

ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் திருமதி.M.B.M.பேகம்
ஆசிரியர்கள் திருமதி.J.M.ராஜிதிருமதி.S.I.கன்சிலா
பு/அல் அக்ஸா தேசிய பாடசாலை,கல்பிட்டி.

கிழக்கில் உதிக்கும் சூரியன்
கீழ் வானில் தெளிந்து ஒளி தர!
கிழக்கில் உதித்து வந்த நீரோ!
வடமேல் மாகாணத்திற்கு ஒளியாக வந்தீர்!

முதல் நியமனமோ கரைத்தீவு முஸ்லிம் வித்தியாலயம்
முன்னின்று உழைத்ததோ கரை காண எண்ணி,
முகமலர்வு என்பது உந்தன் இயல்பு
முகத்திற்கு நேர் சொல்லும் அன்பின் உயர்வு

கருத்தரங்கு என்றால் கதைக்க விட மாட்டீர்
கதைக்க இடம் தரும் போது நாம் கதைக்க மாட்டோம்
கற்பித்தலில் எம்மை அரவணைக்கும் விதம்
கற்க வேண்டும் உம்மிடம் மனம் சொல்லும் நிதம்

மாற்றம் காட்டாது உங்கள் மனம்
முன்னேறச் சொல்லும் பேசும் விதம்
திறமைகளை இனங்கண்டு வெளிப் படுத்த படும் பாடு
திண்ணமாக சவாலில் வெல்வீர் சிறப்போடு

பாதகமான சூழ்நிலைகள் உம்மை சூழ்ந்த போதும்
சாதகமான ஒரு நிலையைக் கொணருவீர் எப்போதும்
ஊக்கமது கைவிடேல் உங்களுக்குப் பொருந்தும்
ஏக்கத்துடன் விடை தருதல் எங்களுக்கு பொருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப்பிரிவின் ஆனந்த வாழ்த்து

ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள்
பு/கல் /தேத்தாப்பளை /றோ. க. த. வி. தேத்ததாப்பளை மாம்புரி.

வாழ்த்து கூறுவதற்கு வயது தேவையில்லை வாழ்த்தும் மனமிருந்தால் வான் தூரம் வாழ்தலாம். பணி நிறைவு வாழ்த்துச்சொல்ல பரிதவிக்கிறது எங்கள் மனம். ஆரம்பகல்வி ஆட்டம் கண்ட வேளை ஜொலிக்கும் வைரங்களாக்கியது உமது சேவை.ஆசிரியர் பணி அறப்பணிமட்டுமல்ல ஆத்மார்த்தமான பணியென புரிய வைத்த ஐயா. நேர்மை, விடா முயற்சி, தொழில்பற்று கொண்டு பணியாற்றி ஓய்வு பெரும் தலைவா. அன்பின் அதிகாரியாய் ஆசையில்லா மனிதராய் ஈரமான இதயமாய் உண்மைக்கு உறைவிடமாய் ஊக்கமுடன் உழைப்பவராய் எங்களுக்கு ஏற்றவராய் ஏழைகளுக்கு உதவுபவராய் ஐயம் தீர்க்கும் ஆலோசகராய் ஒழுக்கத்திற்கு உத்தமராய் ஓடி ஓடி பணியாற்றும் பணியாளராய் ஒளடத்தம் அருந்தா அன்பாராய் ஏன்றும் ஏங்களோடு இருப்பவர் நீர் இன்று உமது ஓய்வு நாள் பிரிய முடியாது அழுகிறது உங்கள் ஆரம்பப்பிரிவு உறவுகள். பணி ஓய்வல்ல இது பணி நிறைவு எங்கள் மனங்கள் கனக்கிறது இந்த பிரிவை எண்ணி. ஓய்வு பெற்றாலும் நீங்கள் ஓய்வுக் காலத்தில் எம் ஆரம்பபிரிவில் ஆணிவேராய் இருப்பீர் என நம்பிக்கையில் பிரிகின்றோம்.

இறைவன் வளமும் நலமும் தந்து தங்கள் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்!

ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்ப பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்
ஆண்டிமுனை, உடப்பு .

அன்புடையீர்,

"மட்டு நகர் அழகான ஊரம்மா அந்த ஊரினிலே கலைச்செல்வம் நூறம்மா" என்ற மூத்தோர் வாக்கிற்கிணங்க மட்டக்களப்பில் மங்காத மாணிக்கமாக ஊற்றெடுத்து ,யாழ்நகரில் மாலை இட்டு புத்தளத்தில் ஆட்சிபுரிந்து, உடப்பு ஸ்ரீ கிருஷ்ணாவுக்கு அறிவுரைகள் கூற வந்த அறிவாளரே........

உங்களது தோற்றமோ மானி நிறம் கொண்டு வாலிப உடலைக் கொண்டு வெண்ணிற பல்வரிசை காட்டி சிரித்த முகத்துடன் எமது பள்ளி காண பறந்து வரும் பண்பாளரே! கறுப்பு நிற ஈருருளியில் காலையிலே வந்திடும் கலைமாணி ஐயா ! நீர் ஓய்வு நிலை அடையும் வயதென்று எண்ணிபார்க்க முடியவில்லை.

சேவை நிலைதனை பார்க்கும் போது தமிழ் பேசும் பள்ளிக்கெல்லாம் சரளமாக தமிழ் பேசி தமிழ் வளர்த்த தயாளன் ஐயா நீர் !அறுவது வயது வரை செய்த சேவை சொல்லுக்கு அடக்க முடியாத ஒன்றாக உள்ளது.எமது வித்தியாலயம் புதியது என புதிய புதிய உத்திகளை எங்கள் முன் கொண்டு வந்த உத்தமரையா!கொடிய வருத்தமான கொரோனா காலத்தில் கூட ஆண்டு விழா கொண்டாடி பாளை வந்த தென்னைக்கு சடங்கு செய்து காட்டியது எங்கள் மனதை விட்டு அகலவில்லை. ஆலமரம் போல வேறூண்டி உள்ளது ஐயா !

உமது பதவியோ ஆசிரியர் ஆலோசகர். ஆலோசனை வழங்குவதில் நீங்களும் சிறப்பானவர். கருத்தரங்கு சென்றுவந்தால் அடுத்த படியாக எங்கள் பள்ளி வந்து ஆலோசனைகளை அள்ளி கொடுக்கும் அறிவாளரையா! எமது பள்ளிக்கு வந்தால் ஆலமரத்தடியில் அனைவரையும் அழைத்து ஆலோசனைகளை கச்சிதமாக வழங்கும் கனிவான உள்ளம் கொண்டவரே !இடர்படும் மாணவருக்கு ஊக்குவிக்கும் உத்திகளைக் கூறும் உத்தமரையா!

உங்கள் ஓய்வு நிலை எங்கள் மனம் தடுமாறி நிற்கின்றது ஐயா! ஆனாலும் உம் ஆயுளை நீட்டி உன்னத சேவை வழங்க இறைவனை வணங்கி நிற்கிறோம் ஐயா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியும் ஆசிரியர்களும்

எஸ்.சுப்ரமணியம்
ஆசிரியர்
கல்/அல்-அக்ஸா தே.பா.ஈ கல்பிட்டி

எதிர்காலத் தலைவர்களை நிர்ணயிக்கும் காரணிகளில் ஆரம்பக் கல்வி தனித்துமிக்க முதன்மைந நிலை வகிக்கின்றது. "இளமையிற் கல்வி சிலை மேல் எழுத்து" என நம் முன்னோர் கூறியமைக்கேற்ப, கல்வி, உளவியல் சார் நிபுணர்கள் பிள்ளைப் பருவத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவம் ஆரம்பக் கல்விக்குரிய அடிப்படையாகும். பிள்ளையின் தனித்துவமிக்க ஆளுமைக் கூறுகள் வளப்படுவதும், விருத்தியடைவதும் ஆரம்பக் கல்வித்துறையின் தன்னிகரற்ற பங்களிப்பினலாகும். இப்பங்களிப்பானது தனி மனித உயர்வுக்கு மட்டுமன்றி, அவன் சார்ந்த சமூகத்தின் எழுச்சி, இருப்பு, மேம்பாடு என பல்வேறு அம்சங்களில் தாக்கம் செலுத்துகின்றன. சமூகங்களின் எழுச்சி சமுதாயத்தின் எழுச்சியாக அமைகின்ற போது நாடும் சகல துறைகளிலும் வளமடையும்.

தேசத்தின் தலைவர்களை நிர்ணயிக்கும் ஆரம்பக்கல்வி வகுப்பறைகளில் ஆசிரியர்களே பிரதான இடம் வகிக்கின்றனர். தேசியக் கல்விக் கொள்கைகள், பாடத் திட்டங்கள், பாடநூல்கள், ஆசிரியர் கைந்நூல்களுக்கு அப்பால் ஆரம்பக் கல்வி ஆசிரியரின் வகிபாகமே இறுதியில் முதன்மை பெறுகின்றது. ஏனெனில் மேற்குறித்த ஆவணங்களை பிஞ்சு மனங்களில் பதிவேற்றுவது என்பது அளப்பெரிய பணியாகும். இதற்காக ஆரம்பக் கல்வியின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கு ஆசிரியரின் உளப்பூர்வமான பங்களிப்புகள் அவசியமாகின்றன. மேலும், வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளானது உயிர்ப்புள்ளவையாக மாறுவதும் ஆசிரியரின் வகிபாகத்தினாலாகும்.

இத்தகைய பின்னணியில் ஆரம்பக் கல்வித்துறை ஆசிரியர்களின் சமகால பங்களிப்புகள் மற்றும் போக்கினை விமர்சன ரீதியாக விளங்கியிருப்பது கல்விச் சமூகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தாகும்.

சாதாரணமாக எமது வகுப்பறைகளில் நாம் கேட்கக்கூடிய சொல்லாடல்களாக விளங்கியதா, அவதானியுங்கள், கேளுங்கள், சத்தமிடாதீர்கள், பயிற்சிகளை எழுதுங்கள் போன்றவை பிரபலமானவை. இத்தகைய கட்டளைகள் அடிக்கடி வகுப்பறைகளில் ஏன் எழுகின்றன என்பது ஆய்வுக்குரிய விடயமல்ல. கவர்ச்சிகரமான கற்றல் கற்பித்தல்களை மேற்கொள்வதில் ஆரம்பக் கல்வித்துறை ஆசிரியர்களுக்கு சிறப்புத் தேர்ச்சி மட்டுமன்றி அர்ப்பணிப்பும் முக்கியமாகும். கற்றல் கற்பித்தலின் போது மாணவர்களின் கவனத்தி லிருந்து ஆசிரியர்கள் விலகிச் செல்வதாலும், மாணவர்களுக்கு புதிய தகவல்கள் இல்லாமை யாலும் வகுப்பறையில் மாணவர்கள் பொறுமையிழந்து விடுகின்றனர். இத்தகைய பாரதூரமான விளைவுகளைத் தவிர்த்துக் கொள்வது ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வித்துறை ஆசிரியர்கள் தம்மை இற்றைப் படுத்துவதிலும், நவீன தொடர்பாடல் கருவிகளை பயன்படுத்துவதிலும் முன்னிலை பெற வேண்டும். மாணவர் களின் கரங்களுக்கு நவீன தொடர்பாடல் கருவிகள் சரளமாக கிடைப்பதுடன், அவற்றைக் கையாள்வதிலும், தகவல்களை பெறுவதிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். எனவே ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மை விருத்தியில் அதிகளவு அக்கறையை கொண்டிருப்பது அவசிய மாகின்றது. மாணவர்கள் தமது ஆசிரியருக்கு எல்லாம் தெரியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளவர்கள். அவர்களின் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதிலளிப்பதற்கு நவீன தொடர்பாடல் கருவிகளை பயன்படுத்தும் போது ஆசிரியர் மீதான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அதிகரிக்கின்றன. இது வகுப்பறையில் கற்றல் சூழலை பேணுவதற்கு உதவுகின்றன.

தேடல் உள்ள வரை வாழ்வில் சுகமிருக்கும் என்பது சமகால ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் பொருந்தும். பாடரீதியாக புதுப்புது விடயங்களை முன்வைக்கும் போது மாணவர்களின் கவனம் எம்மீது கூடுதலாகும். பெரும்பாலான மாணவர்கள் பாடநூல்களையும் அதிலுள்ள பயிற்சிகளையும் பிரத்தியேக வகுப்புகளிலும், வீடுகளிலும் ஒரு முறைக்கு இரு முறையேனும் முற்கூட்டியே செய்து விட்டு விருகின்றனர். எனவே மீண்டும் அதே பயிற்சிகளையும் பாட விளக்கங்களையும் வழங்கும்போது சலிப்புத் தன்மையை மாணவர்கள் எதிர்நோக்குகின்றனர். எனவே புதிய பயிற்சிகளையும், புதிய விடயங்களையும் கொண்ட செயற்பாடுகளுக்கு மாணவர்களை உட்படுத்துகையில் வகுப்பறையின் கற்றல் சூழல் உயிர்ப்புள்ளதாக அமையும். தமிழ்பாட நூலில் இடம் பெற்றுள்ள மகாபாரத, இராமயண, மற்றும் ஏனைய வரலாற்றுத் தொடர்புடைய பாடங்களின்போது மேலதிக விளக்கங்களை தகவல்களை வழங்குவதற்கு முன்வருதல் அவசியமாகும். அதே போன்று சுற்றாடல் சார் செயற்பாடுகளில் தமது சூழலை நன்கு அவதானிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பது கற்பித்தலை இலகு படுத்துவதாக அமையும். பிள்ளை வாழும் சூழலையும், அவற்றிலுள்ள வரலாற்றுத் தகவல்களையும், சிறப்புக்களை யும் அறிந்து கொள்வதற்குரிய வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்குவதனை பிரதான மாகக் கொண்டிருக்க வேண்டும். வர்த்தக நோக்கிலான வெளியீடுகளில் ஆசிரியர்கள் தங்கியிருப்பதுடன், மாணவர்களையும் அதற்கு ஆளாக்குவது வரவேற்கத் தக்கதன்று. சுற்றாடல் சார் செயற்பாடுகளுக்கு என பாடநூல் வழங்கப்படாததன் நோக்கத்தை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் புரிந்து செயற்படுவது தேசிய கல்விக் கொள்கையையும், குறிக்கோள்களையும் மதிப்பதாக அமையும்.

அன்றாட வாழ்வியலுடன் மாணவர்களின் கற்றலை தொடர்பு படுத்திக் கொடுப்பதும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பெரும்பணிகளில் ஒன்றாகும். பாட நூலிலும், ஆசிரியர் கைந்நூலிலும் உள்ள பயிற்சிகள், செயற்பாடுகள் போன்றவை நாளாந்த வாழ்வில் எவ்வாறு தொடர்பு பட்டுள்ளன என்பதை ஆசிரியர்கள் அவதானித்து மாணவர் களுக்கு முன்வைத்து விளக்கமளிக்கும்போது சுவாரசியமான கற்றலை மாணவர்கள் எதிர் கொள்வார்கள். அதே போன்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இடம்பெற்ற விடயங்களை பொருத்தமான முறையில் உதாரணங்களாக முன்வைத்து விளக்கமளிக்கும் போக்கினை ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பின்பற்றுவதும் அவசியமாகும். மாணவர்கள் இவ்விடயங்களை அறிந்து வகுப்பறைகளில் முன்வைக்கும் போது ஆசிரியர்கள் அவற்றை செம்மைப்படுத்தவும் இது அவசியமாகின்றன.

அவதானியுங்கள் எனக்கூறும் ஆசிரியர்கள் எவ்வாறு, எதனை அவதானிக்க வேண்டும் என்பதை மாணவர்களிடம் கலந்துரையாடுவது நன்று. இதனால் மாணவர் களுக்கு முழுமையான தெளிவும், விளக்கமும் கிடைக்க வாய்ப்பேற்படும். இதனோடி ணைந்ததாக மனதை ஒரு நிலைப்படுத்தும் எளிய செயற்பாடுகளில் மாணவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்திய பின்னர் ஒவ்வொரு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினையும் முன்னெடுப்பது ஒப்பீட்டளவில் அதிக பலனைத் தரும்.

இறுதியாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பாணி, பாட பரப்பிலான அறிவு மற்றும் தேர்ச்சி, மாணவர்களின் நன்மதிப்பு போன்ற விடயங்களில் சுயமதிப்பீடும், விமர்சனமும் மேற்கொள்வது தமது பணிகளை மேம்படுதிக் கொள்வதற்குரிய சந்தர்ப்ப மாகவும் வாய்ப்பாகவும் அமையும். ஒவ்வொரு ஆரம்பக் கல்வி ஆசிரியரும் தான் சார்ந்த சமய, ஆன்மீக மற்றும் சமூக கலாசார விழுமிய பண்புகளின் அடிப்படையில் இச்சுய மதிப்பீட்டையும் விமர்சனத்தையும் மேற்கொள்கையில் அறிவாற்றலும், சமூக நேயமும் கொண்ட பிரசைகளை உருவாக்கி புதியதோர் மறுமலர்ச்சிக்கு வழிகோலுவதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வித்தாக அமைய வேண்டும் என்பதே தேசத்தின் எதிர்பார்ப்பாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் பண்பில் விழுமியத்தின் அவசியம்

R. W. U. L. R. CLEMEND
MAHO/GL/ GALGAMUWA MODEL M.M.V
GALGAMUWA

இன்றைய சமுதாயமானது நாளாந்தம் பல்வேறு புதுப்புது சவால்களை எதிர்கொண்டதாகவே காணப்படுகின்றது. பெருகிச் செல்லும் சமூக சீர்கேடுகளானது மனித மாண்பை, மானிட நேயத்தை சீரழிக்கின்றது. குற்றச்செயல்கள், ஊழல்மோசடிகள், பாலியல் துர்நடத்தை, சுயநலப்போக்கு, இறையச்சமின்மை, போதைப்பொருள், ஆன்மீகம் மறக்கப்படல். நவீன விஞ்ஞான வளர்ச்சிகளின் மாற்றம், தொழில்நுட்பம் என்பன சமூகத்தை ஆட்டம் காணும் மாற்றங்களாக வழிபடுத்தி செல்கின்றது என பல கல்விமான்களும் மதத்தலைவர்களும் அங்கலாயிருக்கிறனர்.

குடும்பம், சமய நிறுவனம் என்பவற்றிற்கு அப்பால் கல்வி நிறுவனம் மாணவரின் ஆளுமையில், நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும் பாரிய பொறுப்பினை வகிக்கும் வகிபாகமாக இன்று மாறி நிற்கிறது. மாணவர் மத்தியில் விழுமியப் பண்பினை வளர்க்கும் அடித்தளமாக கல்வி நிறுவனங்கள் மாற வேண்டிய கடப்பாடு இன்று அதிகம் தேவைப்படுகின்றது. போட்டிமய வேலை உலகில் அறிவினைத் தேடும் சமூகம், அந்த அறிவின் மூலம் ஏற்பட வேண்டிய நல்ல நடத்தையை விலக்கிச் செல்லும் காலமாக இன்று மாறியுள்ளது. சுயநலம் ஓங்கி, விழுமியம், சீரற்று செல்லும் போக்கு காணப்படுவதாக சமூகம் அங்கலாய்கின்றது.

மாணவர் மத்தியில் நற்பண்புகளை வளர்க்க விழுமியமும் ஆன்மீகமும் வளர்க்கப்பட வேண்டிய தேவை இன்று அதிகரித்துள்ளது. சமயம் கூறும் போதனைகளை கடைப்பிடித்து வாழ்வது ஆன்மீகமாகும். இறைவனை வழிபட தெய்வப் பயம் வேண்டும். "தெய்வ பயமே ஞானத்தின் தொடக்கம்" என திருவிலிய ஞான நூல் கூறுகிறது. இன்று சமயக் கல்வியானது பரீட்சையை நோக்கியே செல்வதையே காணக் கூடியதாக இருக்கின்றது. நாளாந்தம் போதிக்கப்பட வேண்டிய சமய பாடமானது மட்டுப்படுத்தப் பட்ட பாடவேளையுமாக பரீட்சையில் புள்ளி பெறும் பாடமாக வழிப்படுத்தி இருப்பது வேதனையாக விடயமாகும். கடவுளுக்கு பயந்து நடக்கும் எவனும் விழுமியம் தவறமாட்டான்.

லோரன்ஸ் கொல்பேர்க்கின் - நன்னெறிக்கொள்கையில் "நன்னெறி வளர்ச்சி என்பது எந்தெந்த விழுமியங்கள் ஒருவரின் நடத்தையை நெறிப்படுத்துகின்றது என்பதை காட்டி நிற்கிறது" மனித உரிமை, நீதி என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கும் இவர் விழுமியங்கள் சீர்மை செய்யப்படும் போதே ஒருவரால் இதை பற்றிக்கொள்ள முடியும் என்கின்றார். அதற்கு முன்மாதிரி தேவை எனவும் எடுத்தியம்புகின்றார். அதற்கான மாதிரியாக மாணவர் முன் ஆசிரியரின் விழுமிய நடத்தைகள் மாணவரின் விம்பங்களாக பிரதிபலிக்க வேண்டும். பிள்ளை தன் சூழலில் காண்பதையே கற்றுக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வை வளமானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் வாழ வைப்பதற்கு மனித விழுமியம், அறக்கருத்துக்கள் வழிசெய்யும். விழுமியமானது தனி மற்றும் சமூக வாழ்விற்கு இன்றியமையாதது. பிறப்பு முதல் இறப்பு வரை எம்முடன் பயணிக்கும் அன்பு, பரிவு, இரக்கம், நேர்மை, ஒழுக்கம், அகிம்சை, சமூக பண்புகள் என பல தொடர்கின்றன. "கல்வியானது நல்ல மனிதர்களை உருவாக்குவது மட்டுமல்லாது நல்ல முறையில் செயலாற்றவும் முடிகின்றது" எனும் கிரேக்க மெய்யியலாளர் பிளேட்டோவின் கூற்றானது விழுமிய பண்பினை வளர்ப்பதில் அதனைக் கோட்பாடு ரீதியாக, செயற்பாட்டு வழியாக வழங்குவதில் பாடசாலையின் வகிபாங்கு முக்கியமானதொன்றாகும்.

"மாணவர்களே நாளைய சமூகத்தை ஆளப் போகிறார்கள்" எனும் உண்மையின் அடிப்படையில் வாழ்க்கைக்குரிய பண்பினை வழங்கும் தளமாக அது உயர வேண்டும். அங்கு உள்ள ஆசிரியர்களே அவர்களுக்கு எல்லாம் ஆகி விடுவதனால் "ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது" என்பதற்கு இணங்க செயல்முறை மாற்றத்தை ஏற்படுத்தும் பங்காளர் களாக ஆசிரியர்கள் மாற வேண்டும். தற்கால மனித உள்ளங்களை தொழில்நுட்பம் தன்வசப்படுத்தி இருக்கும் வேளையில் மாணவர்களை விழுமியத்தில் பேணிக்காப்பது கடினமான செயல் என்ற கருத்துக்கள் காணப்பட்டாலும் இப்பணியினை ஆக்கபூர்வமாக, முழுமையாக, கட்டுப்பாட்டுடன் வழங்கும் நிறுவனமாக, அதிகார மையமாக காணப்படும் இடம் பாடசாலையாகும். எனவே மாணவர்கள் சமுதாயத்திற்கு நுளையமுன் வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் பாடசாலை விழுமியக்கல்விக்குண்டு.

கல்வி புலத்திலே "குருகுலம்" சென்று கற்ற காலத்தில் சீர் மயமான பண்புகள், விழுமிய நெறிகளை வாழ்வில் பேணும், குரு மாத்திரமே தெய்வ வாக்காக செயற்பட்டனர். நாகரீக மாற்றத்துடன், வளர்ச்சிப்போக்கான இவ்வுலக சமூக கட்டமைப்பில் தொழில் நுட்பத்தையும் மறுக்கமுடியாத நிலையில் ஊடக தாக்கம் மாணவர்களை அலைக்கழிப் பதையும், அதற்கு அடிமையான ஓர் மாணவர் சமூகத்தையும் கண்முன்னே காட்சி காண்கின்றோம். இந்நிலையில் விழுமியம் பேணி தான் சார்ந்த சமூகம், மொழி, மதம், கலாச்சாரத்தைப் பேண விழுமியமானது பாடசாலை ஊடாக பேணிக் காக்கப்பட வேண்டும். இன்று மாணவர் வாழ்வானது முற்றாக மாற்றமடைந்துள்ளது. எல்லோருக்கும் எல்லாம் அமைவதில்லை. குடும்பம், வறுமை, பெற்றோர் இழப்பு, இணையம், தகாத நண்பர்கூட்டம், வழிகாட்டலின்மை, ஆலோசனைகள் வழங்கப்படாமை, புறக்கணிப்பு, தனிமையுணர்வு, ஒய்வின்மை, தனியார் வகுப்பு என பலவும் மாணவனின் நன்னெறியை புரட்டி செல்கின்றது. இவ்வாறான ஒரு நிலையில் எல்லாம் என நாடிவரும் ஓர் இடம் பாடசாலையும் ஆசிரியரும் ஆவார். இந்நிலையில் அவர்கள் வரவேற்பது பாடசாலை சமூகத்தின் பாரிய பணியாகும். மாறாக இந்நிலை தடம்மாறும் போது போதைப்பொருள், துஷ்பிரயோகம், வன்முறை என நெறி தவறிட நேரிடும். எனவே ஒவ்வொரு பாடசாலை கட்டமைப்பும் மாணவர் சமூகத்தை பாதுகாக்கும் நோக்கில் தம் மாணவர் சிறந்த நட்பிரஜையாக உருவாக்கும் இலட்சியத்துடன் செயல்பட வேண்டும்.

ஒருவரிடம் நல்ல விரும்பிய பண்பு காணப்படாது, அவர் எவ்வளவு கற்றவராக இருந்தாலும். அது வெற்றுக்காகிதமே, நெறிபிறழ்வானவர்களை நல்வழிப்படுத்தி ஊக்குவிப்புக்களை வழங்கி, ஆபத்துக்ளை உணர்த்தி கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து நல்வழிப்படுத்த வேண்டும். நல்ல பண்புள்ளோரையே உலகம் வாழ்த்தும். ஒழுக்கம் இல்லா கல்வி ஆன்மா இல்லாத உடலை போன்றது. இன்றும் உலகம் போற்றும் பல மேதைகள் மகான்களாக உள்ளத்தில் நிலைத்திருக்க அவர்களின் நன்னடத்தைகளே காரணம். அன்னை தெரேசா, டாக்டர் அப்துல் கலாம், நெல்சன் மண்டேலா போன்ற வாழ்நாள் மேதைகள் அவர்களின் நன்னெறி மூலம் உலகில் நிலைத்திருப்பவர்களே.

திருவிவிலியமும், வேத ஆகமங்களும், திருக்குரானும், திரிபீடநூல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறிகளின் வடிவங்களே, பல்லின சமூகப் பரப்பில் வாழும் நாம் தாம் பிறந்த, பின்பற்றுகின்ற சமய நெறிகளை பின்பற்றி வாழ்ந்தாலே விழுமியம் என்பது வாழ்நாள் செயலாகிவிடும். மாற்றமுறும் கலைத்திட்டமானது தரம் ஒன்று முதலே விழுமியத்துக்கு முன்னுரிமை கொடுப்பது சறுக்கி நிற்கும் மாணவர் சமூகத்தை தூக்கி நிலை நிறுத்தும் என நம்புவோம். தமிழ் பேசும் இலக்கிய நூல்களும் அறம் கூற தவறவில்லை.

"மனிதன் தானாகவே தவறு செய்வதில்லை, சரி எது - பிழை எது என தெரியாமலேயே தவறுக்கு காரணம் ஆகின்றான்" என சாக்ரடீஸ் கூறுகின்றார். எனவே ஒழுக்க விழுமிய அறக் கருத்துக்ளை கூறி மாணவர் சமூகம் நற்பிரஜையாக உருவாக்க பாடசாலை கல்வி வழியமைக்க வேண்டும். இப்பணி ஆசிரியர் - அதிபர் - பாடசாலை சமூகம் சார்ந்த கடமையாகும்.

இந்த வகையிலேயே தன் கல்வி பணியை வாழ்நாள் பூராகவும் தொடர்ந்து தான் வாழ்ந்த சமூக மாணவர்களிடையேயும், கல்விப்புலத்தோரிடமும் ஓர் அற்புத ஆளுமை மிக்க ஆசானாக திகழ்ந்து, எம்மை கல்வியாளராக உயர்த்திய எம் ஒவ்வொருவர் உள்ளத்தையும் ஆழ்மனம் வரை சென்று தொட்டுணர்ந்த எம் அன்பின் உளவியல் ஆசானாகிய திரு. Ve. அருணாகரன் ஐயாவிற்கு சமர்ப்பிக்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் கல்வி சீர்திருத்த உருமாற்ற முன்மொழிவுகள்

இராசையா இராஜகுமாரன்,
பகுதித்தலைவர்,
பெரிய கல்லாறு மத்தியமகா வித்தியாலயம், கல்லாறு.

ஒரு நாட்டின் ஆரோக்கியமான கல்விக்கு கலைத்திட்ட சீர்திருத்தங்கள் அவசியமானதாகும். இலங்கையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபாரிசின் படி ஒவ்வொரு 8 வருடத்திற்கு ஒருமுறை கலைத்திட்ட சீர்திருத்தம் நடைபெற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் இறுதியாக நடந்த கலைத்திட்ட சீராக்கம் 2016 ஆகும். புதிய கலைத்திட்ட 2023 ஆம் ஆண்டு அமுல் படுத்த திட்டமிடப்பட்டது. அக்கால வேளையில் ஏற்பட்ட பெரும் தொற்றுநோய், எரிபொருள் நெருக்கடி, பொருளாதார பிரச்சினை மற்றும் அரசியல் குழப்ப நிலை காரணமாக நடைமுறைப் படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் புதிய கலைத் திட்ட சீராக்கமானது அமுல் படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதற்கேற்ப 2025 ஆம் ஆண்டில் புதிய கல்வி சீர்திருத்தங்களின் சில உருமாற்ற செயல்முறைகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்கள் தற்போது வெளியாகி உள்ளது.

### இலக்கு

தேசிய பொருளாதார சமூக அபிவிருத்தியை விரைவுப்படுத்துவதற்காக கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றளித்தல், ஆளுகை, முதலீடுகள், வளங்கள் ஆகியவற்றிற்கான ஏழுகளங்களுக்குரியஏழு முறைசார் மாற்றங்கள் ஊடாக கல்வி முறையை அணுகி, அதனூடாக தரம், பொருத்தமான தன்மை, தகவல் தொழில்நுட்ப (டிஜிட்டல்)மாற்றத்தை நிலையாக மேம்படுத்தல்.இவற்றை அடைய ஆறு பிரதான குறிக்கோள்கள் இனங்காணப்பட்டுள்ளது.

### கல்வி உருமாற்ற கொள்கை

செயற்கை நுண்ணறிவு(A I) காலநிலை மாற்றம் உள்நாட்டு பூகோள சமூக பொருளாதார யதார்த்தங்கள் மற்றும் கல்வியில் அவற்றின் தாக்கங்கள் உள்ளடங்களாக வளர்ந்து வரும் தொழில்நுட்பம் பற்றிய புரிதலை கல்வியூடாக வழங்குதல். இவை ஏழுஉருவாக்கல்

- பிரயோகித்தல்
- பேணிவளர்த்தல் என்ற ரீதியில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 10 வரை செயற்படுத்தப்படும்.

### எதிர்பாக்கப்படும் பிரதான மாற்றம்

1. ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி
2. பொதுக் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3. மூன்றாம் நிலைக்கல்வி*

*4. முழுமையாக அனைத்து கல்வி துறைகளிலும்*

**புதிய கல்விக் கொள்கையில் அத்தியாவசியமான மூன்று களங்கள் உள்ளன**

*1. கற்பித்தல் கற்றல் மற்றும் நற்சான்றளித்தல் களம்.*

*2. ஆளுகை களம்.*

*3. முதலீடுகள் மற்றும் வளங்கள் களம்.*

*இவ் மூன்று களங்களின் ஊடாக 41 மாற்றங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.*

**பாடசாலை கல்வி கட்டமைப்பு மாற்றங்கள்**

*கல்வி உருமாற்ற செயன்முறையில், வகுப்புகள் ஆண்டு என பெயரிட்டு அழைக்கப்படலாம். பாடசாலைக்கல்வியில் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் 2033 ஆம் ஆண்டு வரை, தடையற்ற கல்விக் கட்டமைப்பில் நடைமுறை முன்மொழிவில் உள்ளடங்குபவையில் சில முக்கிய விடயங்கள்.*

*1 இளம் பிள்ளைப் பருவ கல்வி ISCED - 0*

*இக்கல்வி வழங்களில் பிள்ளையின் வாழ்க்கை திறன்களுக்கு முக்கியத்துவம் வழக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ப அழகியலும் படைப்பாற்றல் செயற்பாடுகளும் உலகை அறிதல். மொழியும் எழுத்தறிவும், மோட்டார் திறன் அபிவிருத்தி, எண்ணறிவு, சமூக மற்றும் உணர்வுகள் சார் அபிவிருத்தி விடயங்கள் என்பன உள்ளடக்கிய திறன்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்றது.*

*(முன் பிள்ளைப் பருவ கல்வி வழங்கும் ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டியவை)*

*2. ஆரம்பக் கல்வி ISCED - 1*

*(ஆண்டுகள்1 - 5 வரை, கற்க்கும் வயது 5-10)*

*கற்றலில் எழுத்தறிவு, எண்ணறிவு, விமர்சன சிந்தனை மற்றும் சமூக உணர்வுசார் அபிவிருத்திகள், உடன் பிள்ளைக்குத் தேவையான வாழ்க்கைத் திறனை ஆரம்பக் கல்வியில் வழங்க வேண்டும்.*

*இதற்காக நடைமுறைப்படுத்தப்பட உள்ள 8 பாடங்கள்.*

*தாய்மொழி, ஆங்கில மொழி, இரண்டாம் தேசிய மொழி, கணிதம், சமயமும் விழுமியங்களும், விஞ்ஞான தொழில்நுட்ப சுற்றாடல் சார் செயற்பாடுகள், அழகியல், சுகாதாரம் உடற்கல்வியும்.*

*(ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டியவை)*

*3. கனிஷ்ட இரண்டாம் நிலை ISCED - 2*

***(ஆண்டுகள் 6, 7, 8, 9 வரை, வயது10-14)***

*பாடசாலையில் கற்பிக்கும் பாடவிதானத்தில் STEAM உடன் பொது விடயங்களும் பிள்ளையின் வாழ்க்கைக்கு தேவையான அடித்தளங்களும் உள்ளடக்கிய பாடங்கள் அமலாக்கப்படும்.*

*4. சிரேஷ்ட இரண்டாம் நிலை 1ISCED - 3*

*(ஆண்டுகள் 10, 11வரை, O/L வயது14 - 16)*

*தொழிலுக்கு தயாராவதற்கான அடித்தளப் பாடங்கள்*

*தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமயம் விழுமியம், தகவல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பம், வரலாறு ஆகிய ஏழு பாடங்கள் கற்பிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. இதே வேளையில் மாணவர்களுக்கு மூன்று தெரிவிப் பாடங்களுக்கும் வாய்ப்புள்ளதாம்.

(இது வரை வெளியிடப்படவில்லை)

*2026 ஆம் ஆண்டு முதல் சாதாரண பரீட்சை பாடங்களின் எண்ணிக்கை ஏழு என மட்டுப்படுத்தப்படும் போது A>B>C>S என பரீட்சை முடிவுகளின் தரம் வழங்குவது இடைநிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கு பதிலாக G P A என்னும் தரப்புள்ளி(கிரேட் பாயிண்ட் )சராசரி முறை பயன்படுத்தப்படலாம்.*

*5. சிரேஷ்ட இரண்டாம் நிலை 11*

*ISCED -3

*(ஆண்டு 12+, வயது16-18)*

*(சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் அதன் பின்னர் 2027 ஆம் ஆண்டு புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் உயர் பிரிவில் தொடர்ந்து கற்க முடியும்.) உயர் தரத்தில் கல்வி, தொழில் சார் மற்றும் உயர் தொழில்கள் வாழ்க்கைக்கு அடித்தளமாகக் கொண்ட பாடங்கள் வழங்கப்படும்.*

உயர்தரப் பிரிவுகள்

*கலை,அறிவியல், கணிதம், வணிகம், தொழில்நுட்பம் என பல பிரிவுகளில் கல்வி வழங்கப்படுவதோடு குறைந்த செயல் திறன் மட்டங்களில் உள்ளடங்கும் மாணவர்களுக்கு தொழில் முறைக் கல்வி வழங்கப்பட உள்ளது. முழுமையாக கல்வி ஆறு மட்டங்களில் நிறைவடையும் இவற்றினை அவதானிக்கும் போது பாடசாலையில் நான்கு கட்டங்களாக பிரித்து கல்வி தொடராக வழங்கப்பட உள்ளது.*

*பாடசாலை கல்வி 18 வயதில் நிறைவடையும்*

*+கவனத்திற்கு+*

*கற்றல் நிறைவுச் சான்றிதழ் கட்டாயம்*

*நிறைவுச் சான்றிதழ் என்பது 11 ஆண்டில் அல்லது 12 பிளஸ் ஆண்டில் நிறைவு செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் அந்த ஆண்டுகளில் பாடசாலைகளில் அவர்களின் கற்றலில் முழு அளவையும் உள்ளடக்கி வழங்கப்படும் சான்றிதழ் ஆகும்.*

*சாதாரண தரப்பரீட்சை, உயர்தர பரீட்சைக்கு NVQ மட்டங்கள் பெற முடியும்.*

*மாணவர்கள் ஆரம்ப, கனிஷ்ட,இரண்டாம் நிலை மற்றும் சிரேஷ்ட இரண்டாம் நிலை முடிவில் இரண்டு தேசிய மொழிகளிலும் (தமிழ்,சிங்களம்) இரண்டாம் மொழி, (ஆங்கிலம்) கணிதம். தகவல் தொழில்நுட்ப பாடம் ஆகியவற்றில் குறைந்தபட்ச தேர்ச்சியை பெற்று இருத்தல் வேண்டும்.*

*போதனா மொழியுடன் ஆங்கில மொழி மூலம் சில பாடங்கள் கற்க முடியும்.*

*சமய பாடத்துக்கு பதிலாக சமயமும் விழுமியமும் என்ற பாடம் அறிமுகம் செய்யப்படுகின்றது. கல்வியிலும் பாடசாலை முறையில் ஏற்பட உள்ள கல்வி சீர்திருத்தத்தை உருமாற்றச் செயன்முறை என அழைக்கப்படுவது பொருத்தமாக சொற்பிரயோகமாக கொள்ளமுடியும். உருமாற்ற செயல்முறையில் உயர் கல்வி வாய்ப்புகள் பல வகையில் திறந்து விடப்பட்டுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

திரு.கயிலாயமூர்த்தி குடும்பம் - கனடா
திரு மோட்சநாதன் குடும்பம் - சுவிஸ்சர்லாந்து
திரு கோகுலகாந்தன் குடும்பம் - ஜேர்மனி
ஆசிச்செய்தி வழங்கியோர்
வாழ்த்துச் செய்தி வழங்கியோர்
மொழிபெயர்பு செய்தோர்
தட்டச்சு செய்தோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Baranee Printers, Nelliady. Tel: 0775991949

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org